# சோழவமிச சரித்திரச் சுருக்கம்.

—:(o):—

வெளிவந்த பல சிலா தாம்பிர சாஸனங்களையும்

வெளிவராச் சிலவற்றையும் தழுவி

திருவனந்தபுர ஸமஸ்தானம்

சாஸன பரிசோதகர்

## து. அ. கோபிநாத ராவ், M. A.,

எழுதியது.

"செந்தமிழ்" பிரசுரம்—௨௯.

[இரண்டாம் பதிப்பு.]

தமிழ்ச்சங்க முத்திராசாலை

மதுரை:

**1925.**

*Copyright Registered.*



பூவுலகு போற்றப் புகழ்ச்சோழர் தஞ்சரிதம்
காவலர்க ளுண்மகிழ நல்கினான் — மேயநற்
சிற்பமிகை சாலைகள் செந்தமிழ்போன் றின்னமைத்தோர்
சற்குணவான் கோபிநா தன்.

# பொருளடக்கம்.

பக்கம்.

ஸ்ரீமாந்: பொ. பாண்டித்துரைத்தேவரவர்கள் எழுதிய முகவுரை.

நூன்முகம்:— ... .... ... 1.

முதல் அதிகாரம்:—சோழர்களின் பழமை ... 3.

இரண்டாம் அதிகாரம்:—விஜயாலயன், முதல் ஆதித்தன் I இவர்கள் ஆட்சி. ... ... ... 7.

மூன்றாம் அதிகாரம்:—முதற் பராந்தகன் சரித்திரம் ... 8.

நான்காம் அதிகாரம்:—இராஜாதித்தன் சரித்திரம். இட்ட கன்னர தேவன் சூழ்ச்சியும், அவன் ஆதிபத்தியமும். 10.

ஐந்தாம் அதிகாரம்:—சோழர்கள் இட்ட அதிகாரத்தினின்றும் விடுபட்டு இராஜ்யத்தைப் பெருக்குதல் இரண்டாம் பராந்தகன், மதுராந்தகன் I-இவர்கள் ஆட்சி. 11.

ஆறாம் அதிகாரம்:—முதலிராஜராஜன் அரசாட்சி ... 12.

ஏழாம் அதிகாரம்:—இராஜேந்திர சோழதேவன் I. சரித்திரம் 17.

எட்டாம் அதிகாரம்:—இராஜாதிராஜன் I. சரித்திரம் 19.

ஒன்பதாவது அதிகாரம்:—விஜயராஜேந்திர தேவன், இராஜமகேந்திரன்—இவர்கள் சரித்திரம் ... 21.

பத்தாம் அதிகாரம்:—வீரராஜேந்திரன் சரித்திரம் ... 25.

பதினொராம் அதிகாரம்:—அதிராஜேந்திரன், குலோத்துங்க சோழதேவன I. சரித்திரம் .... .... 26.

பன்னிரண்டாம் அதிகாரம்:—விக்கிரமசோழன் ஆட்சி 35.

பதின்மூன்றாம் அதிகாரம்:—இரண்டாங்குலோத்துங்கன், இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் இராஜாதிராஜன்—இவர்கள் சரித்திரம்; பாண்டிநாட்டுப் பட்டத்தைக்குறித்த குழப்பம் ... ... 36.

பதினான்காம் அதிகாரம்:—மூன்றாங் குலோத்துங்கன் ஆட்சி. சோழ இராஜ்யம் சீர்குலைய ஆரம்பித்தல் 41.

பதினைந்தாம் அதிகாரம்:—மூன்றாம் இராஜராஜன் சரித்திரம் இவனுக்கு சேர்ந்த விபத்துக்கள் ... ... 43.

பதினாறாம் அதிகாரம்:—மூன்றாம் இராஜேந்திரன் சரித்திரம்
சோழ இராஜ்யத்தின் இறுதிக்காலம் .... 47.
பதினேழாம் அதிகாரம்:—இராஜாங்க முறைமை ... 48.
சோழசரித்திர விஷய சூசிகை ... ... 73.
வமிச விருக்ஷங்கள் ... ... ... 76.
அநுபந்தம் I. அபிதான விளக்கம் ... ... 80.
ஷை II. மெய்க்கீர்த்திகள் .... ... 85.
பெயரகராதி ... ... ... I.

---

## இச்சரித்திரத்திற் பயின்றுள்ள நூல்கள்.

—(o)—

இராமாயணம் (வால்மீகம்).
அசோகன் சாஸனங்கள்.
கலிங்கத்துப்பரணி.
தேவாரம்.
பெரியதிருமொழி
The Large and the small Leiden grants.
South Indian Inscriptions (S. I. I.) by Dr. E. Hultzscl
Epigraphist's Annual Reports (Ep. An. Rep.)
Epigraphia Indica (Ep. Ind.)
செந்தமிழ்ப்பத்திரிகை.
Epigraphia Carnatica Ep. Carn)
பெரியபுராணம்.
திருவிசைப்பா.
பின்பழகிய ஜீயர் குருபரம்பராபிரபாவம்.
விக்கிரமசோழனுலா.
வீரசோழியம்.
தண்டியலங்காரம்.
கோயிலொழுகு.
Fleet's Dynasties of the Kanarese Districts (Fleet's. Dy Kan. District.)

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

---

உலகத்து, நாகரீகம் வாய்ந்த தேசத்தாரது கொள்கைகளிலே, தம் பூர்வசரித்திரங்களில் அபிமானம்வைத்து அவற்றைப் போற்றிக் கொள்ளுதலும் ஒன்றாகவுள்ளது. கல்வி, வீரம், அரசியல், கொடை முதலிய சிறந்த குணங்களுடன் தம் முன்னோர் ஒழுகிக் காட்டிய உயர்ந்தவழிகளைப் பின்னவர்க்கு நினைப்பூட்டி அவர்களை ஊக்கி நல்வழிப் படுத்துதற்குப் பழைய சரிதங்கள், உற்ற துணையாகின்றன. அதிலும், மாணவரது உற்சாகத்திற்கு இவை பெரிதும் வேண்டற்பாலனவாம். சரித்திர சம்பந்தமான விஷயங்கள் மேனாடுகளில் எவ்வளவு அவாவுடன் படிக்கப்பட்டு வருகின்றன என்பதற்குப் பலவாறாக அந்நாடுகளில் நூல்கள்வெளியாக்கப்பட்டு வருதலே தக்க சான்றாகும். ஆனால், நம் நாட்டை ஆட்சிபுரிந்த பழையவரசர்களிற் பலர் அறிவாண்மைபெருமை களில் இணையற்றவராக விளங்கினும், அவர்களது அருமை பெருமை களை உள்ளவாறே நாம் அறிந்துமகிழ்தற்கு அதிகவிடமில்லாமலிருப்பது பெரிதும் வியசனிக்கத்தக்கது. தமிழ்நாடு சம்பந்தப்பட்ட மட்டில், சேரசோழ பாண்டியர் எத்துணைப் பழமைபெருமை கொண்டவரசர்கள்? இராமாயண பாரதாதி வடநூல்களிலும் அன்னோர் புகழப்பட்டிருக் கின்றனரெனின், அவரது பெருமைக்கு வேறுசான்றும் வேண்டுமோ? ஆயினும், அவரது வரலாறுகளாக நாம் தெரிந்து கொண்டவையோ அதிகமில்லையாகும். தமிழ்நாட்டைப் பல்லாயிரவாண்டுகள் கீர்த்தி யுடன் ஆட்சிபுரிந்த இவ்வரசரது உண்மை வரலாறுகளை நாமும நம்மாணவரும் அறிந்துகொள்ளக் கூடுமாயின், அது நம்மவர்க்குப் பிற சரிதங்களாற் பிறக்கு மின்பத்திலும் பதின்மடங்கு மகிழ்ச்சி விளைக்கத் தடையென்னை? இவ்வாறு, நம்பூர்வசரிதங்கள் நமக்குத் தெரியவாராமைக்கு நம்மவரது ஊக்கமு முழைப்புமின்மையே முக்கிய மது என்றுசொல்லத் தடையில்லை. சரித்திர மெழுதப்படுவதற்கு ஏற்ற சாதனங்கள் நாட்டிற்கிடைப்பதரிது என்று அடிக்கடி சொல்லப் படுவதுண்டு. இதில் ஒருபாக முண்மையுமுண்டேனும், நாட்டின் மறைந்து கிடக்கும் எத்தனையோ கருவிகள் வெளிவாராமைக்கு நம்மவரது ஊக்கக் குறைவையே முக்கியகாரணமாகச் சொல்லல் தகும்.

இதுபற்றியே உள்ள விஷயங்களும் வெளிவந்து பிரகாசிக்க இடமில்லாமற் போயிற்று.

இங்ஙனம், நாகரீகம் பெற்ற ஒருநாட்டார் தம் பூர்வசரித்திரத்தைத் தவறவிடுவது, அவர், தமது பெருமையை இழந்ததாக முடியுமேயன்றிப் பிறிதன்று. இவற்றைநோக்கித் தமிழறிஞர் சிலர், பெருங் கவலைகொண்டு உழைத்துளாராயினும், நம்மிற்பலர்க்கு அதன் அருமை இன்னுந் தெரிந்ததில்லையெனலாம். ஆனால், நம் அரசாங்கத்தார், பழைய சரித்திரங்களைப் போற்றிவைத்தற்குச் செய்திருக்கும் சிறந்தமுறைகளே, மேற்கூறிய குறைகளை இப்போது ஒருவாறு நீக்கி வருகின்றன. இதன்பொருட்டு அரசாங்கத்தார்க்கு நம்மவர் பெரிதும் நன்றியறிதற் கடப்பாடுடையராவர்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் தொடங்கப்பெற்ற காலத்தே, தமிழ்நாடு சம்பந்தப்பட்ட உண்மைச்சரிதங்களை நம்மவர் நன்கறியும்படி செய்வது, சங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. அங்ஙனமே அச்சங்கத்துச் "செந்தமிழ்"ப் பத்திரிகையில் அரிய சரித்திர விஷயங்களும், சாஸனங்களும் தக்க அறிஞர்களால் கண்டெழுதப்பட்டு, ஆதிமுதலே வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவற்றிற் பல, தமிழ்மக்களது உவப்புக்கும் வியப்புக்கும் உரிய வென்பதில் ஐயமில்லை. இத்தகைய அரிய வியாசங்களைத் தமிழபிமானத்தோடு முக்கியமாக எழுதிவருபவர்களில்—இப்போது திருவனந்தபுர ஸம்ஸ்தானத்துச் சிலாசாஸன பரிசோதக அத்யக்ஷராயுள்ள ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராயரவர்களு மொருவர். இராயரவர்கள் எழுதியவற்றில் சோழவமிசத்தைப்பற்றி அவர்கள் தொடர்ச்சியாகச் செந்தமிழில் வெளியிட்டுவந்த வியாசம், பற்பல தமிழிலக்கியங்களினின்றும் எண்ணிறந்த சாஸனங்களினின்றும் பிற பல நூல்களினின்றும் திரட்டிப் பேராராய்ச்சிகாட்டி எழுதப்பெற்றதாம். இச்சரித்திரம் பண்டைச் சோழரது வீரம், நியாயம், தியாகம் முதலிய அருங்குணங்களையும் அவர்கள் தமிழ்வளர்த்த திறத்தையும் மற்றும்பல வரலாறுகளையும், தக்க ஆதாரங்களுடனும் காலவரையறைகளுடனும் நன்குவிளக்கிச் செல்கின்றது. சோழர் காலத்திருந்த தமிழ்நாட்டினிலைமை இத்தகைத்தென்பது, இதனிடை வெள்ளிடை மலைபோல் விளங்கக் காணலாம்.

இச் சோழசரித்திரத்தைக் கனந்தங்கிய சென்னைச் சர்வகலா சங்கத்தாரும் நன்குமதித்து, நம் மாணவர்க்கு உபயோகமாம்படி இதனை 1912-ம் வருஷத்து **B. A.** வகுப்புப் பாடமாக நியமித்திருத்தற்குப் பெரிதும் மகிழ்வடைகின்றேன். அச்சங்கத்தார் கருதியவாறே, மாணவர்க்குத் தம் நாட்டுப் பூர்வசரித்திரத்தின் ஒரு பகுதியை இந்நூல் நன்குவிளக்கி மகிழ்விப்பதோடு இராயரவர்களை இத்தகைய முயற்சியிற் பின்னும் ஊக்கிவிடுதற்கு இது தக்கதூண்டுதலாகு மென்பதுந் திண்ணம்.

இராயரவர்கள் எழுதிய இந்நூல் சோழவரசர்கள் சரித்திர மெல்லாவற்றையும் ஒருங்குகூறிவிட்டதென்று சொல்லுதல் இயலாது. நாட்டில் ஆங்காங்குக் கிடைத்த சாதனங்களைக்கொண்டே இச்சரிதம் எழுதப் பட்டதாகலின், இனிக்கிடைப்பனவற்றாற் குற்றங்குறைபாடுகள் இதனிடைத் தோன்றவும், சிற்சிலவிடங்களில் அபிப்பிராயபேதங்கள் நிகழவுங் கூடும். உலகத்துச் சரித்திரசம்பந்தமான நூல்கள் பெரும்பாலவும், முன் குறைவுடையனவாகக் கருதப்பட்டுக் காலாந்தரத்தில் நிறைவடைந்தனவேயாம். ஆதலால் தமிழ்நாட்டாராகிய நம்மவர்க்குப் புதிதான துறையொன்றிற் புகுந்து இராயரவர்கள் சிரமமெடுத்திருப்பதை நோக்குமிடத்து, இந்நூலில் யாவர்க்கும் அருமைப்பாடே தோன்றுமென்பதில் ஐயமில்லை. இவற்றைச் சிந்தைவைத்து, இராயரவர்களை மேலும் இத்துறையில் ஊக்குவோமாயின், அவர்களாராய்ச்சியால் பண்டைச் சோழபாண்டியர் வரலாறுகளும் பிறவும் வெளிவந்து தமிழின் பெருமையைச் சிறப்பிக்குமென்பது திண்ணம்.

இத்தகைய அரும்பெருமுயற்சிகொண்டு இச்சோழசரித்திர வழுவற நம் தமிழுலகத்திற்கூட்டிக் களிப்பித்த இராயரவர்கட்கு நீடிய ஆயுளையும், தக்க அறிவாற்றல்களையும் தந்தருள எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளின் றிருவருளைச் சிந்தியாநிற்கும்,

மதுரைத்தமிழ்ச்சங்கம்.
6—2—10.

பொ. பாண்டித்துரை.

ஸ்ரீ:

# நூலாசிரியர் வரலாறு.

—(o)—

*பண்டையோர் வாழ்ந்த பரிசதனைச் சாதனத்தாற்*
*கண்டுலகோர் மெச்சக் கணித்துரைத்த—பண்டிதனுங்*
*கோதற்ற கட்டமுகன் கோபிநா தன்குணங்கள்*
*ஓதற் குரித்திவ் வுலகு.*


இந்நூலின் ஆசிரியராகிய ஸ்ரீமான். கோபிநாதராயரவர்கள், தம் பூதவுடம்பினின்றும் நீங்கிச் சிலவாண்டுகளாயினும் புகழுடம்போடு நம் முன் நிற்குந் தென்னாட்டு உத்தம மக்களுள் ஒருவராய் விளங்குகின்றார்கள். பண்டையோர் சரித்திரங்கள் பலவற்றைக் கண்டெழுதி வந்த உபகாரியாகிய இவரது குணவிசேடங்கள், நம்மவரால் அறிந்து கொள்ளத்தக்கனவாதலால், இவரது வாழ்க்கைபற்றித் தெரிந்த செய்திகளை ஈண்டுக் குறிப்பிடுவேன்.

சோழமண்டலத்தைச் சார்ந்த துறையூரினின்றும் ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் வந்து வசித்த மகாராஷ்டிர மாத்துவப்பிராமணரது உயர்ந்த குடும்பமொன்றில், இவர் 1872-ம் வருஷம் பிறந்தவர். திருச்சிராப்பள்ளியிலுள்ள ஆங்கிலக் கல்லூரியிற் கல்விபயின்று இளவயதில் பி.ஏ., பரீக்ஷையிற்றேறிப் பின் இரசாயனசாஸ்திரத்தில் (Chemistry) எம்.ஏ., என்ற பெரும் பட்டத்தை 1899-ம் ஆண்டிற் பெற்றார். தாம் கற்றுத்தேறிய கலையுணர்வோடு, ஓவியத்துறையிலும் அதிபாலியத்தே இவர்க்குச் சிறந்த பயிற்சி அமைந்திருந்தது. அக்காலத்தே இவரெழுதிய அழகான வர்ணசித்திரமொன்றன் சிறப்பைநோக்கி, அத்துறைவல்ல சபையாரால் இவர்க்குப் பொற்பதக்கமொன்று பரிசளிக்கப்பட்டது. அங்ஙனம் மதிக்கப்பெற்ற சித்திரப்படம், சென்னைக் கண்காட்சிச் சாலையுள் இப்போதும் யாவருங் காண வைக்கப்பட்டுள்ளது. இக்கலைவன்மைகளுடன், சாஸனபரிசோதனைத்திறம் இவர்க்கு மூன்றாவதாக அமைந்த சிறப்பாகும். அறிவாகிய கடலில் தம் ஆயுண்முழுதுந் திளைத்தாடுதற்கு இவர் கையாண்ட துறை, இச் சரித்திர வாராய்ச்சியாகவே இருக்

தது. இத்துறையில் இவர்க்கு இயற்கையாகவே அவா மிகுந்திருந்தமையால், அதற்கேற்ற களமாகிய இராஜாங்க சாஸனவிலாகாவில், 1902 ம் ஆண்டு ஓர் உத்தியோகத்தில் அமர்ந்தனர். ஆனால் அதனை இவர் நெடுங்காலம் வகிக்க விரும்பவில்லை. உற்சாகமிகுதியும் உழைப்புமுள்ள இளைஞராயிருந்தமையின், அவ்வுத்தியோகத்தினின்றும் விலகித் தம் சொந்தத்துறையாகவே சாஸனபரிசோதனையை நடத்தலானார். அதற்காகத் தங் கைப்பொருளையும் பொருளாகக் கருதாமல் நாட்டின் பலபாகங்கட்குஞ் சென்று, பிறர் காணாத சாஸனங்களைத் துருவிக்கண்டு சரித்திர நுட்பங்கள் பலவற்றை வெளியிட்டுவந்தனர். ஆங்கிலபாஷையில் மட்டுமன்றித் தாம் பிறந்துவளர்ந்த தமிழ்நாட்டவர்க்கு உபகாரமாகத் தமிழிலும் அரியவியாசங்களெழுதிச் செந்தமிழ்ப்பத்திரிகைவாயிலாக உதவினர். இவர் எழுதிப்போந்த ஆராய்ச்சிகள், அப்பத்திரிகையின் பல தொகுதிகளையும் சிறப்பித்துள்ளமை தமிழ்மக்கள் அறிந்ததே. நாட்டில் மறைந்துகிடந்த சாஸனங்களினின்று சரித்திரவிஷயங்களைத் திரட்டியெழுதுவதில், இராயரவர்கட்கிருந்த உற்சாகமும் ஆற்றலும் யாவரும் புகழத்தக்கவை. சாஸனபரிசோதனைக்கென்றே இவர் பிறவியமைந்திருந்தது என்று நாம் சொல்லுதல் புனைந்துரையாகாது. அத்துறைக்கு இன்றியமையாத வடமொழிஞானமும் தமிழ் தெலுங்கு முதலிய தென்னாட்டுமொழிகளில் உணர்ச்சியும் இவர்க்கு வேண்டியவளவுக்குமே இருந்தன. அசோக சக்கரவர்த்திகாலமுதலாகவுள்ள சாஸனங்களின் அக்ஷரதத்துவங்களை இவர்போல அவ்வளவு நுட்பமாகப் பரிசீலனைசெய்த அறிஞர், மிகச் சிலரே என்னலாம். பிறர்க்கு உருத்தெரியவாராத பழஞ்சாஸனத்தை இவர் பார்க்க நேரும்போது, வருத்தமின்றி விரைவாக அதனைப் படித்தறிவதுடன் அதன் எழுத்தமைதிகொண்டே அச்சாஸனம் இன்னகாலத்தது என்று தெளிவாகக் கூறவும் வல்லர். இவர் பெற்றிருந்த சித்திரத்தொழிற் றிறமை, இவரது சரித்திரவாராய்ச்சித் துறையைப் பெரிதும் அலங்கரித்துநின்றது. பழைய செய்திகளைக் குறிக்கும் பிரதிமைகளையோ சிலைகளையோ இவர் காணநேரின், அவற்றின் பிரதிகளெடுத்தற்குரிய கருவிகளினுதவியின்றியே உள்ளது உள்ளபடி தங் கையாலெழுதிவிடும் விசித்திரசக்தியுடையவர். புகைப்படம் எடுப்பதிலும் சிறந்த பரிசயம் இராயரவர்கட்கிருந்தது.

1902-ம் வருஷத்தில் திருவனந்தபுர ஸமஸ்தானத்தே சாஸனவிலாகா வொன்று புதியதாக ஏற்படுத்தப்பட்டபோது, அதன் தலைவராக அந்நாட்டரசரால் நம் இராயரவர்கள் நியமிக்கப்பெற்றனர். அவ்வுத்தியோகத்தைத் தம் ஆயுள்முடிவுவரை மிக்க சிரத்தையுடனுந் திறமையுடனும் நிர்வகித்துப் புகழ்பெற்றனர். இக்காலங்களில் இராயரவர்களால் அச்சிறியநாட்டிற் கண்டறியப்பட்ட சிலாதாமிரசாஸனங்களும் சரித்திரவுண்மைகளும் பலவாகும். இப்போதைப்போல மலையாளபாஷை என்று வேறுபட்டிராமல், சில நூற்றாண்டுகட்கு முன்வரை தமிழ்மொழியுந் தமிழெழுத்துக்களுமே அந்நாட்டுக்குரியனவாயிருந்தன என்பதும், அந்நாட்டின் தலைவர்களும் குடிகளும் தமிழ்மக்களின் வேறல்லரென்பதும் பிறவும் இவரால் வெளிப்படுத்தப்பட்ட "திருவாங்கூர்ச் சாஸனத் தொடர்" (Travancore Archaeological Series) என்ற புத்தகத் தொகுதிகளிற் பார்க்கக் காணலாம். பண்டைத் தமிழெழுத்துக்கள் காலந்தோறும் வேறுபட்டு வழங்கிய முறையை விவரப்படங்களுடன் நன்குவிளக்கி இவரால் அந்நூற்றொகுதியில் எழுதப்பெற்ற சிறந்த ஆராய்ச்சியுரை, நம்மவ ரொவ்வொருவரும் அறியும்படி தமிழில் மொழிபெயர்த்தற்குரியது.

இவ்வுத்தியோககாலத்தே சாஸனபரிசோதனையுடன் சிற்பத்துறையிலும் இராயரவர்கள் விசேட ஊக்கமெடுத்து உழைத்துவந்தார்கள். இதன்பொருட்டு வடமொழியிற் கிடைத்தற்கரிய சிற்பநூல்களையும் ஆகமங்களையும் சேகரித்து ஆராய்ச்சிசெய்யலாயினர் இதன் பயனாக 'விக்கிரகதத்துவம்' (Elements of Hindu Ichonography) என்ற பெருநூற்றொகுதிக ளிரண்டு இராயரவர்களால் எழுதி வெளிப்படுத்தப்பட்டன. நம் தேசத்துக் கோயில்களிலுங் கற்கட்டிடங்களிலும் அமைந்த விக்கிரகங்கள் சிலைகள் முதலியவற்றின் சிற்ப தத்துவங்களை, அவற்றின் சரிதக்குறிப்புக்களுடனும் உருவப்படங்களுடனும் பாகுபட விளக்கி இவரால் அழகாகப் பதிப்பிக்கப்பட்ட இந்நூல், உலகமுழுதும் புகழத்தகுஞ் சிறப்புடையதாகும். சிற்பம் சரித்திரம் சித்திரமுதலிய கலைகளில் வல்ல இராயரவர்கள்போலும் சிறப்பியல்புடையார்க்கல்லது இத்தகைய செயலை முடிப்பது இயலாததென்பது திண்ணம். இராயரவர்கள் திருவரங்கத் திருப்பதியிற் பிறந்து வளர்ந்தவராதலால்



இராஜ்யங்களின் நிலைகளை
காட்டும் படம்.

யெனும் ஒருவாறு அறிந்திருத்தல் நலமென்று கருதி, சோழசரித்திரத்தை என்னாலியன்றமட்டும் தொடர்ச்சியாக எழுதத்துணிந்தேன்.

இவ்வாறு நான் எழுதக்காரணமாயிருந்தது, மகாமகோபாத்தியாயர் ஸ்ரீமத்-சாமிநாத ஐயரவர்கள் தூண்டுதலே. ஐயரவர்கள் சென்ற வருடம் மூவருலாக்களைப் பதிப்பிக்க முயன்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது அவ்வுலாக்களின் நாயகர்களாகிய சோழவரசர் மூவரது சரித்திரமும் விளங்கும்படி ஓர் சிறுவியாசம் எழுதிக்கொடுக்கக் கட்டளையிட்டனர். அக்கட்டளையைச்சிரமேற்கொண்டு சோழவமிச சரித்திர முழுதுமெழுதின், உலாக்களில் வருணிக்கப்படும் சோழர்களின்சரித்திரம் நன்கு புலப்படுமென்று சென்றவருடமே எழுதிமுடித்தும் இதுகாறும் அச்சிற்குக்கொண்டுவரமுடியாமற் சிற்சில இடையூறுகள் நேர்ந்தன. இச்சரித்திரத்தை, மதுரைத்தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந். பாண்டித்துரைத்தேவரவர்கள், இதற்குத் தாங்களே ஒரு முகவுரையெழுதி, தமிழ்ச்சங்கத்தில் பதிப்பிப்பதாய் வாக்களித்தார்கள். இவ்வாறு ஸ்ரீமாந். தேவரவர்கள் தயவுகூர்ந்து என்னை ஊக்கியதும் ஸ்ரீ ஐயரவர்கள் என்னை இச்சரித்திரமெழுதத் தூண்டியதும் என்னால் எப்பொழுதும் மறவாது பாராட்டத்தக்கன.

(இந்தியதேச சரித்திரம் மிகுதியும் சாஸனங்களைக்கொண்டே எழுத வேண்டியிருத்தலின், இச்சாஸனங்கள் முழுதும் பரிசோதித்து முடிந்தாலன்றிச் சரித்திரங் குறைவற எழுதவியலாது) ஆதலால் இதுகாறும் வெளிவந்த சாஸனங்கள் பலவற்றையும், வெளிவராச் சிலவற்றையும் ஆதாரமாகக்கொண்டு எழுதிய இந்நூலில் குற்றங்குறைகள் பலவாயிருக்கக் கூடுமாதலால், குணமேதேனுமிருப்பின் அதனைமட்டும் ஆன்றோர் கிரகித்துக்கொள்வாராக.

---

து. அ. கோபிநாதராவ்.

திருவல்லிக்கேணி.

*1st May, 1906.*

# நூல்.

## முதல் அதிகாரம்.

---

மிகப்பழைய காலமுதல், தமிழ்நாடு சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தராலாளப்பட்டு வந்தது.* பாரத காலத்தே, அருச்சுனன் தென்னாட்டுக்குவந்து அவ்விடத்தில் இராஜகன்னிகை ஒருத்தியை மணம்புரிந்தனன்; அவளிடம் பிறந்த மக்கள் பாண்டியர்களெனப் பெயர்பெற்றார்கள். பின்பு, கி. மு. 3-ம் நூற்றாண்டில் வடஇந்தியாவை சார்வபௌமசக்ரவர்த்தியாயரசாண்ட பௌத்தவரசனாகிய அசோகமகாராஜன், தமிழ்நாட்டுக்குத் தன்னிருமக்களாகிய சங்கமித்திரையையும், மகேந்திரனையும் அனுப்பி பௌத்தமதத்தைப் பரவச்செய்தனன். இக்காலத்தில் தென்னாட்டைப் பிரபலமாக ஆண்டுவந்தவரசர்கள் சோழர், பாண்டியர், கேரளபுத்திரர்களென்று கூறப்பட்டிருக்கிறது † இப்புராதன காலத்திலேயே, சோழர்கள் மிக்க பராக்கிரமசாலிகளாகவிருந்து, அடிக்கடி சிங்களத்தின்மீது படையெடுத்துச்சென்று அதனைப் பிடித்து, பலநாளும் ஆண்டுவந்ததாகத் தெரியவருகிறது. இந்நூற்றாண்டுகளில், தமிழர்நாகரிகம் ஆரியர்களுடைய நாகரிகத்துக்கு ஒருவாறு சமமாயிருந்ததென்று சொல்லலாம்.

தமிழிலக்கியங்களிற் பற்பல பழையவரசர்கள் வருணிக்கப்பட்டிருக்கின்றனர். புறநானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் முதலியவற்றிற் புகழப்படும் அரசர்களின் சரித்திரம் நன்றாகத் தெரியவரவில்லை.

---

* இராமாயணத்தில் தமிழ்நாட்டு மூவேந்தர்களையும்பற்றி அடியில்வருமாறு பிரஸ்தாபித்திருக்கிறது :—

[illegible] ஸஹா: । நதீம்
கோதாவரீஞ்சைவ ஸர்வமேவாநுபஸ்யத॥ ததைவாந்த்ராம்ஸ்ச
புண்ட்ராம்ஸ்ச சோளாந் பாண்ட்யாந் ஸகேரளாந்॥

(11, 12, XLI, கிஷ்கிந்தாகாண்டம்.)

இந்த சுலோகம், சுக்கிரீவன், வானரசேனைகளை நோக்கித் தெனதேசத்தில் புண்டர, சோழ, பாண்டிய, கேரள தேசங்களில் சீதாபிராட்டியாரைத் தேடச் சொல்லுவதைக் குறிப்பது.

† Rock edicts II & III.

இலக்கியங்களிற் சிறப்பிக்கப்பட்டவரசர்களில் முக்கியமானவர்கள் பெருநற்கிள்ளி, கரிகாலன், கோச்செங்கணான் என்னுமிவ் மூவர்களே. இவர்களுட் கரிகாலன் காவிரியினிருமருங்கும் கரையிடுவித்தான்.* கோச்செங்கணான் என்பவன் முன்ஜன்மத்தில் ஓர் சிலந்திப்பூச்சியாயிருந்தனனென்றும், அப்பொழுது, அப்பூச்சி திருவானைக்காவில் திருவெண்ணாவற் கீழமர்ந்திருந்த சிவபிரானை, சூரிய கிரணங்கள் படாவண்ணம் வலைகள்கட்டிப் பாதுகாக்கும் தொண்டுசெய்து வந்ததென்றும், அதே சிவலிங்கத்தை ஒரு யானையும் வழிபட்டு வந்து, ஒவ்வொரு தினமும் மகாதேவர்மீது சிலந்தி வலைபரப்பியிருப்பதை நீக்கிப் பூசித்துச்செல்வது வழக்கமென்றும், தன் பணிவிடைகளை இரக்கமின்றியழிக்கும் யானையின்மீது சினந்து, சிலந்தி, ஒருநாள் யானையின் துதிக்கையுட் புகுந்து நோவுண்டாக்க, அப்பொழுது யானை அதனைப்பொறுக்க முடியாமல் தும்பிக்கையைக்கீழே அறைந்து தன்னையும், தன்னுட்புகுந்திருந்த சிலந்தியையும் கொன்றதென்றும், இவ்வாறு மரணமடைந்த சிலந்தியே மறுஜன்மத்திற் கோச்செங்கணானகப்பிறந்தது† என்றும் புராணங்கூறும். இவன் "வண்டோரெரிசார்க் கெழில்மாடமெழுபதுசெய் துலகமாண்டா"ன்.‡ அன்றியும் இவன் "விறல்மன்னர் திறலழிய"த் "தனிவேலுய்த்"தவன் எனவும் "தெய்வவாள்வலங் கொண்டவ"§ன் எனவும் கூறப்படுவன்.

---

* "தொழுது மன்னரே கரைசெய் பொன்னியிற் றொடர வந்திலா முகரியைப்படத்—தெழுது கென்றுகண் டிதுமி கைக்கணென் றிங்கழிக்கவே யங்கழிந்தது" (கலிங்கத்துப்பரணி - இராசபாரம்பரியம் - பா - 20)

† "பண்டுபல சருகாற் பந்தர், பயின்றநூற் சிலந்திக்குப் பாராள் செல்வம் ஈந்தவன்காண்" எனத்திருக்கச்சியேகம்பத்திருத்தாண்டகத்திலும்' "புத்தியினாற் சிலந்தியுந்தன் வாலினூலாற் பொதுப்பந்த ரதுவிழைத்துச் சருகான் வேய்ந்த, சித்தியினா லரசாண்டு சிறப்புச் செய்யச் சிவகணத்துப் புகப்பெய்தார்" எனத் திருப்பாசூர்ப்பதிகத்தும்—திருநாவுக்கரசு சுவாமிகள் உரைத்தமையுங் காண்க.

‡ பெரியதிருமொழி, 6-ம் பத்து. திருநறையூர்ப்பதிகம், பா-8.

§ ஷை பா - 6, 13.

சோழர்கள் சூரியவம்சத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வைவச்சுதமனுவின் பரம்பரையில் வந்தவர்களென்று அடியில் வரும் பௌராணிகவழியைத் தமக்குக் கற்பித்துக்கொள்ளுகின்றார்கள் :—*

வைவச்சுதமனு.
|
சூரியவம்சஸ்தாபகனான
இக்ஷ்வாகு.
|
முசுகுந்தன்.
(இவன் மகனாகிய)
|
வல்லபன்.
:
சிபி. †

இச்சிபியின்பின்பு சோளன், இராஜகேசரி, பரகேசரி, இராஜேந்திரமிருத்துஜித்து, வியாக்கிரகேது, அரிகாலன் முதலியவர்கள் ஆண்டனரென்று சொல்வர்.

உத்தேசம் நான்காம் நூற்றாண்டில் பல்லவர்களென்னும் ஓர் பராக்கிரமமுடைய வம்சத்தரசர்கள் சோணாடு, மலாடு, கொங்கு, வானகப்பாடி முதலிய பழைய இராச்சியங்களைக் கைப்பற்றிச் சார்வபௌமசக்கரவர்த்திகளாய், 10-ம் நூற்றாண்டுவரை, காஞ்சீபுரம், மாமல்லபுரம் முதலியவிடங்களை இராஜதானிகளாகக்கொண்டு அரசாண்டுவந்தனர். இந்த 6 நூற்றாண்டுகளும் சோழர்கள் குறுநிலமன்னராக, சிற்றரசர்கள் பதவியையடைந்து, பல்லவர்கள்கீழிருந்து அரசாளவேண்டியதாயிற்று.

எட்டாம் நூற்றாண்டின் மத்தியில் பல்லவவம்சத்தானாகிய பரமேச்சுவரபோத்தரசனிறந்தான். இவன்பின், இவன் தாயத்தானாகிய நந்திவர்மபல்லவமல்லனென்பவன், பல்லவராச்சியத்தைக் கட்டிக்கொண்டு ஆளத்தொடங்கினான். இவனைச் சித்திரமாயன் என்னும் பல்லவ இளவரசன் எதிர்த்தனன். இவனுக்குத் தமிழ்நாட்டரசர்க

* The large Leiden grant.

† சிபியின் சந்ததியிற் பிறந்தோர் செம்பியர்களென்ப. (வீரசோழியவுரை)

னெல்லாரும் உதவிபுரிந்தார்கள். நந்திபுரமென்னுமிடத்திருந்த நந்திவர்மபல்லவமல்லனை முற்றினார்கள். அப்பொழுது இவனுடைய தண்டத்தலைவனான உதயசந்திரனென்பவன் இராமிளவரசர்களைத் துரத்திப், பல்லவமல்லனை விடுவித்தான்.*

மேற்கூறியவற்றால், கி.பி. 760-ல் தமிழ்நாட்டரசர்கள் பல்லவசார்வபௌமத்தை ஒழிக்க முயன்றார்களென்பது விளங்கும். இதுமுதல், சோழபாண்டியர்கள் தருணம்பார்த்துச் சுவாதீனமடைய எத்தனித்துக் கொண்டிருந்தார்கள். அதற்குச்சாதகமாகத் தம்முட்பெண்களைக் கொடுக்கல்வாங்கல் செய்யத்தலைப்பட்டார்கள். கி. பி. 862-ல்† பட்டந்தரித்த வரகுணபாண்டியன் தாய் ஒருசோழன் மகள்.‡ இவ்வாறு தம்முள் ஐக்கியமாயிருந்து கி. பி. 9-ம் நூற்றாண்டின் கடைசியில் பட்டஞ்சூட்டப்பெற்ற நிருபதுங்கவர்மன என்னும் பல்லவனையும், அவனுக்குத் துணைபுரியவந்த—அவன்கீழ்ச் சிற்றரசனான—பிரதிவிபதி (1) என்பவனையும் பல யுத்தங்களில் ஜயித்தார்கள். $ அக்காலத்தரசாண்டவர்கள் விஜயாலயன்மகன் ஆதித்தசோழனும், பாண்டியன் மாறஞ்சடையனும், வரகுணபாண்டியனுமே. இவர்களில் ஆதித்தன், நிருபதுங்கனை ஜயித்துச் சோழநாட்டின் ஒரு பகுதியைப் பற்றிக்கொண்டான்.¶ திருப்புறம்பியத்தில் நடந்த போரில் வரகுணன் பிரதிவிபதியைக்கொன்றான்.§ இவ்வாறு ஆரம்பித்துப் பல்லவசார்வபௌமத்தைத் தொலைத்தனர், இதுமுதல் சோழர்கள் பரம்பரை கிரமமாக 13-ஆவது நூற்றாண்டுவரை உந்நத நிலையிலிருந்து வந்தது.

---

* Udayendram plates of Nandivarman. S. I. I, Vol. II. P. 363.


† Epigraphist's Annual Report for 1905 - 6. P. 71.

‡ "சோம சூரியாந்வயத்வயகுலதிலகாலங்காரரான பாண்டியராஜ ராஜர் வரகுணதேவர்" என்னும் திருச்சிராப்பள்ளியிலுள்ள சாஸனத்தின் பகுதியால் உணர்க.

$ Udayendram plates of Nandivarman Pallava Malla P. 364. நிம்பவனம், சூதவனம், சங்கரகிராமம், நெல்லூர், நெல்வேலி, சூரவழுந்தூர் முதலியவிடங்களில். இப்பெயர்கள் தமிழ்ப்பெயர்களின் வடமொழிப்பெயர்ப்பு.

¶ Thiruvalangadu Plates of Rajendracholadeva. *Ep. An. Rep.* **for 1905—6. P, 67.**

§ Udayendram Plates of Prithivipati II; S. I. I, Vol. II. P-381.




கி. பி. 10-ம்
றண்டுக்கு மு
பல்லவ ராஜ்
விஸ்தீ

விஜயாலயன்

ஆதித்தன் I.

பாராந்தகன் I.
( கி. பி 906-7 )

கன்னரதேவன்.

இராஜாதித்தன்
(கி. பி. 947.)

கண்டராதித்தன்.

மதுராந்தகன்.

அரிஞ்சயன்.

பாராந்தகன் II.

ஆதித்தன்
கோதண்டராமன்.

கண்டராதித்தன்.

ஆதித்தன் II.
வல்லவரையர்.
வந்தியதேவர்.

குந்தவ்வை I.

இராஜ ராஜ
தேவன்
(கி. பி. 985).

குந்தவ்வை II.

இராஜேந்திரசோழ
தேவன்.

## இரண்டாம் அதிகாரம்.

—:○:—

சோழவமிசத்தரசர்களுள் இராஜகேசரி, பரகேசரி, என்னும் பெயர்கள் அடுத்தடுத்துத் தரிக்கப்பட்டுவந்தன. அஃதாவது, பராந்தகன் இராஜராஜன், இராஜேந்திரன் என்ற மூன்று தலைமுறையாரை எடுத்துக்கொள்வோம். இவர்களிலே பாட்டனாகிய பராந்தகன் பரகேசரி என்னும் பட்டந்தரித்திருப்பின், இவன்மகன் இராஜராஜன், இராஜகேசரியென்னும்பட்டம் தரிக்கவேண்டும்; பெயரனை இராஜேந்திர சோழன், பரகேசரியாவான். இவ்வாறு இவ்விருபெயர்கள் மாறிமாறி வந்ததென்னும் விஷயம் அவசியமாகத் தெரியவேண்டும். ஏனெனில், ஒருபெயரே பலவரசர்கள் தரித்திருப்பின், இவர்களில் முன் பின்னவர் களியாவர் என்பதும், இடையில்யாரேனும் பட்டம்பெற்றனரோவென்பதும் இராஜகேசரி, பரகேசரியென்னும் பெயர்களால் ஊகித்தறியலாம். எவ்வாறெனில், இராஜேந்திரசோழன் என்னும் பட்டம் தரித்திருந்தவர்களில் முக்கியமானவர்களிருவர். அவர்களில் முதல்வன் பரகேசரி. இவன் பெயரனாகிய (தௌஹித்திரன்.—) இரண்டாம் இராஜேந்திரன் இராஜகேசரியாயிருந்தான். சரியானவழியாய் அடுத்தடுத்துப்பட்டத்துக்கு வந்திருப்பின் இரண்டாமவனும் பரகேசரியாகவேண்டும்; ஏனெனில், பாட்டன் பரகேசரி, தகப்பன் இராஜகேசரி, தான் பரகேசரியாக வேண்டுமல்லவா? அவ்வாறன்றி, இவன் இராஜகேசரியாயிருத்தலின், இவன் சரியான முறையில்பட்டத்துக்கு வந்தவனல்லன்: இவனுக்குமுன் ஒரு பரகேசரியாவ தாண்டிருக்கவேண்டும் என்று சங்கிக்கலாம். சரியான வழியில் பட்டம்பெற்றவனல்லன் என்பது, பின்வரும் இவன் சரித்திரத்தால் விளங்கும்.

விஜயாலயன் என்னும் சோழசக்கரவர்த்தி தஞ்சாபுரியைப்பிடித்துக்கொண்டு அதை இராஜதானியாக்கிக்கொண்டான்*. இவன் காலமுதல், முதலிராஜராஜன் காலம்வரையிலும் இதுவே இராஜதானியாயிருந்தது. தஞ்சாவூரில் விஜயாலயன் துர்க்கைக்கு ஓர் கோயில் கட்டுவித்தான்.

* Eq. An. Rep. for 1905-6. P. 67.

இவன் மகன் முதல் ஆதித்தன்; இவன் காலத்துத்தான், நிருபதுங்கபல்லவனுக்கும், சோழபாண்டியர்களுக்கும் அரைசூர், வேம்பில், திருப்புறம்பிய முதலிய இடங்களிற் போர்நடந்ததில் சோழபாண்டியர்கள் சுவாதீனமடைந்தார்கள். இதனை, சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

“கருமையாற் றருமனார் தமர்நம்மைக்கட்டியகட்டறுப்பிப்பானை
யருமையாந்தன் னுலகந்தருவானை மண்ணுலகங்காவல்பூண்ட
உரிமையாற்பல்லவர்க்குத்திறைகொடாமன்னவரைமறுக்கஞ்செய்யும்
பெருமையார்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே.*

என்று திருவாய்மலர்ந்தருளினர்.

நிருபதுங்கனாகிய அபராஜிதவன்மனுக்குத் துணையாய்வந்த கங்கவரசனாகிய பிரதிவிபதியென்பவன் திருப்புறம்பியத்துப் போரில், வரகுணபாண்டியனாற் கொல்லப்பட்டான். ஆதித்தனுக்கு முதற்பராந்தகன்; கன்னரதேவன் என இருபுதல்வரிருந்தனர்.

## மூன்றாம் அதிகாரம்.

ஆதித்தன் மகனாகிய பராந்தகனென்பவன் கி. பி. 907-ல் முடிசூட்டப்பட்டான். இவ்வரசனுக்கு வீரநாராயணனென்றோர் மறுபெயருண்டு. இவன், “மதுரைகொண்ட கோப்பரகேசரி” யென்றே எப்பொழுதும் குறிக்கப்படுவான். இவன் மதுரையை ஜயித்தபோது அவ்விடத்து அரசாண்டு வந்தவன் இராஜசிம்மபாண்டியன். இவ்வரசனுக்கு, இலங்கைத்தீவை அரசாண்ட ஐந்தாங்காசியபன், தன் சேனைகளைக் கொடுத்து, ஒரு சோழனோடு போர்புரிய உதவிபுரிந்தனன். இவ்வாறு எதிர்க்கப்பட்டசோழன் பராந்தகனே. பிறகு தனக்கு விரோதமாய், பாண்டியற்கு உதவிபுரிந்த காசியபனது நாட்டையும் ஜயித்துத் தன்னடிப்படுத்தினன். இராமனைப்போல் இலங்கையைப் பிடித்ததற்காக இவன் சங்கிராம ராகவன் என்னும் காரணப்பெயர் பூண்டான். இதேகாரணத்தால், இவன் “மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி”, என்று அழைக்கப்படுதலுமுண்டு.

* தேவாரம், கோயிற் பதிகம்-பா-4.

மதுரையும் ஈழமும் வென்றுகொண்டபிறகு, வைதும்பவரசனாகிய சந்தயன் என்பவனையும், வாணவரசர்களிருவரையும் தோற்கச்செய்து, வாணர்கள் நாடாகிய வாணகப்பாடியை, அவர்களிடத்துப் பெண் கொண்ட கங்கவம்சத்தரனாகிய இரண்டாம் பிரதிவிபதிக்குக் கொடுத்துச் செம்பியன்மாவலிவாணராயன் என்னும் பெயரால் முடிசூட்டுவித்து, தனக்குக்கீழ்ப்படிந்த சிற்றரசனாக்கிக்கொண்டான்.* இப்பிரதிவிபதிக்கு வீரசோழனென்னும் மற்றொருபெயரும் உண்டு. பராந்தகனால் வெல்லப்பட்டவாணர்கள் விஜயாதித்தனு(IV)ம், அவன் தந்தை விக்கிரமாதித்தனுமாக வேண்டும்.† வாணர்கள், வடஆர்க்காடு ஜில்லாவில் சில பாகமும், தென்னார்க்காடு ஜில்லாவில் சில பாகமும் ஆண்டுவந்த பல சாலிகளாகிய சிற்றரசர்கள். இவர்களாண்டுவந்த நாட்டுக்கு, வாணகப்பாடி அல்லது வடுகவழிமேற்கு என்று பெயர்.

பராந்தகன் பலராச்சியங்களையும் வென்றுகொண்ட செல்வத்தால் தங்கள் குலதெய்வமாகிய தில்லைச்சிற்றம்பலவர்கோயிலைப்பொற்ற கட்டால் வேய்வித்தான்.

இவ்வரசன்பட்டத்தரசி கோளாராஜன் மகள். இவளன்றி, இவனுக்கு மற்றும் பல மனைவியரிருந்தார்கள். இவன் முதல்மகனாகிய இராஜாதித்தன் என்பவன் கோக்கிழானடிகள் என்னும் மனைவியினிடம் பிறந்தவன்.‡ இவனுடைய மற்றைய மூன்று புத்திரர்களுக்கும் பெயர்—கண்டராதித்தன், அரிஞ்சயன், ஆதித்தனாகிய கோதண்டராமன் என்பன. கோதண்டராமன் தாய், கொடும்பாளூரைச் சேர்ந்தவளென்று தெரியவருகிறது.

முதற் பராந்தகன் காலத்திலேதான் சோழராச்சியம் மிக்க பிரபலமடையத் தலைப்பட்டது. அதற்கேற்ப இவ்வரசனும் 40—வருஷ காலம் இராச்சியத்தைப் பொருந்திச்சீர்ப்படுத்திபாண்டு பின்பு காலஞ்சென்றான்.

---

* Udayendram Plates of Prithivipati II. S. I. I. Vol. II. P.3 76.

† குடிமல்லத்துச்சாஸநங்கள் Ep An. Rep—for 1903-4. No. 223, 224 of 1903.

‡ Ep. Ind; Vol; VII. P. 133.

## நான்காம் அதிகாரம்.

பராந்தகனிறந்ததும் இராஜாதித்தன் கி. பி. 947—ல் மகுடஞ் சூடினான். இவனாட்சியின் இரண்டாம் வருஷத்தில், துங்கபத்திரைக் கரையிலரசாண்டுவந்த இராஷ்டிரகூடவரசர்களை ஜயிக்கக்கருதிப்படையெடுத்துச் சென்றான். இவன் காலத்தரசாண்ட இரட்டராஜன் (இராஷ்டிரகூடராஜன்) அகாலவர்ஷன் என்னும் மூன்றாங்கிருஷ்ணதேவன். இப்பெயர், கன்னரதேவனென்று மருவிவழங்குவதும் உண்டு. கன்னரதேவன், சோழ-ராஜாதித்தன் தன்மேல் படையெடுத்து வருவதுதெரிந்து, தானே பெரிய சைன்னியங்களுடன் எதிர்கொண்டு, தக்கோலத்தில் *யுத்தஞ்செய்ய, அதில்முறியடிக்கப்பட்டான்.† இராஜாதித்தன் வெற்றியடைந்தும், நெடுங்காலம் அரசாளக் கொடுத்துவைக்கவில்லை. அன்றியே, கன்னரதேவன்சகோதரிகணவனும், கங்கவமிசத்தானுமாகிய பூதுகன் அல்லது பூதராஜன் என்பவனால் நயவஞ்சகத்தாற் கொல்லப்பட்டான்.‡

இவ்வரசன்மனைவி, இலாடத்தரையன் பிருதிவிபதியின் மகளாகிய மஹாதேவடிகள். இவள் தமையன், ராஜாதித்தனிடம் சிற்றரசனாதலால், இவன்பெயரையும் தன்பெயருடன் சேர்த்து, இராஜாதித்தன் புகழ்விப்பவர் கண்டனென்று விளங்கினான்.

இராஜாதித்தன் தன் பிரஜைகளால் நன்குமதிக்கப்பட்டவனாயிருந்திருக்கவேண்டும். இவனுடன் தக்கோலம்வரையில் யுத்தஞ் செய்யச்சென்ற ஒவ்வொருவரும், இவனால் திருநாவலூரிற்கட்டப்பட்டுள்ள இராஜாதித்தேசுவரமென்னும் கோயிலில், இவன் இறந்தபின், இவன்பேராற் பல திருவிளக்குகள் வைத்திருக்கிறார்கள்.


இராஜாதித்தனிறத்தலோடும் சோழராச்சியம் இரட்டவரசனான கன்னரதேவன் வசமாய்விட்டது. “கச்சியும் தஞ்சையும் கொண்ட

---

* இஃது இப்பொழுது தெக்குளம் என்னும் பெயருடைத்தாய் ஆர்க்கோணம் ஜங்க்ஷனுக்கு ஆறுமைல் தூரத்திலிருக்கிறது.

† Ep. Ind. Vol. VII, P. 195 and Atukur Inscription of Krishna III, Ibid vol. VI. p. 51.

‡ Ibid P. 52.




முதற் பராந்தகன் ஆட்சியி
லிருந்த சோழராஜ்யத்
விஸ்தீரணம்.

கன்னரதேவர்க்கு யாண்டு" என்றாரம்பித்த சாஸனங்கள் சோணாட்டின் வடபாகங்களிற் பற்பல விடங்களிலும் காணப்படுகின்றன. இக்காலத்தே கண்டராதித்தனும் இவன்றம்பி அரிஞ்சயனும், ஒருவாறு, மிகுந்திருந்த சோழநாட்டை ஆண்டுவந்திருக்கவேண்டும். ஆயின் இவர்காலத்துச் சாஸனங்கள் ஒன்றும் காணோம். அரிஞ்சயனுக்கு அரிகுலகேசரியென்னுடைய மறுபெயருமுண்டு.

கன்னரதேவன் ஆளுகையில், க்ஷீணகதியடைந்திருந்த பல்லவ வம்சம் மறுபடியும் சிறிது தலையெடுக்கத் தொடங்கியது. நந்திவர்மன் புதல்வனும் நிருபதுங்கன் தம்பியுமாகிய கம்பவர்ம்மனென்பவன், தன முன்னோர் அரசாண்ட நாட்டிற் சிற்சிலபாகங்களைக் கைப்பற்றிக்கொண்டு, அத்திமல்லன் பிருதிவிபதி... முதலியவர்கள் துணையால் அரசாளத் தொடங்கினான். இவ்வாறு பதினெட்டு வருஷகாலமாவது நடந்திருக்க வேண்டும்.*

## ஐந்தாம் அதிகாரம்.

கன்னரதேவன் உத்தேசம் 971-கி. பி. யிலிறந்தான். இவன்பின் பட்டந்தரித்தவர்கள், கொட்டிகதேவனும் இரண்டாம் கக்கராஜனும். இவர்கள், முறையே ஒன்று இரண்டு வருஷங்கள் அரசாண்டார்கள். அதற்குள் மேலைச்சாளுக்கியர் (குந்தளர்) இரட்டராஜ்யத்தைத் தாக்கி, அதனைத் தம்மாட்சிப்படுத்தினார்கள். அப்பொழுது சோழரும் சுவாதீனமடைந்தனர். கண்டராதித்தனும், அரிஞ்சயனும் அரசாண்ட பிறகு, பின்னவனுடைய மகனாகிய இரண்டாம் பராந்தகன் சோழசக்கரவர்த்தியானான். இவனுக்குச் சுந்தரசோழன்† என்னும் மறுபெயர் ஒன்றிருந்தது. இவன் அரசாட்சியில், இவன் சேவூர் என்னுமிடத்தில் யுத்தஞ் செய்தானென்று மாத்திரம் தெரிகிறது. இதில் இவன் ஒருகால் இறந்துபோயிருக்கவேண்டுமென்றுந் தோற்றுகிறது. ஏனெனில், இக்காலத்தில் அரசாண்டுவந்த வீரபாண்டியனென்பவன், சோழன்றலைகொண்ட வீரபாண்டியனென்று தன் புகழைக்கூறிக்கொள்ளுகிறான். ஆதலால் சேவூர்ப் போர் இவனோடேயே நடந்திருக்கவேண்டும். இவ்வரசனை இவன் பிரஜைகள் மனுவின் அவதாரமென்று பாவித்து

* Ep. Ind. Vol. VII, P. 193 & 194.
† Tiruvalangadu Plates of Rajendracholadeva, Ante p. 1.

வந்தார்கள். இவன் மனைவி கேரளராஜன் மகள். இவள் பெயர் வானவன்மாதேவி. தன்கணவன் பராந்தகனிறந்ததும், வானவன் மாதேவி ஸஹகமனஞ் செய்தாள். பராந்தகனுக்குப் "பொன்மாளிகைத் துஞ்சிய தேவர்" என்றோர் காரணப் பெயருமுண்டு.* இவனுடையதும், இவன் பத்தினியுடையதுமான படிமங்களைச் சமைத்துத் தஞ்சாவூர் இராஜராஜேசுவரத்தில் எழுந்தருளுவித்து, பூசை நைவேத்தியங்களுக்கு இவர்கள் மகளாகிய குந்தவையால் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பராந்தகன்பின், அவன் பெரியப்பன் கண்டராதித்தன் மகனாகிய மதுராந்தகன் அரசுபுரிந்து வந்தான்.† பராந்தகன் முதல் மகனாகிய இரண்டாம் ஆதித்தன், சிறுபையனாயிருக்கையிலேயே, வீரபாண்டியன் முடித்தலையைக்கொய்து பந்தாக உருட்டி விளையாடினனாம். மதுராந்தகனுக்குக் கண்டராதித்தன் என்றொரு மகனிருந்தான். இவர்தான் திருவிசைப்பாப் பாடினோரிலொருவரான கண்டராதித்தர்.‡

## ஆரும் அதிகாரம்.

மதுராந்தகன் அரசுபுரியுங் காலத்திலேயே முதலிராஜராஜன் இளவரசப்பட்டஞ் சூட்டப்பட்டான். இவன் பட்டம் பெறும் விஷயத்தில் சில இடையூறுகளிருந்தனபோற் றோன்றுகிறது. இவ்வரசன் தன் பிரஜைகளால் தானே அரசனாகவேண்டுமென்று வருந்திக் கேட்கப்

* செந்தமிழ். தொகுதி-3. பக்கம்-195.

† இவ்வரசன் தாய் செம்பியன்மாதேவியார். இவள் மழவநாட்டு சிற்றரசன் மகள். இவளை, சாஸனங்கள் அடிக்கடி "மதுராந்தக தேவரான ஸ்ரீஉத்தம சோழதேவரை திருவயிறுவாய்க்கவுடைய பிராட்டியார் பிராந்தகன் மாதேவடிகளான ஸ்ரீ செம்பியன் மாதேவியார்.'; "ஸ்ரீகண்டராதித்ததேவர் நம்பிராட்டியார் பிராந்தகன் மாதேவடிகள் பிராட்டியார் செம்பியன் மாதேவியார் மகனான மதுராந்தக தேவரான ஸ்ரீ உத்தம சோழதேவரைத் திருவயிறுவாய்க்க உடைய பிராட்டியார்" என்று வர்ணிக்கின்றன. இச்சாஸனக் கூறுகளால் மதுராந்தகனுக்கு உத்தமசோழன் என்னும் மறுபெயரிருந்ததென்பது விளங்கும். இவன் ஓர் பரகேசரி.

‡ S. I. I. Vol. I.

பட்டும், தன் சிற்றப்பன் மதுராந்தகன் சோழராச்சியத்தில் வைத்திருக்கும் வாஞ்சை தீருமளவும் தான் முடிசூடுவதேயில்லையென்று மறுத்துவிட்டான்.* பிறகு இவ்வரசன் கி. பி. 985-ல் பட்டாபிஷேகஞ் செய்யப் பெற்றான்.†

சிறிதுகாலமாகப் பராதீனப்பட்டுக்கிடந்த சோழராச்சியத்தை க்ஷீணதசையினின்றும் வெகு உன்னத ஸ்திதிக்குக்கொணர்ந்து மறுபடியும் ஸ்திரமாக ஸ்தாபித்தவன் இவ்விராஜகேசரி-இராஜராஜனே. பட்டத்துக்குவந்து ஏறத்தேசம் பத்து வருஷகாலமாய்த் தன்னாட்டைப் பலப்படுத்திக்கொண்டு, தகுந்த சேனைகள் முதலியவற்றையும் சேகரித்துவைத்து, புறநாட்டரசர்களை வெல்லக்கருதி வெளிக்கிளம்பினான். இவன் ஆட்சியின் 10-முதல் 12-வது வருஷம் வரை, காந்தளூர் எனும் துறைமுகத்தின்கண்ணுள்ள கப்பல்களை அழித்து, சேரரைச்சயித்து, அவர்களைத்தன்கீழ்ச் சிற்றரசர்களாக்கித் திரும்பினான். இக்காலத்திற்றான், மதுரையாண்டுவந்த அமரபுஜங்கனென்னும் பாண்டியனும், இராஜராஜனால் வெல்லப்பட்டு, அவனுக்குக் கீழ்ப்படிந்தவனாயினன்.

பின்பு, 12முதல் 14வது வருஷம்வரை இவ்வரசன் கைக்கொண்ட நாடுகள் கங்கபாடி, நுளம்பபாடி, வேங்கைநாடு, குடகு முதலியன. இவற்றுள் கங்கபாடியென்பது இப்போதை மைசூர்ஜில்லாவின் கீழ்ப்பாகமுழுவதும், அவ்விடத்தைச்சுற்றிய சில நாடுகளுமுடைத்தாய், காவிரிக்கரையிலுள்ள தலைக்காடு என்னுநகரத்தை ராஜதானியாகக் கொண்டிருந்த நாடு. இக்கங்கபாடியை முற்றிப்பிடித்ததும், இராஜராஜன் தன் பெயரால் தலைக்காட்டுக்கு இராஜராஜபுரமென்று பெயர் கொடுத்தான். அவ்வூர்ச் சாஸனங்களில், அது தலைக்காடாகிய இராஜராஜபுரமென்றே குறிக்கப்பட்டிருக்கிறது. கங்கபாடி கொண்டபிறகு தலைக்காட்டுக் கருகிலுள்ள கலியூரில் ஒரு பெருத்த யுத்தம் நடந்தது. அதில் இராஜராஜனுடைய சேனாதிபதிகளுள் ஒருவனாகிய கொத்தமண்டலமுடையானான அப்பிரமேயனென்பான், போசளராஜன்

* Tiruvalangadu Plates of Rajendracholadeva, Ep. An Rep— for 1905—6, p. 68.

† Ibid.

மந்திரியாகிய நாகண்ணனைத்தோற்கடித்து, போசள வீரர்களாகிய மஞ்சகன், காளிகன், நாகவர்மன் என்பவர்களைக்கொன்று தானுமிச்சண்டையிலிறந்தான்.* கலியூர்ப்போர் நடந்தது கி. பி. 1006. இராஜராஜன் சேரர்மீது படையெடுத்துச் சென்றபோது இவ்வப்பிரமேயனும் தளகர்த்தனாகப் போய், உடனிருந்து யுத்தஞ் செய்தவன்.

வேங்கைநாடென்பது இப்பொழுது கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களாயிருக்கும் நாடு. இது கி. பி. 972—முதல் 989-வரை உட்கலகங்களால் அரசர்களில்லாமல் அல்லலுற்றிருந்தது. அச்சமயம் பார்த்து, இராஜராஜன், தன் மகன் இராஜேந்திரன் வசம் ஒரு சேனையை ஒப்புவித்து, அதனைச்சயித்துவர ஏவினான். இராஜேந்திரன் அதனை வென்றதோடு, சாளுக்கிய வம்சத்தானான விமலாதித்தனைப் பிடித்துக் கொண்டு தஞ்சாவூருக்குத் திரும்பினான். விமலாதித்தன் தஞ்சாவூரில் 23-வருஷமிருந்து, இராஜராஜனால் அபிமானிக்கப்பட்டு, அவன் மகள் குந்தவையை மணந்து தன்னுடைமையளிக்கப்பெற்றுத் திரும்பிச்சென்று 7-வருஷம் அரசாண்டான்.

வேங்கைநாட்டுக்கு வடக்கேயுள்ளது கலிங்கம்- இதுவும் இராஜராஜன் ராச்சியவருஷம் 16-வதில், இவன் வசமாயிற்று. நுளம்பர் என்பவர்கள் பல்லவ வம்சத்து ஒரு கிளையைச்சேர்ந்தவர்கள். இவர்கள் நாடு கங்கபாடியை அடுத்திருக்கது. இராஜராஜன் ஜயித்தகாலத்து அதனை யாண்டவன் அய்யப்பநுளம்பன.

குடகுநாட்டின் பேரில் தண்டெடுத்துச் சென்றபோது, பஞ்சவமாராயன் என்னும் தண்டநாயகன், பனசோகே யென்னுமிடத்தில் நடந்த யுத்தத்தே வெகு தைரியமாய்ச் சண்டைசெய்ததைக்கண்டு சந்தோஷமடைந்து, இராஜராஜன், அவனை வேங்கை மண்டலம் கங்கமண்டலமிவ்விரண்டுக்கும் தண்டநாயகனாக்கி, க்ஷத்திரியசிகாமணி கொங்காள்வான் என்னும் பட்டமும் கொடுத்து, மாலவ்வி என்னும் ஊரையுமளித்தான். அக்காலத்து மலைநாட்டிலுள்ள கொல்லமும் இராஜராஜனாற் கொள்ளப்பட்டது.

---

* Ep. Carn, Mysore District, Vol. I, Tirumakudlu Taluk, No. 44.

பிறகு, 16-முதல் 20-வருஷத்துக்குள் ஈழமும் (இலங்கைத்தீவு) ஜயிக்கப்பட்டது. இவ்வரசன் சாஸனங்கள், அவ்விடத்து அநுராதாபுரமுதலான விடங்களிற் காணப்படுகின்றன. இவனுக்கு, சோழ பாண்டியகேரளராச்சியங்கள் மூன்றுக்கும் ஏகசக்ரவர்த்தி யென்பது விளங்க, மும்முடிச்சோழனென்னும் பெயருண்டாயிற்று.

இவ்விராச்சியங்களெல்லாம் வென்றுகொண்டபின், மேனாட்டுச் சளுக்கிய அரசனாகிய சத்தியாசிரயன்மீது படையெடுத்துச் சென்று, அவனை முறியடித்து வந்தானென்பது, "ஸத்யாசிரயனை எறிந்து எழுந்தருளிவந்து" என்று பலதடவை இவனால் தஞ்சாவூர் பிருஹதீசுவரன் கோயிலில் வெட்டப்பட்ட பல சாஸனங்களால் வெளிப்படுகிறது. இவ்விராஜராஜன் காலமுதல் சோழர்களுக்கும் குந்தளர் (மேனாட்டுச்சாளுக்கியர்) களுக்கும் ஓயாப்போரே மணியமாயிற்று.

மேற்கூறிய திக்குவிசயங்கள் முற்றமுடிந்தபின், இராஜராஜன் இராச்சியம் ஏறக்குறைய சென்னைராஜதானியில் முக்கால் வரிசை விஸ்தீரணமுடையதாயிருந்தது. இவ்வரசனுக்கு முற்கூறியபடி மும்முடிச்சோழனென்பதுடன் சிவபாதசேகரன், அருண்மொழி, ராஜாசிரயன், க்ஷத்திரியசிகாமணியென்னும் பல பெயர்களும் வழங்கின. இவன் மனைவியர் தந்திசக்திவிடங்கி, திரைலோக்கியமாதேவி, பஞ்சவன் மாதேவி, அபிமானவல்லி, சோழமாதேவி என்று ஐவரிருந்தார்கள். இவனுக்குப் பரகேசரி இராஜேந்திர சோழனைத் தவிர்த்து வேறு புத்திரர்களிருந்ததாகத் தெரியவில்லை. வேங்கைமண்டலத்தரசன் மனைவி குந்தவையைத்தவிர்த்து, இராஜராஜனுக்கு மாதேவடிகளென்னும் மற்றுமொரு குமாரத்தியுமிருந்தாள். இவனைத் திருவலஞ்சுழியின்* சாஸனமொன்றில் "நடுவிற் பெண்" என்று கூறுவதால், மற்றுமொரு பெண்ணுமிவனுக் கிருந்திருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம்.

இராஜராஜன் தன்னாட்சியில் 29-ஆம் வருஷத்தில் துலாபாரம் புக்கதையும், இவன் தர்மபத்தினியாகிய தந்திசக்திவிடங்கி இரணியகர்ப்பம் புக்கதையும், திருவிசலூர்ச் சாஸனம் ஒன்று அடியில் வருமாறு குறிக்கிறது.

---

* Ep. An. Rep—for 1902—3. No. 633 of 1902.

"ஸ்ரீகோவிராஜகேஸரிவந்மரான ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது இராஜேந்திர சிங்கவளநாட்டு மண்ணிநாட்டு ப்ரஹ்மதேயம் வெம்பற்றூராகிய சோழமார்த்தாண்ட சதுர்வேதி மங்கலத்து மஹாஸபையோம் கையெழுத்து நம்முடைய சக்கிரவர்த்தி உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் இவ்வூர் திருவிசலூர் மஹாதேவர் ஸ்ரீ கோயிலிலே துலாபாரம் புக்கருளின அன்று நம்பிராட்டியார் தந்திசக்திவிடங்கியார் இரண்யகர்ப்பம் புக்கருளி இத்திருவிசலூர் மஹாதேவர்க்கு அக்காரடலை அமுதுக்கு வேண்டும் நிவந்தங்களுக்காக வைச்ச காசு சாஸநமிது."


இவ்வரசன் பட்டமஹிஷியரில் ஒருவராகிய திரைலோக்கியமாதேவியார் திருவையாற்றில் இப்போது உத்தரகைலாசமென்று பெயர் பெறும் லோகமகாதேவீசுரம் கட்டுவித்தாள். சோழவம்சத்தார்களே மிகுந்த சிவபக்தர்கள். அவர்களிலும் இவ்வரசனும் இவன்மனைவியரும் மக்களும் பெருத்த சைவாபிமானிகள். இராஜராஜன் தன் காலத்துள்ள கோயில்களிலெல்லாம் மிகச் சிறந்ததாயிருக்கவேண்டுமென்று கருதி, இற்றைக்கும் கண்டோர் வியக்கும்படியான, பிரஹதீசுரமென்னப்பட்ட இராஜராஜேசுவராலயம் கட்டினான். இதனைப்புகழ்ந்து இவ்வரசன் காலத்தாராகிய கருவூர்த்தேவர் தம் திருவிசைப்பாவில் ஒரு பதிகம்பாடியிருக்கிறார். இக்கோயிலுக்கு இவனும் இவன் உறவினரும் கொடுத்த பொன்னும் மணியும் முத்தும் நிலங்களும் அளவற்றன. இவன் பெருமையை விளக்க இராஜராஜேசுவர நாடகமொன்று இயற்றி ஆண்டுதோறும் நடிக்கப்பட்டு வந்தது.*

இவ்வரசன் கல்விமான்களிடத்தில் மிக்கபற்றுடையவன். இவன் காலத்திற்றான் நம்பியாண்டார் நம்பிகளும், கண்டராதித்ததேவர் முதலிய திருவிசைப்பாவுடையாரும் பிறருமிருந்தனர். திருமுறை கண்ட சோழனும் இவனே.†

---

* S I. I., Vol. II, p. 306.

† "மல்லன்மிகு சேனையுடன் இராசராச மன்னவனு மந்நகரில் வந்து சேர்ந்தான்" (திருமுறைகண்டபுராணம். பா. 6) திருவிசைப்பாவுடையரான கண்டராதித்ததேவரை முதலாம் கண்டராதித்தரெனச் சொல்வது வழக்கம். (செந்தமிழ்த் தொகுதி 3. பக் 290; S. I. I, Vol I, p. 144). அவர் இராஜராஜன் பாட்டனுக்குத் தமையனாதால், இராஜராஜனால் கட்டப்பட்ட இராஜராஜேசுவரம் பாடியிருக்க ஏலாது. ஆதலால் திருவிசைப்பாவுடையார், அவர் பெயரனும் மதுராந்தகன் மகனுமாகிய இரண்டாம் கண்டராதித்தரேயாவர். இவர், தங்காலத்தே திருவல்லம் கோயிலின் அக்கிரமங்களை விசாரித்தவர். S. I. I.)




முதலாம் இராஜராஜனது ஆட்சியிறுதியிலிருந்த
சோழராஜ்யத்தின் விஸ்தீரணம்.

இவன் சைவமதத்தில் மிக்க ஈடுபட்டவனாயினும், பிறசமயங்களிற் கொஞ்சமேனும் வெறுப்புடையவனல்லன் என்பது இவன் காலத்துப் பல பௌத்த விஹாரங்களுக்கும் ஜைனப் பள்ளிகளுக்கும், விஷ்ணு கிரகங்களுக்கும் இவனால் வைக்கப்பட்ட பல திருநுந்தாவிளக்குகளால் வெளிப்படும். நாகபட்டணத்து, கடாரத்தரசனான சூளாமணிவன்மனால் கட்டத்தொடங்கி, அவன் மகன் மாறவிஜயோத்துங்கனால் முடிக்கப்பெற்ற பௌத்தவிஹாரத்துக்கு இராஜராஜப் பெரும்பள்ளி என்று தன் பெயரிடச் சம்மதித்தான். இதுவுமன்றி இவன் அதற்கு ஆனைமங்கலமென்றோர் கிராமமும் அளித்தான்.* இவ்வரசன் சாஸனங்கள் சிற்றூர்க் காட்டாம்பள்ளியிலும், திருநறுங்குன்றை நாற்பத்தெண்ணாயிரப் பெரும்பள்ளியிலும் இறைக்கும் காணலாம். பௌத்தப்படிமங்கள் இராஜராஜேசுவரத்தில் சிற்சிலவிடங்களில் வெட்டப்பட்டிருக்கின்றன.

இவ்வரசன் காலத்திருந்த மிகப் பெருமையுடைய சேனாதிபதியான ஸ்ரீகிருஷ்ணன் ராமனான மும்முடிச்சோழப் பிரம்ம மாராயன் என்பவன், இராஜராஜனுக்கு முக்கிய மந்திரியாயிருந்தான்.

இராஜராஜனால் குடிகட்குச் செய்யப்பட்ட நன்மைகள் பலவாயினும், முக்கியமானது, தன்னிராச்சியத்திலுள்ள பூமி முழுதுமளப்பித்து, ஆறிலொரு கடமை வாங்க ஏற்பாடு செய்ததுதான். இவன் காலத்து இராச்சிய வியவகாரங்கள் எவ்வாறு நடத்தப்பட்டதென்பது "இராஜாங்க ஏற்பாடுகள்" என்னும் கடைசி அதிகாரத்தினடியில் தூலமாக வரையப்படும்.

## ஏழாம் அதிகாரம்

இராஜராஜனுக்குப்பின் பட்டந்தரித்தவன், அவன் மகனாகிய பரகேசரி இராஜேந்திரசோழதேவன். இவன் "பூர்வதேசமும், கங்கையும் கடாரமுங்கொண்ட இராஜேந்திரசோழதேவன்" என்று குறிக்கப்படுவான். இவ்வரசனுக்கு மதுராந்தகன, உத்தமசோழன், விக்கிரமசோழன, பண்டிதசோழன், முடிகொண்டசோழன் எனனும் பல நாமதேயங்களுமுள. இவன் கி. பி. 1012-ல் முடிசூட்டப்பட்டான்.

* The large Leiden grant.

அதுமுதல், தன் தகப்பனைப்போல, பல இராஜ்யங்களும் ஜயிக்க முயன்று, முதன்முதல், இப்பொழுது மைசூரிலாகாவைச்சேர்ந்த இடைதுறை நாட்டையும், வனவாசியையும்; கொள்ளிப்பாக்கையையும் மண்ணைக்கடக்கத்தையும், ஈழமண்டலத்தையும் கைப்பற்றினான். அரசுரிமைபூண்ட ஐந்தாறு வருடங்களிலெல்லாம் மலைநாட்டைப் பிடித்துக்கொண்டான். பிறகு இரட்டபாடிக்கு அதிபதியாகிய மேனாட்டுச் சாளுக்கியனாகிய இரண்டாம் ஜயசிங்கனை உச்சங்கிதுர்க்கத்தில் தாக்கி; அவனுடைய இரட்டபாடியை வசப்படுத்திக்கொண்டானென்று சோழசரித்திரங் கூறுகின்றது. ஆயின், குந்தளர்கள்சாஸனங்களில் ஜயசிங்கன் சோழவரசனை வென்றதாகக் கூறியிருக்கிறது. ஆதலால், உண்மையில, இராஜேந்திரன் இரட்ட ராச்சியத்தைத் தாக்கியிருக்கலாமே யன்றி முற்றப் பற்றினவனல்லன். நாளடைவிலேயே ஓட்டராதேசமும்,* கோசலைநாடும், இலாடதேசமும், வங்காளமும் இராஜேந்திரனால் வெல்லப்பட்டன. இந்நாடுகளின் அரசர்களிற் சிலராகிய இந்திரரதன், கோவிந்தசந்திரன், இரணசூரன், மகிபாலன் என்பவர்கள் தன் கீழ்ப் படிந்ததாயும், இவர்களுள் மகிபாலன் தலையில் கங்காதீர்த்தம் நிரப்பிய குடமொன்றேற்றித் தன் இராஜதானிக்குக் கொண்டுவரும்படி இராஜேந்திரன் செய்தானென்றும் இவன் மெய்க்கீர்த்திகூறுகிறது. அதற்குப் பிறகு "அலைகடல் நடுவிற் பலகலஞ் செலுத்தி" "மாநக்கவாரத்"† தீவுகளைக் கைப்பற்றிக்கொண்டு பின் கடாரம்‡ நோக்கிச் சென்று அத்தேசத்தின் கடற்றுறையாகிய மாப்பபாளத்திலிறங்கி, அதை அரசாண்டு கொண்டிருந்த சங்கிராம விஜயோத்துங்கவர்மனை ஜயித்தான். சங்கிராம விஜயோத்துங்கவர்மன் மாற பிஜயோத்துங்கன மகனும், சூடாமணி வர்மன் பெயரனுமாகவேண்டும்.

பண்டிதசோழன் என்று இவ்வரசனுக்குப் பெயரிருத்தலின், இவன் மிக்ககல்விமான்போற் றோன்றுகின்றது. இவன்காலத்தும்,

* இவ்வரசன் தன் தங்கை குந்தவ்வையின் கணவனாகிய விமலாதித்தனை ஜயித்து, அவன் நாட்டிலுள்ள மஹேந்திர பர்வதத்தில் ஓர் ஜயஸ்தம்பம் நாட்டினான் என்று மஹேந்திர பர்வதத்தின் மேலிருக்கும் கோகர்ணசுவாமி கோயிலின் தமிழ்ச்சாஸனம் ஒன்று தெரிவிக்கிறது. இச்சாஸனத்தின்கீழ் ஒரு புலியும், இரண்டு கயல்மீன்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

† நிக்கோபார்த்தீவுகள் ‡ பர்மாதேசம்.

இவன் தந்தைகாலத்துப்போல் கௌட முதலிய பல தேசங்களினின்றும் பிரபலபிராமணர்கள் வரவழைத்து ஆதரிக்கப் பட்டார்கள். இவன் மிக்க ஈகையும் பக்தியுமுடையவன். இவன், தன் காரணப்பெயராகிய கங்கைகொண்ட சோழன் என்னும் நாமதேயத்தால், கங்கைகொண்ட சோழபுரமென்று ஒரு நகரங்கட்டி, அதில் கங்கைகொண்ட சோழீசுவரமென்னும் ஓர் சிறந்த ஆலயமுமாக்கினான். இக்கங்கைகொண்ட சோழபுரம் பிற்காலத்துப் பல சோழ அரசர்களால் இராஜதானியாக்கிக் கொள்ளப்பட்டது. இவ்வூருக்கு ஸ்ரீ வைஷ்ணவாசாரியர்களுள் முதல்வராகிய ஸ்ரீமந்நாதமுனிகள் அடிக்கடி போய்க்கொண்டிருந்து கடைசியில் இவ்வூரிலேயே காலஞ்சென்றார் என்று குருபரம்பரைகள் தெரிவிக்கின்றன.* இவ்வரசன் கட்டிய கங்கைகொண்ட சோழீசுவரமே கருவூர்த் தேவரால் தம் திருவிசைப்பாவில் பாடப்பட்டது.†

---

## எட்டாம் அதிகாரம்.

இராஜேந்திரசோழன் காலத்திற்குப்பின், ராஜகேசரி இராஜாதிராஜன் சிம்மாசனம் ஏறினான். இவனே கலிங்கத்துப் பரணியில் "கம்பிலிச்சயத்தம்பநட்டதும்"‡ என்று புகழப்பட்டவன். முற்கூறியபடி இராஜேந்திரசோழதேவன் கி. பி. 1012-ல் பட்டந்தரித்து கி. பி. 1032-வரையாண்டான். ஆயின் மிண்டிகல் என்னுமிடத்திலுள்ள ஒருசாஸனம், இராஜாதிராஜன் கி. பி. 1018-ல் பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்றானென்கிறது. ஆகலால், இவன் இராஜேந்திரசோழதேவனுடைய 7-வது இராச்சியவருஷத்தில், ராஜாங்ககாரியங்களை நிர்வஹித்துவரத் தலைப்பட்டானென்று தோன்றுகின்றது. இவ்வரசன் காலத்துச் சாஸனங்களெல்லாம் இவனுடைய 26-வது இராச்சியவருஷமுதல் 32-வது வரையில் காணப்படுகின்றன. இவனுடைய 26-வது வருஷந்தான் இராஜேந்திரசோழதேவனிறந்தது. ஆதலால் ராஜேந்திரசோழதேவன்பின் இவன் 6-வருஷம் அரசாண்டான். இவ்வரசன், தன்

---

* பின்பழகிய ஜீயர் குருபரம்பராபிரபாவம்.

† "அன்னமாய்" என்றாரம்பிக்கும் பதிகம்.

‡ இராச பாரம்பரியம்-பா 26.

மெய்க்கீர்த்தியில் தன்னுடைய உறவினராகிய எழுவரை சேர, பாண்டிய, சாளுக்கிய, கங்க, ஈழ, பல்லவ, கன்னியாகுப்ஜ நாடுகட்கு அரசராக நியமித்தானென்று சொல்லிக்கொள்ளுகிறான். சாளுக்கியருடைய குந்தளநாடும், கன்னியாகுப்ஜமும் இவன் ஆட்சியிலிருந்ததாகத் தோற்றவில்லை. இவ்வரசன், மானாபரணன், வீரகேரளன், சுந்தரபாண்டியனென்னும் மூன்று பாண்டியர்களோடு போர்புரிந்து முதல்வனாகிய மானாபரணனென்பவன் தலையைக்கொய்து, வீரகேரளனை யானையால் மிதிப்பித்துச் சுந்தரபாண்டியனை முல்லையூர்புகத் துரத்தித் திரும்பினான். அப்பொழுதே வேணாட்டரசனொருவனையும் சயித்தான். அன்றியும் தன் பாட்டனாகிய இராஜராஜனைப்போல இவனும் காந்தளூர்ச்சாலையிற் கலமறுத்ததாகவும் விளங்குகிறது.

இவ்வாறு தென்னாட்டில் யுத்தங்கள் முடிந்ததும், குந்தளனைத் தாக்கச்சென்று அவர்கள் அரசனாகிய ஆஹவமல்லனையும் அவன் மக்கள் விக்கியையும் விஜயாதித்தனையும், சங்கமய்யனென்னும் தளகர்த்தனுடன் தோற்கடித்து, கண்டப்பய்யன் கங்காதரன் என்னுமிரு சேனாநாயகர்களைக்கொன்று, கொள்ளிப்பாக்கை என்னுமிடத்தில தீயிட்டுத்திரும்பினான். ஆஹவமல்லனென்பவன், சாளுக்கியனாகிய முதல் ஆஹவமல்ல சோமீசுவரன (கி. பி. 1044-1068); விக்கியென்பவன் பெயர் விக்கிரமாதித்தன் (கி. பி. 1056-1076; 1126.) மற்றவன் பெயர், விஷ்ணுவர்த்தனவிஜயாதித்தன் எனப்படும் (கி. பி. 1064-1074).

இச்சண்டைகள் முடிந்தபின் ஈழத்தின்மேற் சிந்தைசென்றது. உடனே படையெடுத்துப் போனபோது விக்கிரமபாகு, விக்கிரமபாண்டியன், வீரசலாமேகன், ஸ்ரீவல்லபமதனராஜனென்பவர்கள் இவனை எதிர்த்தார்கள். சிறிய போர் நடந்ததும் இவர்கள் தோல்வியடைந்தனர். மேற்கூறிய விக்கிரமபாண்டியனென்பவன் ஈழத்துக்குக் குடிவந்தவனென்றும், இவ்வாறு வருதற்குமுன் "தண்டமிழ்முழுது" மரசாண்டவன என்றும் தெரிகிறது. "விக்கிரமபாண்டியன் பருமணி மகுடமும் காண்டகுதன்னதாகிய கன்னகுச்சியும்" இழந்து, ஈழஞ் சென்று அவ்விடத்துச் சோழர்களால் பாதிக்கப்பட்டு முடியிழந்தான்.

வீரசலாமேகன் மாத்திரம் வெருகஷ்டங்கட்குட்படுத்தப்பட்டான். இராஜாதிராஜன், அவன் தமக்கையையும் பெண்டாட்டியையும் பிடித்துக் கொண்டு அவன் தாயையும் மூக்கரிந்து கடைசியாக வீரசலாமேகனையும் கொன்று விட்டான்.

இவ்விஷயங்களெல்லாம் இவ்விராஜாதிராஜன் மெய்க்கீர்த்தியில் மாத்திரமன்றி, இலங்கைச்சரித்திரமாகிய மகாவமிசத்திலும் எழுதப் பட்டிருக்கிறது.

இன்னமொருக்கால் குந்தளரோடு போர்புரியச்சென்று, இந்த முறை அவர்கள் இராஜதானியாகிய கம்பிலியைப் பிடித்துக்கொண்டு அங்கிருந்த சளுக்கியவாசர்களுடைய அரண்மனையை இடித்தெறிந் தான். இச்சண்டைகளிலெல்லாம் இவன் தன் தம்பியாகிய இராஜேந் திரதேவனென்பவனால் மிக்க உதவிபெற்று வந்தான். கடைசியாக இவ்விருவரும் சளுக்கியருடன் கொப்பத்தில் போர் புரியும்போது, அச்சண்டையில் இராஜாதிராஜன் உயிரிழந்தான். இவ்வரசனுக்கு ஜயங்கொண்ட சோழனென்னும் பெயருமுண்டு.

---

## ஒன்பதாம் அதிகாரம்.

கி. பி. 1052-ல் இராஜாதிராஜனுக்குப் பிறகு, இராஜேந்திர தேவன் இராஜ்யம்பெற்றான். இவனுக்கு விஜயராஜேந்திரதேவனென் னும் பெயருண்டு என்பது, "டன்பு கல்யாணபுரமும், கொல்லா புரமும் சொண்டருளி அபிஷேகஞ்செய்தருளின பெருமாள் விஜய ராஜேந்திரதேவர்"* என்று ஒரு சாஸனத்துக் கூறியிருப்பதால் விளங்கும். இவன், தன் தமையனைப்போலவே, தானும் பலநாடுகளைத் தன்னுற்றார்க்கு வழங்கினதாகக் கூறுகிறான்.

வழக்கம்போல, இவ்வரசனும் பட்டம்பெற்ற நாள்முதல் சளு க்கியருடன் யுத்தஞ்செய்யத் தலைப்பட்டான். இவன் கொப்பத்துச் செய்த சண்டையில் இராஜாதிராஜன் மடிந்தானென்று முன்னமே சொன்னோம். இப்போரினிறுதியில், இவன் கொல்லாபுரத்தைக்கைப் பற்றிக்கொண்டு அவ்விடத்து ஓர் ஜயஸ்தம்பம் நட்டான். விஜய

* Ep. An. Rep. for 1898—9, No. 5 of 1899.

ராஜேந்திரதேவன் குந்தலத்துக்குப் படையெடுத்துச் சென்று, ஆஹவமல்லனை மறுபடியும் கொப்பத்து எதிர்கொண்டு பொருததில், முதன்முதற் சிறிது அபஜயங்கிடைத்தது. தானும் தன் யானையும் காயப்பட்டதோடு தனயானைச் சேவகரெல்லாரும் இறந்தார்கள். இதற்குள் ஒரு புதிய சோழசைன்னியம் உதவிக்குவந்து சேர்ந்தது. சாளுக்கியர் தோல்வியடைந்து, ஆஹவமல்லன் ஓடநேர்ந்தது. சாளுக்கிய தண்டநாயகர்களிற் பலரும் மடிந்தார்கள். அவர்களிற் சிலர், ஜயசிங்கன், புலகேசி, தசபன்மன், அசோகையன், ஆரியன், பொட்டையன், நன்னிநுளம்பன் என்பவர்கள். ஓடித் தப்பினவர், வன்னிதேவன், துத்தன், குண்டமையன் என்பவர்கள்.

இவ்யுத்தத்தில் விஜயராஜேந்திரன் சாளுக்கியருடைய சத்துருபயங்கரன், கரபத்திரன், மூலபத்திரனென்னும் மூன்று பட்டத்து யானைகளையும், மற்றும் பலயானைகளையும், அவர்களுடைய வராகக் கொடியையும், சத்தியவ்வை, சாங்கப்பை என்னும் இராஜபத்தினிகளையும் பிடித்துக்கொண்டான்.

இவ்வரசன் காலத்து, ஈழமண்டலம் மறுபடியும் ஜயிக்கவேண்டியதாயிற்று. இவனும் மற்றொரு மானாபரணனையும், வீரசலாமேகனையும் தலைகொண்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறான். இவர்கள் முன்னமே கூறிய இருவரல்லர். ஏனெனில், இம்மானாபரணன் பாண்டியன் என்றும், வீரசலாமேகன் கலிங்கனென்றுங் கூறப்பட்டிருக்கிறது. ஆயின் இவர்கள் இன்னாரென்று விளங்கவில்லை. இப்பெயர்களையுடையவர் இருவரிருந்தார்களென்று மகாவமிசத்தால் தெரியவருகிறது. ஈழம் இவன் கைக்கீழடங்கியிருந்ததென்பதற்கு ஐயமேயில்லை. இவ்வரசன் காலத்துச் சாஸனங்கள் சில அவ்விடத்தில் இருக்கின்றன.

இவன் மகளாகிய மதுராந்தகி என்பவள், முதலாவது குலோத்துங்கனுக்கு வாழ்க்கைப்பட்டாள். இவ்வரசன் யுத்தங்களிலேயே உயிரிழந்திருக்கவேண்டும். ஏனெனில், இவனுக்கு யானைமேற்றுஞ்சிய தேவர் என்றொரு பெயரிருக்கிறது.

இவ்வரசன் அரசாட்சியில் கி. பி. 1055-ல் ஓர் க்ஷாமம்வந்தது என்பது அடியில் வருவனவற்றால் விளங்கும். "முன்பு கலிபாண

புரமும் கொல்லாபுரமும் கொண்டருளி யானைமேற்றுஞ்சியருளினபெருமாள் விஜயராஜேந்திரதேவர்க்கு யாண்டுமூன்றாவது, காலதோஷமுண்டாய், ஊர் பயிரேற்றுகைக்குப் போனகப்பழநெல் விச்சும் நெல்லுங் கொள்கைக்கும், குலைகள் அட்டுகைக்கும், குரம்புகள்கொள்ளுகைக்கும் இத்தேவர் (ஆபத்சகாயேசுரர்) ஸ்ரீபண்டாரத்து நாங்கள் வாங்கின கொள்கையொன்றினாற் பொன்." * என்று தஞ்சாவூர் ஜில்லாவில் ஆலங்குடிச் சாஸனமொன்று கூறுகின்றது. சோழசக்கரவர்த்திகள் அடிக்கடி செய்துவந்த யுத்தங்களால் பொக்கிஷங்கள் வறண்டு, வரிகளும் உயர்ந்து, குடிகள் க்ஷாமத்துக்குட்படவேண்டி நேர்ந்ததாகத் தோன்றுகிறது.

இராஜேந்திரதேவனுடன் இராஜகேசரி இராஜமஹேந்திரன் என்னும் சோழசக்கரவர்த்தி, சிலகாலம் அரசாண்டான். கலிங்கத்துப் பரணியில்,

"பனுவலுக்கு முதலாய வேத நான்கிற்
பண்டுரைத்த நெறிபுதுக்கிப் பழையர் தங்கள்
மனுவினுக்கு மும்மடிநான் மடியாஞ் சோழன்
மதிக்குடைக்கீ ழறந்தளிர்ப்ப வளர்ந்த வாறும்" †

என்றும், விக்கிரமசோழனுலாவில்,

"பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பன்மணியா
லாடரவப் பாய லமைத்தோனும்."

என்றும் புகழப்பட்ட அரசனிவனே இவ்வரசன் ஸ்ரீரங்கத்துக் கோயிலில் ஓர் பிராகாரத்தைக் கட்டிவைத்தானென்றும், அதனால் அப்பிராகாரம் இராஜமஹேந்திரன் திருவீதியென்னும் பெயர்பெற்றது என்றும "கோயிலொழுகு" என்னும் வைஷ்ணவகிரந்தத்திலும், குரு பாரம்பரையிலும் எழுதியிருக்கிறது. இவ்வரசனைக்குறித்து விசேஷமாக வொன்றுந்தெரியவில்லை.

---

* See Ante. p. 21.

† இராசபாரம்பரியம், பா-28,

பரகேசரிவர்ம்மன்

இராஜேந்திரசோழதேவன் I

- இராஜாதிராஜன் (கி. பி. 1018)
  - இராஜமகேந்திரன்
- இராஜேந்திர தேவன் (கி. பி. 1052)
  - மதுராந்தகி × குலோத்துங்கன் I
- வீரராஜேந்திர தேவன் (கி. பி. 1062)
  - அதிராஜேந்திரன்
  - பெண் × குந்தள விக்கிரமாதித்தன்
- அம்மங்காதேவி × சாளுக்கிய இராஜராஜன் I
  - இராஜேந்திரசோழ தேவன் II. குலோத்துங்கன் I × மதுராந்தகி

# பத்தாம் அதிகாரம்.

---

வீரசோழியமென்னும் தமிழிலக்கியத்தில் "எல்லாவுலகு மேவிய வெண்குடைச் செம்பியன் வீரராசேந்திரன்" *என்று குறிக்கப்பட்டிருக்கிற வீரராஜேந்திரனென்பவன் இராஜமஹேந்திரனுக்குப்பின் சோழராஜ்யாதிபதியானான். இவன் காலத்துக்குமுன் ஆரம்பித்த சாளுக்கிய யுத்தம் இன்னமும் முடிவுபெறவில்லை. இவன் ஆஹவமல்லன் மகன் விக்கிரமாதித்தனைக் கங்கபாடியினின்றும் துங்கபத்திரைக்கப்பால் துரத்திவிட்டு, இரண்டாமுறை சாளுக்கிய மஹாதண்டநாயகனாகிய, வனவாசியரசன் சாமுண்டராயனைக் கொன்று, இவன்மகன் இருகையன் மனைவி நாகலையென்பாளை மூக்கறுத்துத் திரும்பினான். பிறகு துங்கையும் பத்திரையும் கூடும் கூடலசங்கமத்து இன்னமொருகால் போர்நடக்க, அதில் சாளுக்கிய தண்டநாயகர்களிற் கேசவய்யனையும், மாறய்யனையும் வீரராஜேந்திரன் கொன்று, ஆஹவமல்லன் பாசறையை முற்றிப் பிடித்துக்கொண்டான். அப்பொழுது அவன் பட்டத்து யானையாகிய புஷ்பகப்பிடியும், அவன் மனைவியரும், வராகக்கொடியும் இவன் கையிலகப்பட்டுக்கொண்டன.

இவ்வீரராஜேந்திரனால் பொத்தப்பிநாட்டு அரசன் ஒருவனும், கோளராஜன் ஒருவனும் ஜயிக்கப்பட்டார்கள். தாராதேசத்து ஜனநாதன் என்பவனும் அவன் தம்பியும் இவனால் தோற்கப்பட்டார்கள். பாண்டியநாடு மறுபடியும் இவனாற் கைக்கொள்ளப்பட்டது.

தென்தேயத்துச் சண்டைகளெல்லாம் ஒருவாறு முடிந்து வருகையில் அபஜயமடைந்த ஆஹவமல்லன் தன்கையால் வீரராஜேந்திரனுக்கு ஒரு கடிதமெழுதிவிடுத்துச் சண்டைக்குக் கூடலில்வந்து சேரும்படி அழைத்தான். இக்கடிதத்தின் வேண்டுகோட்படி, வீரராஜேந்திரன் மறுபடியும் கூடலுக்குத் தண்டெடுத்துச் சென்று, ஆஹவமல்லனுக்காக ஒருமாசகாலம் காத்திருந்து, அவன் வாராதிருக்கக்கண்டு நாட்டை ஆங்காங்குக்கொளுத்திவிட்டு, அவன் இராஜதானிகளிலொன்

---

* சந்திப்படலம்-௩.

றாகிய கம்பிலியைத் தீக்கிரையாக்கி, துங்கபத்திரைக் கரையில் கரடிக்கல்லெனுமிடத்தே ஒரு ஜயஸ்தம்பத்தையும் நாட்டிவைத்தான். இவ்வளவு தூரம் நடந்தபின், ஆஹவமல்லன் மகன் விக்கிரமாதித்தன் வந்து வீரராஜேந்திரனிடம் சரணமடைய, இரட்டபாடியை அவனுக்குக் கொடுத்து, குந்தளராஜ்யத்துக்கு இளவரசுப்பட்டமும் கட்டி, தன் மகளையும் அவனுக்கு மணம்புரிவித்து வெங்கைநாடு நோக்கிச் சென்றான். அம்மண்டலத்தைத் தன்னுட்படுத்தக் கருதி, கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள விஜயவாடையில் சத்துருக்களை எதிர்த்து ஜயித்துக் கலிங்கமும் சக்கரக்கோட்டமும் பற்றினான். இவ்வாறு ஜயித்த நாடுகளை, முதற்குலோத்துங்கன் சிற்றப்பனாகிய விஜயாதித்தனை ஆளும்படி நியமித்துத் திரும்பினான்.

---

## பதினொராம் அதிகாரம்.

வீரராஜேந்திரனுக்குப்பின், அவன் மகனான அதிராஜேந்திரன் சோழசிம்மாசனம் ஏறினான். முன்னமே நாம் சொன்னபடி வெங்கிநாடு வீரராஜேந்திரனால் விஜயாதித்தனுக்குக் கொடுக்கப்படவே, அந்நாட்டு இளவரசனாகிய குலோத்துங்கன் நாடிழந்து துன்புற்றிருந்தான். அப்படியிருக்குநாளில் அதிராஜேந்திரன் என்னும் வன்மையற்ற சோழசக்கரவர்த்தி பட்டந்தரிக்கவே, அவனைப்பட்டத்தினின்றும் நீக்கித் தான் அரசனாகவேண்டும் என்னும் எண்ணம் குலோத்துங்கனுக்கு ஜனித்தது. அஃது உத்தேசமாய், மேனாட்டுச் சாளுக்கியனாகிய விக்கிரமாதித்தன் தம்பியான இரண்டாம் சோமீசுவரனுடன் சிநேகித்து, இருவருமாகச்சேர்ந்து, சோழராஜ்யத்தின்பேரில் படையெடுத்துச்சென்று, அதிராஜேந்திரனைக்கொன்று, பரகேசரி இராஜேந்திர சோழதேவனுக்கு தௌகித்திரபாத்தியங்கொண்டாடிக்கொண்டு, சோழராஜ்யத்துக்கு அதிபதியானான். தெற்கே சோழநாட்டில் நிகழ்ந்த விஷயங்களை யெல்லாங் கேள்வியுற்று, தன் மைத்துனனைக்கொன்ற குலோத்துங்கனைத் தண்டித்துவரவேண்டுமென்று, பெருத்தசேனையொன்றைக்கொண்டு, சாளுக்கியவிக்கிரமாதித்தன் வந்து, குலோத்துங்கனால் தோற்கப்பட்டுத் திரும்பினான். குலோத்துங்கன் தந்தைவழியில்

சாளுக்கியன்; தாய்முறையில் சோழன். இவன் தந்தையாகிய சாளுக்கிய ராஜராஜன் (1) சோழசக்ரவர்த்தியாகிய இராஜராஜனு (1) க்குத் தௌகித்திரனும், இராஜேந்திர சோழதேவனுடைய மாப்பிள்ளையுமாக வேண்டும். குலோத்துங்கன் தாயாகிய அம்மங்காதேவி தனக்குப் பிள்ளை பிறந்ததும் அதற்கு இராஜேந்திரசோழனென்று தன தகப்பன் பெயரிட்டாள். இப்பெயரே இவனுடைய இராச்சிய வருஷம் 4-வரை வழங்கிவந்தது. பிறகுதான் இவன் குலோத்துங்கனென்னும் நாமதேயத்தைப்பூண்டான். மேற்கூறிய இராஜேந்திரன், குலோத்துங்கன் என்று இருபெயர்களைத் தவிர்த்து இவனுக்கு அநபாயன், அபயன், கரிகாலன், ஜயதரன * என்னும் பலபெயர்களும் உள்ளன. திருவாரூர்ச்சாஸனம் ஒன்றில் இவன் அநபாயன் என்று அழைக்கப் படுகிறான். இவனைக்குறித்துப் பெரிய புராணத்தில்,

"சேயவன்றிருப்பேரம்பலஞ்செய்ய
தூயபொன்னணிசோழனீடுழிபார்
ஆயசீர் அநபாயனரசவை"†

என்றும், "கொற்றவனநபாயன்" "மன்னுசீரநபாயன் வழிமுதல்"‡

"சென்னியபயன்குலோத்துங்கசோழன்றில்லைத்திருவெல்லை
பொன்னின்மயமாக்கியவளவர்போரேறென்றும்புவிகாக்கும்
மன்னர்பெருமானநபாயன்வருந்தொன்மரபின்முடிசூட்டுந்
தன்மைநிலவுபதியைந்திலொன்றாய்விளங்குந்தகைத்தவ்வூர்"§

எனவும் தண்டியலங்காரத்து,


* தில்லைநடராஜர் கோவில் உள்பிரகாரத்து வடசுவரில் கண்ட சாஸனம்:—
"நானிலத்தை முழுதாண்ட ஜயதரர்க்கு நாற்பது நாலாண்டில்
மீனனிகழ் நாயற்று வெள்ளிபெற்ற உரோகணிநாளிடபம்போதால்
தேனிலவுபொழிற்றில்லைநாயகர்தங்கோயிலெல்லாம்செம்பொன்மேய்ந்
தோனவருந்தொழுதேத்தும்ராஜராஜன்குந்தவைபூவிங்கையாமே." தா

† பெரியபுராணம். பாயிரம். பா. 8.

‡ ஷை திருவாரூர்ச்சிறப்பு. பா. 13.

§ ஷை சண்டேசுரநாயனார் பா. 8.

## சோழ—சாளுக்கியர் உறவுமுறை.



"பூதலத்து ளெல்லாப் பொருளும் வறியராய்க்
காதலித்தோர் தாமே கவர்தலா—னீதி
யடுத்துயர்ந்த கீர்த்தி யனபாயா யார்க்குங்
கொடுத்தியெனக் கொள்கின் றிலம்"

"இகன்மதமால் யானை யனபாய னெங்கோன்
முகமதியின் மூரி நிலவா—லகமலர்வ
செங்கயற்க ணல்லார் திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப் பல"

"மூவாத் தமிழ்பயந்த முன்னூன் முனிவாழி
யாவாழி வாழி யருமறையோர்—காவிரிநாட்
டண்ண லனபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை."

எனவும் பலவாறு புகழ்ந்திருக்கின்றது.

கலிங்கத்துப் பரணியிற் கடைசிவரை இவன் அபயனென்றே குறிக்கப்படுகிறான். இந்நூலில் ஓர் இடத்தே இவன் கரிகாலன் என்று பெயர் கூறப்படுகிறான். சிற்சிலவிடங்களில் அந்நூல் இவனை ஜயதரனென்றும் குறிக்கின்றது.

இவன் மாமன்மகளாகிய மதுராந்தகியைத் தவிர்த்து இவனுக்கு ஏழிசைவல்லபி, தியாகவல்லி என்னும் இருமனைவியருமிருந்தார்கள். மதுராந்தகிக்கு தீனசிந்தாமணி யென்று மற்றோர் பெயரும் உண்டு. இவளிருந்தவரை இவள் பட்டமகிஷியாயிருந்தாள். இவட்குப்பின் தியாகவல்லி பிரதானபத்தினியாயினள். ஏழிசைவல்லபி கடைசி வரையில் இரண்டாம் பெண்டாட்டியாகவே இருந்தனள். இவன் மனைவியரிடம் வெகு மரியாதை வைத்திருந்தானென்று 'சென்னி யாணையுடனாணைநடத்துமுரிமைத்தியாகவல்லிநிறைசெல்வியுடன் மல்கிவரவே" என்று கலிங்கத்துப்பரணி தெரிவிக்கிறது.

குலோத்துங்கனுக்கு மக்கள் எழுவரிருந்தார்கள். அவருள் விக்கிரமசோழன் இவன்பின் பட்டம் பெற்றான். குலோத்துங்கனுக்கு அம்மங்கையென்று ஒரு பெண்ணும், குந்தவை (III) என்னும் சகோதரி ஒருத்தியு மிருந்தார்கள்.

கலிங்கத்துப்பரணியில் இராஜேந்திரசோழன் குலோத்துங்கனைச் சுவீகாரஞ்செய்துகொண்டானென்று சொல்லப்பட்டிருக்கிறது;* இந்த மாதிரியாக ஏதோவொருகாரணம் கற்பித்துக்கொண்டு சோழராச்சியத்துக்கு மன்னனானான் என்பது நன்றாய் விளங்குகிறது.

சோழ ஆதிபத்யத்தை ஸ்திரப்படுத்தியதும் முதன்முதல் தனது பிதிரார்ச்சிதமாகிய வேங்கிநாடு கைப்பற்ற எத்தனித்துப் படையெடுத்துச்சென்று, அதைத் தன் சிற்றப்பன், விஜயாதித்தனினின்றும் பிடுங்கிக்கொண்டு தன் இரண்டாமகனாகிய இராஜராஜனைப்† பிரதிநிதியாக வைத்துத்திரும்பினான். இரண்டு வருஷங்களுக்குப் பின் இவன் பிரதிநிதியாயிருக்கச் சமர்த்திலனென்றோ மற்றெக்காரணத்தாலோ அவ்வுத்தியோகத்தினின்று நீக்கப்பட்டான். இவன்பின் இவன் தம்பியாகிய வீரசோழன் வேங்கிநாட்டுக்கனுப்பப்பட்டான். இவன் கி. பி. 1078-வரையில் அதை அரசாண்டான்.

சோழநாடும் வேங்கிநாடும் தனதாகித் தகுந்த பலமும் அடையவே, வேற்றுநாடுகளையும் கைப்பற்றவேண்டுமென்னும் ஆசை குலோத்துங்கனுக்குண்டாயிற்று. இவன் இளம்பிராயத்திலேயே சக்கரக்கோட்டத்தில் தாராதேசத்தரசனை வென்றும், வைராகரத்தில் யானைகளைப் பிடித்தும் மேன்மையடைந்தவனென்றுந் தெரிகிறது.‡

தான் சோழமண்டலமடைவதில் அதிருப்தியடைந்து தன்னைத் தாக்கவந்த குந்தளவரசனாகிய விக்கிரமாதித்தன்மேல் முதன் முதல் படையெடுத்துச் சென்று, விக்கிரமாதித்தனுக்குப் பிரதிநிதியாக வனவாசியை யாண்டுகொண்டிருந்த அவன் தம்பி ஜயசிங்கனிடமிருந்து வனவாசிப்பற்றைப் பிடித்துக்கொண்டான் மறுபடியும்

* "கங்கைகொண்டசோழன்றேவி,குலமகடன்குலமகனைக்கோகநத மலர்க்கையாலெடுத்துக்கொண்டே". அவதாரம் பா. 5.

"அவனிபர்க்குபுத்திரருமடையாளமவயவத்தினடையநோக்கி யிவனெமக்குமகனாகியிரவிகுலம்பாரிக்கத்தகுவனென்றே" ஷை 6

† இவன் கீழ்நாட்டுச் சாளுக்கியவம்சத்தில் இரண்டாம் இராஜராஜன்.

‡ "புரமெரிமடுத்தபொழுததுவிதுவெனத்திகிரிபுகையெரிகுவிப்பவயிரா கரமெரிமடுத்தாசர்கரமெதிர்குவிப்பதொருகடவரைதனைக்கடவியே." அவதா, பா. 21

"மனுக்கோட்டமழித்தபிரான்வளவர்பிரான்றிருப்புருவத் தனுக்கோட்டமன்கோட்டம்பட்டதுசக்கரக்கோட்டம்." ஷை பா. 23.

இரண்டாமுறை விக்கிரமாதித்தன்மீது படையெடுத்துச்செல்ல, அவனும் குலோத்துங்கனை எதிர்கொண்டு (கோலார் ஜில்லாவிலுள்ள) நங்கிலி என்னுமிடத்துச் சந்தித்து, தோல்வியடைந்து புறங்காட்டியோடத் தலைப்பட்டான். அப்பொழுது குலோத்துங்கன் அவனை மணலூர் வழியாய்த் துங்கபத்திரைக்கப்பால் துரத்தியடித்து, அவன் சமுத்திரத்தில் புக்கு ஒளிக்கும்படி செய்தான். இச்சண்டையில் குந்தளர் இராஜதானியாகிய கலியாணபுரம் குலோத்துங்கன் வசமாயிற்று. இதைத்திரும்பவுங்கைப்பற்றச் சாளுக்கியர் வெகு பிரயாசைப்படவேண்டியிருந்தது என்று பில்ஹணகவி விக்கிரமாங்கதேவ சரித்திரத்தில் கூறியிருக்கிறார். இவ்யுத்தத்தின் நிகழ்ச்சியொன்றில்தான் குலோத்துங்கன், கலிங்கத்துப்பரணியிற் கூறியவாறு, நங்கிலியில் ஆயிரயானைகளைப் பிடித்துக்கொண்டிருக்கவேண்டும்.

வடநாடுகள் தன்வசப்பட்டதும் தென்னாடுகளை வெல்ல முயன்றான். பாண்டியர்கள் முதலில் தாக்கப்பட்டார்கள். அப்பொழுது ஒரு பாண்டியன் சண்டையிலிறந்தான். இச்சண்டையில் மன்னார் குடாக்கடலைச்சார்ந்தநாடும், பொதியமலையைச்சார்ந்த கூற்றமும், கன்னியாகுமரியும், கோட்டாறும் இவனதாயின. பாண்டியர்கள், பிற்காலத்தே தமதென்றுதிருக்கவேண்டி எல்லைகளை நன்குவகுத்து, அவ்வவ்விடங்களிற் சேனைகளை நிறுத்திக் தன்னால் ஜயிக்கப்பட்ட நாட்டைப் பத்திரப்படுத்திக்கொண்டான். இதன்பின் இப்பொழுது மலையாளமென்றுபெயர்பெறுங் குடமலைநாட்டைக்கைக்கொண்டான். இந்நாட்டைத் தாக்கியகாலத்து, எதிர்த்து நின்ற மலையாளிகள், வெகு தைரியத்துடன் போர்பொருது, எல்லாரும் மாண்டார்கள். குலோத்துங்கன் விழிஞத்திலும் சாலையிலும் தன் சைன்னியங்களை நிறுத்தி, காந்தளூர்ச்சாலையில் சேரர்கள் கலங்களை இரண்டு தடவை யறுத்துத் திரும்பினான்.

யுத்தங்களெல்லாம் ஒருவாறு ஓய்ந்து சிறிதுகாலம் சௌக்கியமாய் இராச்சியபாரந் தாங்கி வருகையில், கலிங்கத்தரசனாகிய சோடகங்கன், கப்பங்கட்டவில்லை. பல வருடங்களாய்த் தராமல் மறுத்து

வருகிறான்* என்று கேள்வியுற்று, தன் சேனாநாயகனான கருணாகரத் தொண்டைமானை(யும் தன்மகன் விக்கிரமசோழனை)யும் அனுப்பிக் கலிங்கத்தையும் வென்று தன்னாட்டுடன் சேர்த்துக்கொண்டான். இந்நாடு இவன் கைவசப்பட்டதென்பதில் ஐயமேயில்லை. இவன் காலத்துத் தமிழ்ச் சாஸனம் ஒன்று சிம்மாசலத்தில் இருக்கிறது. கலிங்கம் ஜயித்த விஜயத்தைப் புகழ்ந்துதான் கலிங்கத்துப்பரணி பாடப்பட்டது.

பலவகையாலும் பெருமையுற்று வாழ்ந்துவருநாளில், இவ்வரசன் தன் 14-வது ஆண்டில், 'திரிபுவனச் சக்ரவர்த்திகள்' என்னும் பட்டப் பெயர் தரித்தான். இது முதல் இராச்சியத்துக்கு வேண்டும் நன்மைகளைத் தேடமுயன்றான். அதற்கு அங்குராரப்பணம் போல முதன் முதல் "சுங்கங்களைத்தவிர்"த்தான். இதனாலே ஜனங்கள் இவனை மிகவும் வாழ்த்தி "சுங்கந்தவிர்த்தசோழ" னென்று அழைக்க ஆரம்பித்தார்கள். பின்பு இராச்சிய முழுதும் புதிதாக அளப்பித்து, ஆறிலொரு கடமையாக வரியேற்படுத்தினான். குடிகட்கு உழுதொழிலுக் குபயோகப்படும்படி பல ஏரிகளையுங் கட்டி, காடுகளை வெட்டிப் பட்டணங்களையுண்டாக்கக் கொடுத்தான். ஊர்கட்கழகாக, பல விஷ்ணுவாலயங்களும் சிவாலயங்களும் கட்டுவித்து, தன் தாய்வழியார் வழக்கத்தின்படியே, தானும் சிதம்பரத்தில், பேரம்பலத்தைப் பொன்வேய்ந்தான். இத்தொழிலால் இவன் "பேரம்பலம் பொன்வேய்ந்த சோழன்" என்னும் பெயர் பெற்றான்.

---

*......இறைகளொழியவின்றவரு
முனர்கொலென்றருளுபொழுதிலே-க. ப. காளிக்குக்கூளிகூறியது. பா. 26

கடவதந்திறைகொடுடையவந்தரசர்
கழல்வணங்கினர்களிவருடன்

வடகலிங்கர்பதியவனிரண்டுமிசை
வருகிலன்றிறைகொடெனலுமே. ௸ பா. 27.

எளியனென்றிடிலும்வலியருன்றரணம்
இடியகம்படைஞர்கடிதுசென்

றளியலம்புமதமலைகள்கொண்டணைமின்
அவனையுங்கொணர்மினெனலுமே-௸ பா. 29.

குலோத்துங்கன் சிறந்த அரசனாயிருந்ததுமன்றிச் சிறந்த கல்விமான். கற்றோர்க்கு உதாரன். இவன் காலத்திற்றான், இவனுடைய வேண்டுகோளின்மேல், சேக்கிழார் பெரியபுராணம் பாடினார். இவன் காலத்திலேதான், விசிஷ்டாத்துவைதமத ஸ்தாபகரான ஸ்ரீராமாநுஜாசாரிய ரிருந்தார். ஆயின், இவ்வரசன், அவ்வாசாரியரிடத்து, ஒருசிறு தவறுதலால், அபசாரப்பட நேர்ந்தது. இவன் தனக்குத் தீங்கு செய்வானென்னும் பயத்தால் ஸ்ரீராமாநுஜாசாரியர், போசளராச்சியத்தில், தொண்டனூரிலே ஓடி ஒளிக்கவேண்டியதாயிற்று.

இவ்வாசாரியர்விஷயத்தில்மாத்திரம் இவன் கொடியவனாயிருந்தானேயன்றி, மற்ற மதஸ்தர்களை இவன் ஒறுவித்தும் உபத்திரவஞ் செய்தவனல்லன். குலோத்துங்கன் சுத்த சைவனாயினும் மற்றைய மதங்களையும் நன்கு மதித்துவந்தான். வைஷ்ணவ, சைவ, ஜைன, பௌத்தக் கோயில்கடோறும் இவன் சாஸனங்களைக் காணலாம். நாகபட்டினத்துப் பிரபலமான இராஜராஜப் பெரும்பள்ளிக்கும் இவ்வாசன நில முதலியன தானஞ்செய்திருக்கின்றான.* மன்னார்குடி ராஜகோபாலஸ்வாமி கோயில் இவன் பெயராற் கட்டப்பட்டது. இதற்குக் குலோத்துங்கவிண்ணகரம் என்பது பழம்பெயர். இவனுக்குத் திருநீற்றுச்சோழனென்னும் பெயருண்டு என்பது, இவன் முன்னலூர் என்னும் கிராமத்தின் பழம்பெயரை நீக்கித் திருநீற்றுச்சோழநல்லூர் எனத் தன் பெயரால் திரிசூலத்து தர்மபுரீசுவரர்க்குக் கொடுத்தானென்பதனால் விளங்கும்.†

குலோத்துங்கன் 49-வருஷமாசாண்டான். அஃதாவது கி. பி. 1070—1118: 9 ஆகிறது. தானிறந்தற்கு 8-வருஷங்களுக்குமுன்னதாகவே, ராஜ்யகாரியங்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ளவும் தனக்கு உதவியாயிருக்கவும் உத்தேசித்து, விக்கிரமசோழனுக்கு இளவரசுப் பட்டங்கட்டினான்.

---

* The small Leiden Grant.

† Ep. An. Rep. for 1901-2 No. 312 of 1901.

## சோழவம்சசரித்திரச்சுருக்கம்.

விக்கிரமசோழன்.

(கி. பி. 1118—)

|

குலோத்துங்கசோழன் II

|

இராஜராஜன் II

:

இராஜாதிராஜன் II

:

குலோத்துங்கன் III

திரிபுவனவீரதேவன்.

|

இராஜராஜன் III

|


இராஜேந்திரசோழன் III

:


வீரசோழன்

|

வீரசம்பன்.




முதற்குலோத்துங்கன் ஆட்சியிறுதியிலிருந்த
சோழ ஏகாதிபத்தியத்தின் விஸ்தீரணம்.


சோழசக்கரவர்த்திகள்.
இராஜராஜதேவன் I
இராஜேந்திர சோழதேவன் I.
குந்தவை.
விஜயராஜேந்திர தேவன
இராஜமஹேந்திரன்
இராஜராஜன் II.
வீரசோடன்
விக்கிரமசோழன்
மற்றும் ஐவர்
கீழ்நாட்டுச்சாளுக்கியர்கள்
விமலாதித்தன்
சாளுக்கிய இராஜராஜதேவன் I
அம்மங்காதேவி
சோழசாளுக்கியனாகிய இராஜேந்திரசோழதேவன் II குலோத்துங்கசோழதேவன் I
மதுராந்தகி

# பன்னிரண்டாம் அதிகாரம்.

—:◌:—

விக்கிரமசோழனுக்கு கி. பி. 1118-ல் பட்டாபிஷேகமாயிற்று. இவனும் கலிங்கஞ்செற்றதாக இவன் மெய்க்கீர்த்தி கூறுவதன்றி, உலாக்களிலும், இவன் கலிங்கத்துப்பரணி கொண்டானென்று சொல்லப்படுகிறது. ஆயின் இவன் கலிங்கத்துக்குத் தன்னாட்சிக்காலத்திற் படையெடுத்துப் போகவில்லை. தன்தகப்பன் காலத்தே, கருணாகரத் தொண்டமானுடன்சென்று...கலிங்கத்திற் போர் செய்ததை அது குறிக்கின்றதேயொழிய வேறில்லை. இவன் தன் தமையன் வீரசோழனுக்குப்பிறகு வேங்கையில் பிரதிநிதியாயரசாண்டுகொண்டிருந்து, தன் தகப்பன் குலோத்துங்கசோழனது கடைசிநாட்களில் அவனுக்கு உதவியாக அவனிருந்தவிடத்துக்கு வந்துசேர்ந்தான். அப்பொழுது, வெலநாண்டு என்னும் நாட்டரசனாகிய சோடன் என்பவனைக் குலோத்துங்கன் வேங்கையையும் ஆள உத்தரவளித்தான். ஆயின் பிற்காலத்தே இவன், கீழ்நாட்டுச் சளுக்கியவிக்கிரமாதித்தனுடன் சேர்ந்து வேங்கையை மெள்ளத் தன்னதாக்கிக் கொண்டுவிட்டான்; பிறகு விக்கிரமசோழன் அதனை வென்று கைக்கொண்டான்.

இவ்வரசன் 18-வருஷமரசாண்டான். இவனுடைய ஆறாம் வருஷத்தில் நாடெங்கும் பரவிய ஓர் பெருத்த க்ஷாமம் வந்தது; இது, "திருப்போ நகரப் பெருங்குறி மகாசபையோம்; இவ்வூர் வடபிடாகை திருச்சடைமுடிமகாதேவர் கோயிலிற் கூட்டங்குறைவறக் கூடியிருந்து சிலாலேகை பண்ணின பரிசாவது; காலம்பொல்லாதாய் நம்மூர் அழிந்து குடியோடிப்போய்க் கிடந்தமையில்" என்று கோவிலடிச்சாஸனம் ஒன்றிலும்,* "இக்காசுபதின்மூன்றும் இவ்வாணிமாசத்து இப்படிக்கொள்ள வேண்டித்து, காலப்பொல்லாங்கை பரிஹரித்துக்கொண்டு ஜீவிரக்ஷித்துக்கொடுக்கைக்காக" என்று உடையார் கோயிற் சாஸனமொன்றிலும், †"இவ்வூர், யாண்டு ஆறாவது, பெருவெள்ளங்கொண்டு வரும் போகமும்

---

* Ep. An. Rep. for 1960—1. No. 276 of 1901.

† Ibid for 1901—2. No. 404 of 1902.

அழிந்து, அனர்த்தப்பட்டு இவ்வூரிறை இறுக்கைக் குடியில்லாமையால் இவ்வூர் நீர் நிலம் விற்றாகிலும்..." என்று திருவோத்தூர்ச்சாஸனமொன்றிலும், * "நம்மூர், யாண்டு ஆறாவது, கடமைத்தட்டுண்டாய் இத்தட்டுக்கும் பழுதாய் பாழ்நிலத்திலே சிறிது விற்றாகிலும் கடமைத் தட்டுப் போக்கறுக்கவேணுமென்று மகாசபையோம் ஸம்மதித்து..." † என்று திருவதிசாஸனம் ஒன்றிலும் கூறியிருப்பதால், வடக்கே திருவோத்தூர் முதல் தெற்கே தஞ்சாவூர் வரையாயினும் இந்த வற்கடம் குடிகளை வருத்தியிருக்கவேண்டும். தவிர இப்பஞ்சம் அதிவிருஷ்டியால்நேர்ந்ததென்றுந் தோற்றுகின்றது.

விக்கிரமசோழன் இளம்பிராயத்திலேயே வடக்கே வேங்கைநாட்டையாளும்போது தெலுங்கவீமன் என்னு மரசனொருவனைப் போரிலே ஜயித்தான். இந்தச்சோழசக்கரவர்த்திக்குத் தியாகசமுத்திரம் அகளங்கன் என்று இருமறுபெயர்களுண்டு. இவனுக்கு மனைவியரிருவர்; இவருள் முதலவளாகிய முக்கோக்கிழானடி என்பாள் இவன்பட்டந் தரித்தபின் ஒன்பது வருஷகாலம்வரையிலும் பட்டத்தரசியாயிருந்து இறந்தாள். இவளுக்குப்பின் இரண்டாமவளாகிய திரிபுவனமுழுதுடையாள் பட்டமகிஷியானாள். பிறகு அரசன் தரணிமுழுதுடையாள் என்னும் மற்றொரு மனைவியை மணந்தான்.

இவன் வைஷ்ணவமதத்தில் அபிமானமுடையான் என்று ஸ்ரீவைஷ்ணவ கிரந்தங்கள் கூறுகின்றன.‡ இவன் ஸ்ரீரங்கத்தில் தன் பெயரால் இரண்டு திருவீதிகள் கட்டிவைத்தான். அவற்றுக்கு அகளங்கன் திருவீதி, திருவிக்கிரமன் திருவீதி யென்பது பெயர்.

## பதின்மூன்றாம் அதிகாரம்.

---

விக்கிரமசோழன் மகனும் அவன்பின் முடிசூடியவனுமாகிய இரண்டாங்குலோத்துங்கன் 'குலோத்துங்கசோழன் கோவை'யிலும் உலாக்களிலும் குமாரகுலோத்துங்கனெனப்படுகிறான். இவனையும்

* Ibid for 1899—1900. No. 87 of 1900.

† Ibid for 1902—8. No. 30 of 1903.

‡ கோயிலொழுகு.

இவன்மகன் இரண்டாம் இராஜராஜனையும் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவ்விருவருமே "குலோத்துங்கசோழன் உலா" 'இராஜராஜன் உலா' என்னும் உலாக்கட்கு நாயகர்கள். இவ்வுலாக்கள்கொண்டதையொழிய இவர்கள்செயல்கள் ஒன்றும் தெரியவில்லை.

இரண்டாம் இராஜராஜனுக்குப் பிந்தியும் மூன்றாங்குலோத்துங்கனுக்கு முந்தியும் இராஜகேசரி இராஜாதிராஜனென்ற பெயருடன் (II) ஓர் அரசனிருந்தான். இவன் முன்பின்னவர்களுக்கு என்ன உறவு முறையானென்பது தெரிந்திலது.

இராஜாதிராஜன் காலத்தே, பாண்டியராஜ்யத்தின் அரசாட்சியைப்பற்றிப் பராக்கிரமபாண்டியனுக்கும், குலசேகரபாண்டியனுக்கும் விவாதம் நேர்ந்தது. பராக்கிரமபாண்டியன் சிங்களத்தரசனாகிய பராக்கிரமபாகுவைத் துணைவேண்டினன். அவன் தன் தண்டநாயகனை இலங்காபுரியை ஒரு பலத்த சைந்யத்துடன் அனுப்பினன். இலங்காபுரி வந்துசேருமுன், குலசேகரனால் முற்றப்பட்டிருந்த பராக்கிரமன், பெண்டுபிள்ளைகளோடும் கொல்லப்பட்டான். இவ்வாறு, பிரமாதம் நேர்ந்ததென்று கேள்வியுற்று, இலங்காபுரிதண்டநாயகன், பாண்டிநாட்டைஜயித்து அதனைக் கொலையுண்டபராக்கிரமன் உறவினர் யாருக்காவது கொடுப்பதென்று துணிந்து, முதன்முதல் இராமேசுவரத்தைப் பிடித்துக்கொண்டு அதன் கோயிலையும் அழித்தான். பிறகு குந்துகாலம் என்னுமிடம் அவன்வசமாயிற்று. அதில் ஓர் கோட்டை கட்டி அதற்குப் பராக்கிரமபுரமென்று தன் எஜமானன் பெயரிட்டான். இவ்வாறு சிறிதுசிறிதாகப் பாண்டிநாட்டைக் கைப்பற்றிவரும் இலங்காபுரியைத்தாக்கவேண்டி—சுந்தரபாண்டியன் பாண்டியராஜனென்றிருவரைக் குலசேகரன் அனுப்பினன். ஆனால் அவ்விருவரும் இலங்காபுரியால் தோல்வியடைந்தார்கள். இதன்பிறகும் பற்பலவிடங்களில் யுத்தம் நடக்க, சிங்களவரே வெற்றியடைந்து வந்தனர். இப்போர்கள் ஒன்றில் பாண்டிய தளகர்த்தனாகிய ஆளவந்தான் என்பவனொருவன் மடிந்தான்.

இவையெல்லாம் பார்த்துக் குலசேகரன், கொங்குநாட்டினின்று தன் மாமன்சேனைகளையும், பராக்கிரமபாண்டியன் சேனைகளிற் சித

றுண்டுபோன சிலவற்றையும், தன்னுடைய சேனையையும் ஒருங்கு சேர்த்துத் தானே யுத்தத்துக்குப் புறப்பட்டான். வெகு பெருத்த போர்கள் நடக்க முடிவிற் குலசேகரன் அபஜயப்பட்டான். சிங்களவர் பலவிடங்களைப் பிடித்துக்கொண்டு அவைகளைப் பலப்படுத்திவந்தனர். இவை இப்படி இருக்க.

கொலையுண்ட பராக்கிரமன்கடைசிமகனாகிய வீரபாண்டியன், குலசேகரன்கையிலகப்படாமல் தப்பி, மலையாளத்திற்கு ஓடி ஒளித்தான் என்பதை இலங்காபுரியறிந்து, அவனை மதுரைக்குத் திரும்பிவந்து இராச்சியத்தைப் பெற்றுக்கொள்ளப் பணித்தான். அவனும் இலங்காபுரியின் தைரியத்தால் தன்னாட்டுக்குத் திரும்பி, பராக்கிரம பாஹுவா லனுப்பப்பட்ட பரிசுகள் பலவற்றுடன் பாண்டிநாட்டையும் பெற்று இலங்காபுரியுடனிருந்து ஆண்டுவந்தான்.

இதற்குள், இலங்காபுரி கீழைமங்கலம் மேலைமங்கலமுதலிய இடங்களைப்பற்றிக்கொண்டு, கண்டதேவமழவராயனென்பவன் அவ்விடங்களை யாளும்படி நியமித்துச்சென்றான். பிறகு மானவீரமதுரை முதலிய பலவிடங்களும் சிங்களவர் கைப்பட்டன. பாசுபதம் என்னுமிடத்தில் நடந்த யுத்தத்திலே குலசேகரன்படைத்தலைவனும் மிக்க நண்பனுமாகிய தென்னவப்பல்லவராயன் என்பவனிறந்தான். தொண்டி, கருந்தங்குடி, திருவேகம்பம் என்னுமூர்களும் சிங்களவரதாயின. இவ்விடங்களையெல்லாம் இலங்காபுரி, மாளவச்சக்கரவர்த்தியென்பானொருவனிடம் ஒப்புவித்து அவைகளையாளும்படி ஏவித்திரும்பினான்.

சிங்களர் மேன்மேலும் ஜயமடைவதும், பாண்டியர் ஒரேபடியாகத் தோல்வியடைவதும் நோக்கிப் பொறாதகுலசேகரன் மறுபடியும் கொங்கு நாட்டுப் படைகளையும், தன் மறவர் படையையும் தைரியப்படுத்திச் சேர்த்துக்கொண்டு ஆயத்தமாகையில், சிங்களவரால் ஆங்காங்கு நாடாள நியமிக்கப்பட்ட தமிழ்ச்சிற்றரசர்கள், சொல்லாமலே குலசேகரனுடன் சேர்ந்துவிட்டனர். தன்னெண்ணங்களெல்லாம் பழுதாகப்போனதைக் கண்ணுற்று, இலங்காபுரி, உடனே தன்னரசனாகிய பராக்கிரமபாஹுவை, மற்றும் சில சைன்யங்களனுப்பவேண்டும் என்று எழுதிக் கேட்டுக்கொண்டான். அவனும், ஜகத்விஜயன் என்னும் தண்டநாய

கன்வசம் ஒரு பெருஞ்சேனை அனுப்பியுதவினான். இலங்காபுரியும் ஜகத்விஜயனுமாகத் திருப்பாசி என்னுமிடத்திற் குலசேகரனை முற்ற முறியடித்து, மதுரைக்குச்சென்று, வீரபாண்டியனை மறுபடியும் சிம்மாசனத்து இருத்தினார்கள். பின்பு இலங்காபுரி, குறும்பராய னென்னும் ஒருவனைத் தோற்கடித்து, திருப்புத்தூரைப்பிடித்துக் கொண்டு, பொன்னமராவதி என்னுமிடத்திருந்த மூன்று மாளிகை யுடைய அரண்மனை முதலிய பலகட்டிடங்களை இடித்து மதுரைக்குத் திரும்பினான்.

இவ்வளவெல்லாம் முடிந்ததும், பராக்கிரமபாஹு விடமிருந்து, வீரபாண்டியனுக்கு முடிசூட்டுமகோற்சவம் நடத்தவேண்டுமென்று இலங்காபுரிக்கு ஆணைவர, அதன்படியே மகுடாபிஷேகமும் நடத்தப் பட்டது.

குலசேகரன் பின்னுமொருகால் இலங்காபுரியுடன் ஸ்ரீவில்லிபுத் தூரில் எதிர்த்துப் பெரும்போர்புரிந்து, அதிலும் தோல்வியடைந்து, சாந்தனேரியிற்போய்த் தங்கியிருந்தான். அதனைக்கேள்வியுற்று இலங் காபுரி அவ்வூரின்மேற் படையெடுத்துச் சென்றான். இலங்காபுரி தன்னுடன் யுத்தத்துக்கு வருகின்றான் என்ற செய்திகேட்டு வெள்ளத் தில் அவன்மடியக்கடவனென்று குலசேகரன் அங்குள்ள பெரியஏரி யொன்றன்கரையை யிடித்துவிட்டவன். இந்தயுக்தியும் நிறைவேற வில்லை. பிறகு குலசேகரன் பாளையங்கோட்டைக்குப்போய் அவ்விடத் துப் பாசறையிலிருந்துகொண்டு, சோழனைத் துணைவேண்டினான். இரா ஜாதிராஜன் உடனே பலசைந்நியங்களை அனுப்பி உதவினன். இப்படை களைச் செலுத்தியவரில் நரசிங்கபத்மராயன், பல்லவராயனென இருவர் இருந்தனர். சிங்களவர்நற்காலம் இதனுடன் தொலைந்தது. பாண்டிய சோழ கொங்கு சேனைகள் ஒருங்குகூடி, பாண்டியராச்சியத்திற் பற்பல கோயில்களையிடித்தும், இன்னும் அநேகவித அநியாயங்களைச் செய்தும் வந்த சிங்களப்படைகளைத் திருக்கானப்பேர், தொண்டி, பாசி, பொன்ன மராவதி, மணமேற்குடி, மஞ்சக்குடி என்னுமிடங்களில் எதிர்த்து

அவைகளை முறியடித்துப் பாண்டிநாட்டைவிட்டு நீங்கும்படி செய்தன.* இவ்விஷயங்களைச் சுருக்கமாகக் காஞ்சிபுரத்துக்கடுத்த ஆரப்பாக்கத்துக் கோயிற்சாஸனமொன்று விவரித்திருக்கிறது.† சிங்களப் படைகள் பாண்டி மண்டலத்தைப் பிடித்துக்கொண்டு, குலசேகரனையும் துரத்தி, சோழ அரசன் பிரதிநிதிகளோடுங்கூடப் போர்புரியத் தலைப்பட்டுவிட்டார்கள். அவர்கள் தொண்டி, பாசி முதலியவிடங்களைப் பிடித்துக்கொண்டவாறும், சோழநாட்டின் பக்கம்வர எத்தனிப்பதும் நோக்கிச் "சோழியக் குடிகள் பயப்படுகின்றன; அஃது எங்ஙனேயாமோ" என்று விசாரப்பட்டு, சுவாமிதேவர் என்னும் சிறப்புப் பெயர்பூண்ட தன்னாசாரியரிடம் எதிரிலிசோழசம்புவராய னென்பவன் சொன்னான். "சிங்களர் சோழ நாட்டிற் புகுந்தார்களென்றால் கோயில்களுக்கும் பிராமணர்களுக்கும் மிக்கதீங்குநேரிடும்" என்று சுவாமிதேவர் சொல்ல, சம்புவராயன், "ஸ்வாமி! ஏதேனும், ஜபதபங்களைச்செய்து அவர்கள்முகம் நாம் காணாதவாறு தாங்கள் செய்யவொண்ணாதோ" வென்ன, அவர் "சிங்களவர், இராமேசுவரத்துக் கோயில்வாயிலைப் பெயர்த்து, பூசைதட்டுண்டாம்படி செய்து, கோயிலையுங்கொண்டார்கள் என்று கேள்விப்பட்டேன்; அன்னோர் சிவத்துரோகிகள்; அவர்கள் போரில் தோற்று முறியடிக்கப்பட்டு ஓடிப்போம்படியான மார்க்கம் தேடுகிறேன்" என்று சொல்லி, அகோராத்திரம் இருபத்தெட்டுநாள் தவம்புரியவே, பிள்ளை பல்லவராயனிடமிருந்து "ஜகத்ரததண்டநாயகன், லங்காபுரி தண்டநாயகன் முதலிய பலரும் முறியடிக்கப்பட்டு ஓடிப்போய்விட்டார்கள்" என்று ஓலைவர, அதனைக்கொண்டுபோய் எதிரிலிசோழசம்புவராயன் சுவாமி தேவர்க்குக் காண்பிக்கவே, அவரும் மகிழ்ந்தனர். அப்பொழுது அவன் சுவாமிதேவருக்கு ஆரப்பாக்கம் என்னும் கிராமத்தை நிர்ப்பந்தப்படுத்திக்கொடுத்தா னென்பனமுதலிய விஷயங்களையெல்லாம் இச்சாஸனம் கூறி, இறுதியில் சுவாமிதேவர்என்பார் பெயர் உமாபதி தேவராகிய ஞானசிவதேவரென்றும், இவர் கௌட தேசத்துள்ள தக்ஷிண லாடப்பிராமணர் என்றும் தெரிவிக்கின்றது.

---

* Ep An. Rep. for 1898—9. pp-8-11.
† Ibid. No. 20 of 1899.

## பதினொன்காம் அதிகாரம்.

---

மூன்றாங்குலோத்துங்கன், இராஜாதிராஜனுக்குப்பின் முடிசூட்டப்பட்டான். இவனுக்கு வீரராஜேந்திரன், திரிபுவனவீரதேவனென்னும் வேறுபெயர்களுமுள. இவன் மெய்க்கீர்த்தி "மதுரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையுங்கொண்டருளிய கோப்பரகேசரி வர்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்" என்று இவனைச்சிறப்பிக்கும். இதன் உண்மையை யறிய முயலுவோம். பாண்டிநாடும் இன்னும் முன்னிலையை அடையவில்லை. பட்டத்தைக்குறித்தவிவாதம் மறுபடியும் சேர்ந்தது. குலசேகரனுக்குப் பின் பட்டம்பெற்ற விக்கிரம பாண்டியனுக்கும் முற்கூறிய வீரபாண்டியனுக்கும்போருண்டாய், முன்னவன் வழக்கம்போலவே சோழனையும், பின்னவன் சிங்களவனையும் துணைவேண்டினார்கள். அங்ஙனமே, அவ்விருவரும் சோழராலும் சிங்களவராலும் உதவியும் பெற்றனர் இதில், குலோத்துங்கன் சிங்களவரை முறியடித்து வீரபாண்டியன் தலையின்மீது இருந்த முடியைப் பறித்து அவன்மக்களையும் அடக்கி, விக்கிரமபாண்டியனுக்குப் பாண்டிநாட்டைக்கொடுத்து மீண்டான். சில காலத்துக்கெல்லாம் வீரபாண்டியன மறுபடியும் முரணத்தலைப் பட்டனன். நெட்டூரிலும் இவனுக்குக் குலோத்துங்கன சேனைகளால் தோல்வியேயுண்டாயிற்று. இந்தமுறை குலோத்துங்கன வீரபாண்டியனைக்கொன்றுவிட்டான். இப்போரிற்றான் வீரபாண்டியனுக்குத் துணையாகவந்த வீரசோழனையும் ஈழத்தரசனையும் குலோத்துங்கன வென்றிருக்கவேண்டும். மேற்கூறிய வெற்றிகளை உத்தேசித்தே முன்னர்க் குறித்த சிறுமெய்க்கீர்த்தியில் தன்னைப் புகழ்ந்துகொள்ளுகின்றான்.

வடக்கே காஞ்சீபுரத்தைக் காகதீயவம்சத்தரசனாகிய கணபதியென்பானும் வேறு சிலவிடங்களை விசயகண்டகோபாலனென்பானொருவனும் பிடித்துக்கொண்டு ஆண்டுவந்தனர். தென்னாட்டு யுத்தங்கள் முடிந்ததும் குலோத்துங்கன் வடக்கேபடையெடுத்துச்சென்று கணபதி முதலானோரை யோட்டி நாட்டைத் தன்னதாக்கிக்கொண்டான். இவன்

காலத்தே இவன்கீழ்ப்படிந்திருந்த சிற்றரசர்களுள் அமராபரணன் சீயகங்கனென்பவன் ஒருவன். இவனே, பவணந்திமுனிவரை நன்னூல் எழுதும்படி கேட்டுக்கொண்டோன்.

முதற்பராந்தகனால் நிலைபெறுத்தப்பட்டும், முதலிராஜராஜனால் மென்மேலும் விருத்தியாக்கப்பட்டும் முதற்குலோத்துங்கனால் சீராக்கப்பட்டும் வந்த பெருத்த சோழராஜ்யமானது, தன்னை நிர்வகிக்க முடியாத சக்தியற்ற மூன்றாங்குலோத்துங்கன், அவன்மகன் மூன்றாம் இராஜராஜன், அவன்மகன் மூன்றாம் இராஜேந்திரன் என்னுமரசர்கள் கையிலகப்பட்டது. கலகம் போர் முதலியன ஒருவாறு ஓய்ந்து நாடெங்கும் அமைதியுண்டாகிச் செழிப்படையவே, அரசர்களும் சிற்றின்பங்களில் ஈடுபட்டு, இராச்சியபாரத்தைத் தம் கீழுள்ளோரிடம் தங்கவிட்டு, தாங்களும் தேகவலிமையிழந்தார்கள். சிற்றரசர்களிற் பெரும்பான்மையோரும் சோழவமிசவிஷயத்தில் மிக்க இராசபக்தியுடன் நடந்துவந்தனர். ஆயினும் வேற்றுமையேயின்றி இந்நிலவுலகத்தில் எல்லோரும் ஒரே நிலையாக ஐக்கியமனத்துடனிருப்பதரிதன்றோ. "மதிரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய திரிபுவனச்சக்கரவர்த்திகள்." என்று ஆடம்பரமாய்ப் பட்டந்தரித்ததினாலே மற்றச் சிற்றரசர்கள் அஞ்சிவிடமாட்டார்கள். மகதை என்ற நடுநாட்டதிபதியான, ஆர்க்களூருடையான் பொன்பரப்பினன் மகதைப்பெருமாளான* இராஜராஜ வாணகோவரையனும் குலோத்துங்க வாணகோவரையனும், இராஜராஜக்காடவராயனும் குலோத்துங்கசோழன் ஏகாதிபத்யத்தை எதிர்த்து வெளிப்படையாகப் பகைமைபாராட்டத் தலைப்பட்டனர். அக்காலத்தில், சோழ சைந்நியங்களுக்கு மகாசாமந்தனாயிருந்த கிளியூர் மலையமான் பெரியுடையானான இராஜராஜசேதியராயன் தூண்டுதலால், பாண்டிநாடு கொண்டானான சம்புவராயன், செங்கேணி அத்திமல்லன் வீராண்டானான எதிரிலிசோழசம்புவராயன், அத்திமல்லன் பல்லவாண்டானான குலோத்துங்கசோழ சம்புவராயன், கிளியூர் மலையமான் ஆகாரசூரனான இராஜகம்பீரச் சேதியராயன், குந்தன் நம்பூரனான இராஜராஜ நீலகங்கரையன், அம்மையப்பன் பருந்நனான இராச இராச மூவேந்தரையன், பாவந்தீத்தானான இராஜேந்திர சோழ சம்புவராயனை

* செந்தமிழ்த் தொகுதி 3 பக்கம் 423.

கரிகாலசோழ ஆடையூர் நாடாள்வான், சோமன் திருவண்ணாமலையுடையானான குலோத்துங்க சோழ பிருதிகங்கன, சோழன் வரந்தருவானான சோழேந்திரசிங்க பிருதிகங்கன் என்னும் இவ்வொன்பது சிற்றரசர்களும் கி. பி. 1178-ல் ஓர் நிபந்தஞ் செய்துகொண்டனர். அதன்படி, மேற்கூறிய பகைமை பாராட்டும் சிற்றரசர் மூவரும் இராஜதுரோகிகளாகிவிட்டபடியால், அவர்களோடு தாங்கள் எதன்பொருட்டும்சேர்வதில்லையென்றும், அவர்களோடு எழுத்து முதலியன எழுதப் பெறுவென்றும், எக்காலத்தும் சோழசக்கரவர்த்திக்கும் அவன் மகாசாமந்தனுக்கும் கீழ்ப்படியக் கடமைப்பட்டவராவோமென்றும் அவர்கள் பிரமாணஞ் செய்துகொண்டார்கள்.* இவையெல்லாம் சோழராச்சியத்தின் வலியின்மையை யறிவிக்கும் குறிகளென்பதற்கு ஐயமேயில்லை. இவ்வரசன் காலத்து, இவன் 24-ம் ஆண்டில் ஒரு க்ஷாமம் வந்ததென்றும் அப்போது "காசுக்கு உழக்கரிசிவிற்"றதென்றும் திருவண்ணாமலையில் ஒரு சாஸனம் கூறுகிறது.†

## பதினேந்தாம் அதிகாரம்.

---

குலோத்துங்கனுக்குப்பின் அவன் மகன் மூன்றும் இராஜராஜன் சோழசக்கரவர்த்தியானான். இவன்காலத்தே சோழராச்சியம் மிகப்பரந்திருந்தபோதிலும், சிற்றரசர்கள் பிராபல்ய மதிகரித்தது. இவர்களுட் சிலரது பலத்தாலும் உதவியாலுமே அரசன் தன்னுட்டை இழவாமலிருக்கலாயிற்று.

இராஜராஜன் முடிசூடியவாண்டிலே பாண்டிநாட்டில் முதன்மாறவர்மன் சுந்தரபாண்டியன் பட்டந்தரித்தான் (கி. பி. 1216). இவ்வரசன் மிக்க பலசாலி. சோழ இராச்சியத்தின் பலவீனத்தை அறிந்து அதனை ஜயிக்க எத்தனித்தான். இச்சுந்தரபாண்டியன் சாஸனங்கள்.

---

* Ep. An. Rep for 1902-03. No. 536 of 1902.
† Ep, An. Rep. for 1902-3. No. 506 of 1902.

சோணாட்டில் திருக்காட்டுப்பள்ளி, * ஸ்ரீரங்க † முதலிய விடங்களிற் காணப்படுவதாலும், இவன் மெய்க்கீர்த்தி "சோணாடுவழங்கிய சுந்தர பாண்டியன்" என்று சிறப்பித்தலாலும், சோணாடு இவன் கையிலகப் பட்டு, பின் ஏதோ ஒரு காரணத்தால் சோழ சக்கரவர்த்திக்குக் கொடுக் கப்பட்டது என்பது விளங்கும். அஃதெவ்வாறு நேர்ந்ததென்பதைக் கீழே கவனிப்போம்.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தியில், "...பொன்னி சூழ்நாட்டுப்புலியாணைபோயகல, கன்னிசூழ்நாட்டிற் கயலாணைகைவளர, வெஞ்சினவிவுளியும்வேழமும்பரப்பித், தஞ்சையுமுறந்தையுஞ்செந்தழல் கொளுத்திக், காவியுநீலமும் நின்றுகவினிழப்ப, ஆவியுமாறுமணிநீர் கலனழித்துக், கூடமுமாமதிளுங்கோபுரமுமாடரங்கும், மாடமுமாளி கையுமண்டபமும்பலவிடித்துத், தொழுதுவந்தடையாநிருபர்தந்தோ கைய, ரழுதகண்ணீராறுபரப்பிக், கழுதைகொண்டுழுது கவடிவிச்சுச்செ ம்பியனைச், சினம்பிரியப்பொருது சுரம்போகவோட்டி, பைம்பொன்மணி முடிபறித்துப் பாணனுக்குக்கொடுத்தருளி, பாடருஞ்சிறப்பிற்பருதிவா ன்றோயு, மாடகப்புரிசையாயிரத்தளியில், சோழவளவன் அபிஷேகமண் டபத்து வீராபிஷேகம்பண்ணி,......கூராழியுஞ்செய்யதோளுமேகொ ண்டுபோய், ஐயப்படாதஅருமறைதேரந்தணர்வாழ், தெய்வப்புலியூர்த் திருவெல்லையுட்புக்குப், பொன்னம்பலம்பொலியநின்றாடுவார்பூவையு டன், மன்னுந்திருமேனிகண்டுமனங்களித்து,...சோதிமண்டபத்திரு ந்து, சோலைமலிபுனற்சோணாடிதானிழந்த, தார்மாலைமுடியுந்தரவருக வென்றழைப்ப, வானநிலைகுலைபவாளரிக்கப்புறத்துப், போனவளவனரி மையுடன்புகுந்து, பெற்றபுதல்வனைநின்பேரென்றுமுன்காட்டி, வெற்றி யரியணைக்கீழ்வீழ்ந்துதொழுதிரப்பக், காரோடிமுன்னிகழ்ந்தவெம்மை யெலாங்கையகல, தாரோதகம்பண்ணி,... இதுபிடிபாடாகவெனப்பொங் குதிரைஞாலத்துப்பூபாலர்தொழ விளங்குஞ், செங்கயல்கொண்டுன்றிரு முகமும்பண்டிழந்த, சோளபதியென்னுநாமமுந்தொன்னகரு, மீள வழங்கிவிடைகொடுத்தருளி;...முன்னமக்கு முடிவழங்குசேவடிக்கீழ்,

* Ep. An. Rep. No. 52 of 1897.

† Ibid. No. 133 of 1894.

இன்னம்வழிபடுவோமென்று பின்னொருநாள், காவலனதுபுனநாடெனுங்களியா லெவலெதிர்செல்லாதிறைமறுத்தசென்னியிடு, துசியும் போரணியுமூக்கச் சுருண்டொதுங்கி, வாசியும்வாரணமுந்தேருமடற்கருவக், கூலனும்வெட்டுண்ண......கொடிகொண்ட நெற்றிநிரைத்த கோபுரஞ்சூழ், முடிகொண்டசோழபுரமண்டபத்துப்புகுந்து திசைதொறும் ......சயத்தம்பநாட்டிய......ஸ்ரீகோமாறவர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீசோணாடு கொண்டு, முடிகொண்ட சோழபுரத்து வீராபிஷேகம் பண்ணி அருளிய ஸ்ரீசுந்தரபாண்டியதேவர்" என்று சோணாடு கொண்ட காரணம், வகை முதலானவற்றை விவரித்துக் கூறுகிறது. இஃது இப்படியிருக்க.

இதுகாறுமில்லாமல், "சோளராஜ்ய ஸ்தாபனாசாரியன்" என்னும் பட்டப்பெயரைப் போசள நாரசிம்மதேவன் (II) தரிப்பதை அவன் சாஸனங்களிற் காண்கிறோம். * ஆதலால் அவன், இராஜராஜன் நாட்டைப் பாண்டியனிடமிருந்து திரும்பஅடைந்ததில், ஏதோ உதவிபுரிந்திருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது. நாரசிம்மன் ஏன் அவ்வுதவிசெய்யவேண்டுமெனின், இராஜராஜனுக்கு அவன் பெண்கொடுத்த மாமனாதல்வேண்டும். இராஜராஜன் மகனை, வீரநாரசிம்மன் மகனாகிய வீரசோமீசுவரனை மாமனென்றழைத்தலாலும், † அச்சோமீசுவரன் உறையூருக்கு வடக்கே 10-மைலுள்ள கண்ணனூரைத் தனக்கிருப்பிடமாகக்கொண்டு அதிற் கோட்டை கொத்தளங்கள் கட்டி, சோழனை ஆதரவுசெய்வதுபோலக் காவிரி வடகரைநாட்டையாண்டுவந்ததனாலும் இந்த உறவுமுறை வெளியாகிறது.

மேற்சொன்னபடி, பாண்டியனால் இராஜராஜன் நாடிழக்கநேர்ந்தது கி. பி. 1222-க்கு முந்தியதாகல்வேண்டும் கி. பி. 1222-ல் போசளவீர நாரஸிம்மன் தென்னரங்கத்தை நோக்கிப் படையெடுத்துச் சென்றானென்று ஒருசாஸனம் கூறுகிறது. ‡ இதற்குப் பிறகு கி. பி. 1224-ல்

---

* Fleet's Dynasties of the Kanarese Districts. p. 507. Ep. Carn. Vol. IV. No. 98 and Vol. VI. Kd. 12 a.

† Ep. Carn. Vol. VI. Cm. 56.

‡ "மாமசோமீசுவர பிரதிகூல காலதண்ட"

வீரநாரசிம்மன் "மகாராஜ்ய நிர்மூலம்" செய்ததாலும், "சோளராஜ்ய ஸ்தாபனாசாரியன்" என்னும் பட்டம்பெறுவதாலும், இவன் பாண்டியர்களிடமிருந்து சோணாட்டைத் திரும்ப வாங்கிக் கொடுத்தது கி. பி. 1222—1224-க்குள்ளாகலாம்.*

தன்னிராச்சியத்தை யடைந்து கி. பி. 1232-வரை கவலையின்றி இராஜராஜன் அரசாண்டுவந்தான். இவ்வாறு நிகழுநாளில், மிக்க பலசாலியாகித் தன்புகழை நாளடைவிலேயே நிலைநிறுத்தி வந்த பல்லவ வமிசத்தானாகிய "அவனியாளப்பிறந்தான்" கோப்பெருஞ்சிங்கன் என்பவன் முரணைத்தலைப்பட்டான். "திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு 15-வதின் எதிராமாண்டு (16-வது) பிரதாப சக்கரவர்த்தியைத் தன் படையைவிட்டு ராஜ்யத்தை அழித்து, தேவாலயங்களும் விஷ்ணு ஸ்தானங்களும் அழிகையாலே, இப்படிதேவன் கேட்டருளி, "சோழமண்டல பிரதிஷ்டாசாரியன்" என்னும் கீர்த்தி நிலைநிறுத்தியல்லது இக்காளம் ஊதுவதில்லை என்று, துவாரசமுத்திரத்தினின்றும் படைஎடுத்துவந்து, மகாராஜ்ய நிர்மூலமாடி, இவனையும் இவன் பெண்டுபண்டாரமும் கைக்கொண்டு பாச்சூரிலேவிட்டுக் கோப்பெருஞ்சிங்கன்தேசமுமழித்துச் சோழசக்கரவர்த்தியையும் எழுந்தருளுவித்துக் கொடுவென்று தேவன் திருவுள்ளமாய் எவ, விடைகொண்டு எழுந்த ஸ்வஸ்திஸ்ரீ மனுமஹாபிரதானி, பரம விஸ்வாஸி, தண்டினகோபன், ஜகதொப்பகண்டன் அய்யனதண்ணாக்கனும், சமுத்திரகொப்பய தண்ணாக்கனும், கோப்பெருஞ்சிங்கனிருந்த எள்ளேரியும், கல்லியூர் மூலையும், சோழகோனிருந்த தொழுதகையூருமழித்து, வேந்தன் முதலிகளில் வீரகங்கநாடாழ்வான், சினத்தரையன், ஈழத்துப்பராக்கிரமபாஹு உள்ளிட்ட முதலி 4-பேரையும்...கொன்று, இவர்கள் குதிரையும் கைக்கொண்டு, கொள்ளிச் சோழகோன் குதிரைகளையும் கைக்கொண்டு, பொன்னம்பலதேவனையும் கும்பிட்டு எடுத்துவந்து, தொண்டமானல்லூர் உள்ளிட்ட தமக்கூர்களும் அழித்து அழி...காடும் வெட்டுவித்து, திருப்பாதிரிப்புலியூரிலே விட்டிருந்து; திருவதிகை, திருவக்கரை உள்ளிட்ட ஊர்களுமழித்து; வாரணவாசிஆற்றுக்குத்தெற்கு சேந்தமங்கலத்துக்கும் கிழக்கு கடலிலே அழிவூர்களும் குடிகால்களும் சுட்டும்,

* Fleet's Dyn. Kan. Dist. p. 507.

அழித்தும், பெண்டுகளைப் பிடித்தும், கொள்ளைகொண்டும், சேந்தமங்கலத்திலே எடுத்துவிடப்போகிற அளவிலே, கோப்பெருஞ்சிங்கன் குலைந்து, சோழச்சக்கரவர்த்தியை எழுந்தருளுவிக்கக் கடவதாக தேவனுக்கு விண்ணப்பஞ்செய்ய, இவர் விட்டு நடக்கும் ஆள்வரக்காட்டுகையாலே, சோழசக்கரவர்த்தியை எழுந்தருளுவித்துக் கொடுபோந்து ராஜ்யத்தே புகவிட்டது."* என்று அக்காலத்து நடந்த சமாசாரங்களை விஸ்தாரமாகத் திருவயிந்திரபுரத்துத் தேவநாயகப் பெருமாள் கோயிற் பிராகாரத்து மேலைச்சுவரில் எழுதியிருக்கிறது.

இவ்விரண்டாவது ஆபத்தினின்றும் தப்பி மறுபடியும் இராஜ்யம் பெற்று கி. பி. 1246-வரையில் ராஜராஜன் அரசாண்டான்.

## பதினொன்றாம் அதிகாரம்.

மூன்றாம் இராஜராஜன் விண்ணாட்டுக்கேகலும், அவன்மகனாகிய மூன்றாம் இராஜேந்திரன் கி. பி. 1246-ல் அரசனானான். இவன் தன் மாமனாகிய வீரசோமேசுவரனைத் தன் காலில் வீரக்கழலைப்பூட்டும்படியான தாழ்ந்த நிலைக்குக் கொண்டுவந்ததாகவும், கோளபாண்டிய சக்கரவர்த்திகளை வென்றதாகவும் இடம்பம் பேசிக்கொள்வதினின்றும், இவன் தன் மாமன் முதலியவரோடும் விரோதித்துக்கொண்டானென்பது நிச்சயமாகப் புலப்படுகிறது. இவன் விஷயமிப்படியிருக்க.

கி. பி. 1251-ல் பட்டந்தரித்த ஜடாவர்ம்மன் சுந்தரபாண்டியன் மகாராஜாதிராஜன் என்னும் சக்கரவர்த்திப் பட்டந்தரித்து, சோழவம்சமென்னும் மலைக்குத் தானோர் இடியேறு என்றும், கன்னடக வாசனாகிய வீரசோமேசுவரனைத் தாத்தியடித்தவனென்றும், காடக தேசாதிபதியாகிய கஜபதிக்கு தானோர் குளிர்காய்ச்சல் போன்றவனென்றும், விஜயகண்டகோபாலன் என்னும் காட்டுக்குத் தீயென்றும், காஞ்சிபுரத்ததிபதியான கணபதியாகிய மானுக்கு தானோர் புலியென்றும் தன்னைப் புகழ்ந்து கொள்ளுகிறான். இதற்கேற்ப இவன் சாஸனங்கள் இவன் இராஜ்ய

* Ep. Ind. Vol. VII. pp. 167-8. & Ep. Carn. Vol. XII. Tumkur District, No. 45. Gubbi Taluk.

வருஷத்து 11-வது யாண்டு முதல் சோணாட்டைச் சேர்ந்த திருவையாறு,* திருமழபாடி,† திருவானைக்கா,‡ ஸ்ரீரங்கம்,$ திருக்கழுக்குன்றம் § முதலிய பலவிடங்களிலும், வடக்கே நெல்லூரிலும் ¶ காணப்படுகிறபடியால், இவன் சோணாட்டை ஜயித்திருத்தல் திண்ணம்.

அன்றியும், இராஜேந்திரன் சாஸனங்களும் இதுகாறும் தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களைத் தவிர வேறு காணப்படாமையால், இவன்நாடு மிகவும் குறுகிவிட்டது என்பதும் தோன்றும். இவன் காலத்தோடு சோழவமிசப் பிராபல்லியம் ஒழிந்தது. இவன் 22-வருடங்களுக்குமேலாண்டவன்.

இவன்பின்னும் சிற்சில சோழர்களிருந்திருக்கிறார்கள். சகவருஷம் 1236 (கி. பி. 1314)-ல் வீரசோழன என்பவன் மகனாகிய வீரசம்பன் என்பவன் ஒருவன் சிற்றரசனாக ஆண்டுவந்தானென்று திருவல்லத்துச் சாஸனம் || ஒன்றால் வெளியாகிறது. இச்சகவருஷத்துக்கும் இராஜேந்திரனுடைய கடைசிக்காலத்துக்கும் இடையே உத்தேசம் 60-வருஷங்களேயிருத்தலால் இச்சாஸனத்துக்கூறியிருக்கும் வீரசோழன் இராஜேந்திரனுக்குப் பின் பட்டந்தரித்த சிற்றரசனாயிருக்கலாம்.

---

## பதினேழாம் அதிகாரம்.

# இராஜாங்க முறைமை.

இராச்சியத்தில் அரசனே முதன்மையான பதவியுடையவன். அரசியலைத் தன்னிஷ்டம்போல இவன் நடத்தலாமாயினும், இவன் பலருடன் மந்திராலோசனை செய்தே காரியங்களை நடத்துவது வழக்கமாயிருந்தது.

* Ep. An. Rep. for 1893-4. No. 254 of 1894.
† Ibid for 1894-5. No 90 of 1895.
‡ Ep. Ind. Vol. VI p. 307.
$ Ep. An. Rep for 1892. No. 60 of 1892.
§ Ibid for 93-94. No. 186 of 1894.
¶ Ibid for 1894-95 No. 196 of 1894.
|| Ep. Ind. Vol. III. pp. 70-71.

"உடன் கூட்டத்து அதிகாரிகள்"[1] என்று ஆங்காங்கு வருவதைக் கொண்டும், இவர்கள் பெயர் "அதிகாரிக்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பனையூர்நாட்டு ஜெயங்கொண்ட சோழநல்லூருடையான் உதைய திவாகரன் கூத்தாடுவானான வீரராஜேந்திரமழவராயர்"[2] என்பதுபோலப் பெருமைபெற்ற பெயர்களாயிருத்தல் கொண்டும், இவர்கள் அரசனுடைய மந்திராலோசனை சபையாராகவேண்டுமென்று ஊகிக்கப்படுகிறது.

அரசன் திருவாய்மொழிந்தருளிய கட்டளைகளைக்கேட்டு எழுதப் பல உத்தியோகஸ்தர்கள் உண்டு. இவர்கட்கு திருமந்திர ஓலையெழுதுவார்[3] என்று பெயர்; இவர்களுக்குத் தலைமையான அதிகாரி திருமந்திர வோலை நாயக[4] மெனப்படுவான். இவ்வதிகாரி இன்னின்ன காலத்து இவ்விவ்விஷயங்களை செய்யவேண்டுமென்று ஞாபித்தல் வழக்கம்; "நம் ஓலைநாயகம் நமக்குச்சொல்ல" என்று சாஸனங்களிற் காணலாம். சில ஆணைகள், அரசன் இன்ன காரியம் செய்யாநின்ற சமயத்திற் பிறந்தனவென்று குறிக்கப்பட்டிருக்கின்றன: உதாரணம்:—"கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலினுள்ளால் திருமஞ்சனசாலையில் எழுந்தருளியிருந்து உதகம்பண்ணியருளாநிற்க,"[5] "ஸ்ரீராஜராஜத்தேவர் தஞ்சாவூர்ப் பெரிய செண்டுவாயில் சத்திரகூடத்துத் தெற்கில் கலவரியில் எழுந்தருளி,"[6] "காஞ்சீபுரத்துக் கோயிலினுள்ளால் அட்டத்துவெள்மேலை மண்டபம் ராஜேந்திரசோழனில்சொட்டையில் எழுந்தருளியிருந்து,"[7] "புரசைநாட்டுச் சிவபுரத்துப் பகலிருக்கையில் திருவமுதுசெய்தருளாநிருந்து"[8] என்பன. மேற்கூறியபடி பிறக்குமகட்டளைகளை அவரவர்கட்கு அனுப்பிக்கும் அதிகாரிக்கு "விடையில்அதிகாரி"[9] என்று பெயர்.

---

1 S. I. I. Vol. III. p. 35.
2 Ibid.
3 Ibid.
4 Ibid.
5 Ibid.
6 Ibid p. 14.
7 Ibid. 135.
8 Ibid. p. 161.
9 Ibid. p. 36.

இவன் ஆங்காங்கிருந்து வரும் குறை முறைகள் விஷயமான கடிதங்களைப் பார்வையிட்டு விடையெழுதும் வேலையுமுடையவனுயிருத்தல்வேண்டும்; இவ்வாறு அனுப்பப்பட்ட கட்டளைகளைப்பெற்ற ஊரார் சிரமேல் தாங்கிச் சென்று, ஊர்ப்பொதுமண்டபத்தே கூட்டங்குறைவறக்கூடியிருந்து வாசித்து, உத்தரோத்தரம் பயன்படுமுத்தாவாயிருப்பின் தம்மூர்த் தேவாலயத்தின் சுவரில் கல்வெட்டுவிப்பார்கள்.

இராஜ்யம் பல மண்டலங்களாகவும், மண்டலங்கள் கோட்டங்களாகவும், கோட்டங்கள் கூறுகளாகவும், கூறுகள் நாடுகள் வளநாடுகளாகவும் வகுக்கப்பட்டிருந்தன. நாடுகளும் வளநாடுகளும் பல நகரங்களும் கிராமங்களுமுடையவாயிருந்தன. அவற்றுட் பெரிய நகரங்கள் தனியூர் என்றும், மற்றவை ஊர்கள், பற்றுகள், குறைப்பற்றுகள் என்றும் பெயர் பெறும்.

மண்டலங்களை ஆள்பவர் மண்டலிகர். இத்தகையவுத்தியோகம் பெரும்பான்மையும் இராஜவம்சத்தாரே வகித்துவந்தனர். உதாரணம்:— வேங்கைநாடு குலோத்துங்கன (I) காலத்து, இராஜராஜன் வீரசோழன் என்பவர்களாலாளப்பட்டது. நாட்டுக்குத்தலைமையான உத்தியோகஸ்தன் அதிகாரி எனப்படுவான். அவன தன் நாட்டுவரி, நியாயம் முதலியவற்றைப்பற்றிய விஷயங்களைக் கவனிக்கவேண்டும். தனியூர்கள் இவன்கீழ்ப்படிந்தனவல்லவென்று தோற்றுகிறது. இவைகள், தமக்கென்றே ஒரு சபையும், தம்மூர் விஷயங்களைத்தாமே பார்த்துக்கொள்ளும் கொள்கையு முடையவாயிருந்தன. இவற்றின காரியாதிகளை அரசனே நேரில் கவனிப்பான். மற்றவூர்களிலும் சபைகளுள. ஆயினு, அவைகளும் தம்மூர்விஷயங்களைத் தாமே பார்த்துவரினும், நாட்டதிகாரிகளுக்கு உட்பட்டவையென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது.

அதிகாரிகள், அவ்வப்போது தந்நாட்டைச் சுற்றிப்பார்த்து, நாடுகளின் க்ஷேமலாபங்களை விசாரிக்கக்கடமைப்பட்டவர்கள். "அருமொழி மூவேந்தவேளார் வெண்குன்றக்கோட்டத்துப் பெருமண்டை நாட்டு பெருமண்டையிலிருந்து ஊர்களை வினவாவிருக்க" * "யாண்டு மூன்று

* Ep. An. Rep. for 1903-4. No. 221 of 1904.

வது, நாள் இருநூற்றினால், அதிகாரிகள் சோழமண்டலத்துப் பாண்டி குலாசனி வளநாட்டுப் புறக்கிளியூர்நாட்டு புலாங்குடையார் பூரான் ஆதித்ததேவனுரான ராஜராஜேந்திர மூவேந்தவேளாரும் ஜநநாதப வளநாட்டுத் திரைமூர்நாட்டு நாடார்கிழான் ராஜராஜன் பராக்கிரமராசகாரான வீரசோழ இளங்கோவேளாரும் ஊற்றுக்கோட்டத்து எயில் நாட்டுக் காமகாஞ்சீபுரத்துத் திருமயான முடையார் கீழைமண்டபம் கங்கைகொண்ட சோழனிலிருந்து, திருவல்லமுடையார் தேவதானமான ஊர்கள் கணக்குக்கேட்டு" * "இவ்வாட்டைவிருச்சிக நாயற்று, வடிவெளிக்குச் ஷஷ்டியும் திருவோணமும் பெற்ற வியாழக்கிழமை நாள் நம்மூர் நகரில் ஸ்ரீகோயில் வீற்றிருந்தாழ்வார் திருமுற்றத்தே அதிகாரிகள் சோழமூவேந்த வேளாரும் நடந்திருக்கக் கூட்டக்குறைவறக் கூடியிருந்து பணிபார்ப்பளித்த எழுத்து; இக்கோயிலில் முன்புள்ளாரும் நாங்களும் செலுத்தமாட்டாது கிடந்தமையில் மஹாஸபையோம் உடவோமான சந்தியைத் திருவோணத்திருவிழா..." † "விஜயராஜேந்திர மண்டலத்துக் குவளாலநாட்டுக் குவளாலத்துப் பிடாரியார் கோயிலினுள்பால் திருச்சுற்றுமண்டபத்துக் கோயிற் கருமமாராயாவிருந்து, இத்தேவர் தேவதானமான ஊர்களால் வந்த பாடை‡" "செல்லாக்கி இத்தேவர்க்கும் பதிபாதமூலப்பட்டுடைய பலபணிநிவந்தக்காரருக்கும் நிவந்தஞ்செய்தபடி யுண்டோவென்று இத்தேவர்க்கு மாடாபத்தியம் செய்கிற கன்னுடைபண்டிதனையும் பதிபாதமூலப்பட்டுடைய பஞ்சாசாரியத் தேவகன்மிகளையுங்கேட்க" § "கோராஜராஜகேசரிவர்ம்மற்கு யாண்டு 7-வது, பனையூர்க் கோட்டத்து மீயாறு நாட்டுத் தீக்காலிவல்லத்துத் திருத்தீக்காலி ஆழ்வாரை இவ்வாட்டை ஐப்பசித்திங்கள் பௌர்ணமாசியும் இரேவதியும் பெற்ற விஷுவில் ஸௌம்யஹ்ருஹணத்தின்று, மதுராந்தகன் கண்டராதித்தனுர், ஆழ்வாரை ஸஹஸ்ர கலசமாட்டுவிக்கவந்து திருவடி தொழுது நிற்க, ஆழ்வார்க்குக் காட்டுகின்ற திருவமுதும் இருநாழியரிசித் திருவமுதாய், கறியமுது நெய்யமுதும் தயி

---

* S. I. I. Vol. III. p. 115.

† S. I. I. Vol. III. 178.

‡ ஒருநாணயம்.

§ S. I. I. Vol. III. p. 137.

ரமுதும் இன்றியே நொந்தா விளக்கும் ஆலஸ்யமாயிருக்கக்கண்டு, இத்திருக்கோயில் சிவப்ராஹ்மணரையும் தீக்காலிவல்லத்துச் சபையாரையும் அழைத்து இத்தேவருடைய ஆயமும் வ்யயமும் திருவாணைக்கும் திருவோலைக்கும் உரியவண்ணஞ்சொல்லுக வென்று வினவ, சிவப்ராஹ்மணரும் தீக்காலிவல்லத்துச் சபையாரும் சொல்ல" * "இறையிலியாக இட்ட நிலங்களில் சாதனங்கள் சிதைகையிலே, பிள்ளையாரும் புத்தூருடையார் உடையப் பெருமாள் சோழகோனுக்கும் இக்கோயில் தானத்தாரும் ஊரவரும் கல்வெட்டவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய" † என்பவற்றால் அதிகாரிகள் நாடுகளின் க்ஷேமலாபங்களை வினவுந் தன்மை நன்குபுலப்படும்.

நகரங்களிலே அதிகாரங்களையாளும் சபைகள் வருஷந்தோறும் நியமிக்கப்படும். இந்நியமனம் ஊர்ப்பொதுஜனங்களே செய்வது என்பதும், அஃது எவ்வாறு நடந்துவந்ததென்பதும் அடியில்வரும் சாஸனத்தால் நன்குவிளங்கும்:—

“ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்ட கோபரகேஸரிவர்மற்கு யாண்டு பதினாலாவது நாள் பதினாறு; காலியூர்க் கோட்டத்து தன் கூற்று உத்தரமேருச் சதுர்வ்வேதிமங்கலத்து ஸபையோம்; இவ்வாண்டு முதல், எங்களுக்குப் பெருமானடிகள் எம்பெருமான் ஸ்ரீவீரநாராயணன் ஸ்ரீபராந்தகதேவன் ஸ்ரீபரகேஸரிவர்மருடைய ஸ்ரீமுகம் வரக்காட்ட ஸ்ரீமுகப்படி ஆஞ்ஞையால் சோழநாட்டுப் புறங்கரம்பைநாட்டு ஸ்ரீவங்கநகர்க் காரஞ்சைகொண்டபக்ரமவித்தபட்டனாகிய சோமாசிப்பெருமான் இருந்து, வாரியமாக ஆட்டொருக்காலும் ஸம்வத்ஸர வாரியமும், தோட்ட வாரியமும், ஏரிவாரியமும் இடுவதற்கு வியவஸ்தை செய்த பரிசாவது:—

“குடும்பு முப்பதாக ‡ முப்பது குடும்பிலும் அவ்வவக்குடும்பிலாரே கூடி கானிலத்துக்குமேல் இறைநிலமுடையான் தன் மனையிலே

* S. I. I. Vol. III. p. 102.

† Ep. An. Rep. for 1902-3 No. 607 of 1902.

‡ வாரியப்பெருமக்கள்பதவிக்குவேண்டும்யோக்கியதையைச் சொல்லுகிறது.

அகமெடுத்துக்கொண் டிருப்பானை எழுபது பிராயத்தின்கீழ் முப்பத்தைந்து பிராயத்தின் மேற்பட்டார் மந்திரப் பிராம்மணம் வல்லார் ஓதுவித்து அறிவானைக் குடவோலை இடுவதாகவும். அரைக்காணிலமே உடையானாயிலும் ஒருவேதம் வல்லானாய் நாலுபாஷ்யத்திலும் ஒரு பாஷ்யம் வக்காணித்தறிவான் அவனையும் குடவோலை எழுதிப்புக இடுவதாகவும். அவர்களிலும் காரியத்தில் நிபுணராய் ஆசாரமுடையானானையே கொள்வதாகவும். அர்த்தசௌசமும் ஆத்மசௌசமும் உடையராய் மூவாட்டின் இப்புறம் வாரியம் செய்திலாதாரைக் கொள்வதாகவும். எப்பேர்ப்பட்ட வாரியங்களும் * செய்து கணக்குக்காட்டாதே இருந்தாரையும் இவர்களுக்குச் சிற்றவைப்பேரவ்வை மக்களையும் இவர்களுக்கு அத்தைமாமன் மக்களையும், இவர்களுக்குத் தாயோடுடப்பிறந்தானையும், இவர்கள் தமப்பனோடுடப் பிறந்தானையும், தன்னோடுடப் பிறந்தானையும், இவர்களுக்குப் பிள்ளைகொடுத்த மாமனையும், இவர்கள் பிராமணியோடுடப்பிறந்தானையும், தனனோடுடப்பிறந்தாளை வேட்டா னையும், உடப்பிறந்தாள் மக்களையும், தன்மகளை வேட்ட மருமகனையும், தன் தமப்பனையும், தன்மகனையும் ஆக இச்சுட்டப்பட்ட பந்துக்களையும் குடவோலை எழுதிப்புக இடப்பெறாதாராகவும்."

"அகம்மியாகமனத்திலும், மகாபாதகங்களில் முன்படைந்த நாலு மகாபாதகத்திலும் எழுதப்பட்டவரையும், இவர்களுக்கும் முன் சுட்டப்பட்ட இத்தனை பந்துக்களையும் குடவோலைஎழுதிப்புக இடப்பெறாததாகவும். ஸம்ஸர்க்க பதிதரை பிராயச்சித்தம்செய்யுமளவும் குடவோலை இடாததாகவும். ஸாஹஸியாயிருப்பாரையும் குடவோலை எழுதப்பெறாதாராகவும். பரத்திரவியம் அபகரித்தானையும் குடவோலை எழுதிப்புகவிடப் பெறாதாராகவும். எப்பேர்ப்பட்ட கையூட்டும் கொண்டான் கூடபிராயச்சித்தஞ்செய்து சுத்தரானானையும் அவ்வவர் பிராணாந்திகம் வாரியத்துக்குக் குடவோலை யெழுதிப்புகவிடப் பெறாததாகவும். மகா பாதகஞ்செய்து பிராயச்சித்தஞ்செய்து சுத்தரானாரையும் கிராமகண்டகராய் பிராயச்சித்தஞ்செய்து சுத்தரானாரையும் அகம்மியாகமனம்செய்து பிராயச்சித்தஞ்செய்து சுத்தரானாரையும் ஆக இச்சுட்டப்பட்ட அ

* வாரியத்துக்கு யோக்கியரல்லாதாரைக் குறிப்பிடுகிறது.

வரையும் பிராணாந்திகம் வாரியத்துக்குக் குடவோலை எழுதிப்புகவிடப் பெறாததாகவும்.

“ஆக இச்சுட்டப்பட்ட * இத்தனை வரையும்நீக்கி இம்முப்பது குடும்பிலும் குடவோலைக்குப்பெயர் சீட்டி இப்பன்னிரண்டுசேரியிலுமாக இக்குடும்பும் வெவ்வேறே வாயோலைபூட்டி முப்பது குடும்பும் வெவ்வேறே கட்டிக்குடம்புக இடுவதாகவும். குடவோலை பிறிக்கும்போது மகாசபைத்திருவடியாரை ஸபாலவிருத்தம் நிரம்பக்கூட்டிக்கொண்டு அன்றுள்ளூரில் இருந்த நம்பிமார் ஒருவரையும் ஒழியாமே மகாசபையிலே ஊர் மண்டகத்திலே இருத்திக்கொண்டு அந்நம்பிமார் நடுவே அக்குடத்தை நம்பிமாரில் விருத்தராயிருப்பாரொரு நம்பிமேல் நோக்கி எல்லாஜனமும் காணுமாற்றால் (1) எடுத்துக்கொண்டு நிற்க பகலே யந்தரமறியாதான் ஒரு பாலகனைக்கொண்டு ஒருகுடும்புவாங்கி மற்றொருகுடத்துக்கே புகவிட்டுக் குலைத்து, அக்குடத்தில்லோரோலைவாங்கி மத்தியஸ்தன் கையிலே குடுப்பதாகவும். அக்குடுத்தவோலை மத்தியஸ்தன் வாங்கும்போது அஞ்சுவிரலும் அகலவைத்து உள்ளங்கையிலே ஏற்றுக்கொள்வானாகவும். † அவ்வேற்றுவாங்கின ஓலை வாசிப்பானாகவும்.

“வாசித்த அவ்வோலை அங்குள மண்டகத்திருந்த நம்பிமார் எல்லாரும் வாசிப்பாராகவும். ‡ வாசித்த அப்பெயர் சீட்டுவதாகவும். இப்பரிசே முப்பது குடும்பிலும் ஓரோர்பெயர் கொள்வதாகவும். இக்கொண்ட $ முப்பதுபெயரிலும் தோட்டவாரியமும் ஏரிவாரியமும் செய்தாரையும் வித்தியாவிருத்தரையும் வயோவிருத்தர்களையும் சம்வத்சர வாரியாரகக்கொள்வதாகவும். மிக்குநின்றருள் பன்னிருவரைத்

---

* எப்படிக் குடவோலைபரிப்பது என்பதை வர்ணிக்கிறது.

(1) குடத்தில் முன்னரே கள்ளத்தனமாய்ப் போட்டுவைத்திருக்கும் ஓலைகளுண்டோவென்னும் ஐயநீங்க இச் சாக்கிரதை.

† கையில் மற்றோர் பெயர்பொறித்த ஒரு சிறுஓலையை ஒளித்திருந்தால் அது வெளிப்படும்படிக்கான ஜாக்கிரதை.

‡ மத்தியஸ்தன் ஏற்றுக்கொண்ட ஓலையிலுள்ள பெயரைவாசிக்காமல் தனக்கு வேண்டியவன் பெயரை வாசிபபான் என்னும் சந்தேகத்தை நீக்கும் பொருட்டு இசசாக்கிரதை.

$ முப்பது பெயர்கள் எவ்வாறு பிரிக்கப்படுகிறார்கள் என்பதை விவரிக்கிறது;

தோட்டவாரியங்கொள்வதாகவும். நின்ற அறுவரையும் ஏரிவாரியமாகக் கொள்வதாகவும். இவ்விரண்டுதிறத்துவாரியமும் கரைகாட்டிக்கொள்வதாகவும். இவ்வாரியம் செய்கின்ற மூன்றுதிறத்துவாரியப்பெருமக்களும் முந்நூற்று அறுபதுநாளும் நிரம்பச்செய்து ஒழிவதாகவும்."

"வாரியஞ் * செய்யாநின்றாரை அபராதங்கண்டபோது அவனை யொழித்துவதாகவும். இவர்கள் ஒழிந்த அனந்தரமிடும் வாரியங்களும் பன்னிரண்டு சேரியிலும் தர்ம்மகிருத்தியங் கடைநாளும் வாரியரே மத்தியஸ்தரைக்கொண்டு குறி † கூட்டிக் குடுப்பாராகவும். இவ்விவஸ்தையேயோலைப்படியே குடவோலை பரித்துக்கொண்டே வாரியம் இடுவதாகவும்."

"பஞ்சவார வாரியத்துக்கும் பொன் ‡ வாரியத்துக்கும் முப்பது குடும்பிலும் குடவோலைக்குப் பெயர்நீட்டி முப்பது வாயோலைக்குடம் புக இட்டு முப்பது குடவோலை பறித்து முப்பதிலும் பன்னிரண்டு பெயர் பரித்துக் கொள்வதாகவும். பரித்த பன்னிரண்டிலும் அறுவர் பொன்வாரியம், அறுவர் பஞ்சவார வாரியமும் ஆவனவாகவும்."

"பிற்றையாண்டும் இவ்வாரியங்கள் குடவோலை பரிக்கும்போது இவ்வாரியங்களுக்கு முன்னம் செய்த குடும்பன்றிக்கே, நின்றகுடும்பிலே கரைபரித்துக் கொள்வதாகவும்."

"கழுதையேறினாரையும், கூடலேகைசெய்தாரையும் குடவோலை எழுதிப்புக இடப்பெறாததாகவும்."§

"மத்தியஸ்தரும் அர்த்தசௌசமுடையானே கணக்கெழுதுவாஞகவும். கணக்கெழுதினன் கணக்குப்பெருங்குறிப்பெருமக்களோடு கூட கணக்குக்காட்டி சுத்தன் ஆச்சிதின் பின்னன்றி, மற்றுக்கணக்

---

* ஒருவர் இருவரை வாரியத்துக்கு எவ்வாறு நியமிக்கிறது என்பதை விளக்குகிறது.

† குறி=மகாஜனசபை. ‡ மற்றவாரியத்தைப்பற்றிச் சொல்லுகிறது.

§ இது முன்காட்டின வாரியத்துக்கு யோக்கியரல்லாதாரில், மறதியால் விட்டுப்போனவர்களை இவ்விடத்துச் சேர்த்திருக்கிறது.

குப் புகப்பெறுதாராகவும். தானெழுதினகணக்குத் தானேகாட்டுவாராகவும். மற்றுக்கணக்கர் புக்கு ஒடுக்கப்பெறுதார் ஆகவும்."

"இப்பரிசே இவ்வாண்டுமுதல் சந்திராதித்தவல் என்றும் குடவோலை வாரியமே இடுவதாக தேவேந்திரன் சக்கரவர்த்தி பண்டிதவத்சலன் குஞ்சரமல்லன் சூரசூளாமணி கல்பகசரிதை ஸ்ரீ பரகேசரிவர்ம்மர்கை ஸ்ரீ முகமருளிச்செய்து வரக்காட்ட ஸ்ரீ ஆஞ்ஞையால் சோழநாட்டுப் புறங்கரம்பைநாட்டு ஸ்ரீவங்கநகர்க்காரஞ்சை கொண்டய கிரமவித்த பட்டனாகிய சோமாசிப் பெருமானுடன் இருந்து இப்பரிசு செய்விக்க நங்கிராமத்துக்கு அப்பியுதயமாக துஷ்டர் கெட்டு விசிஷ்டர் வர்த்திப்பதாக வியவஸ்தை செய்தோம். உத்தரமேருச்சதுர்வேதி மங்கலத்து சபையோம். இப்பரிசு குறியுள் இருந்து பெருமக்கள் பணிக்க வியவஸ்தை எழுதினேன். மத்தியஸ்தன் காட்டிப்பொத்தன் சிவக்குறி இராஜ மல்லமங்கலப் பிரியனேன்."

மேற்கூறியவாறு சபையாரால் தெரிந்தெடுக்கப்பட்டவுடனே அவர்கள் தத்தம் வேலையிலமர்ந்து தமக்கென்றிட்ட காரியத்தைப்பார்ப்பார்கள். ஊர்களில் நியாயம் விசாரித்துத் தீர்ப்பு அளிப்பது சம்வத்ஸர வாரியக்காரர்களைச்சேர்ந்த விஷயம்போலத்தோற்றுகின்றது. இவர்கள் விதிக்கும் தண்டனை சிலவற்றைக் கீழே கவனிப்போம். கொலைசெய்தவனுக்குத் தண்டனை அவன் உயிர்வாங்குவதே. ஆயின் தற்செயலாய் ஒருவன் அசாக்கிரதையால் நேர்ந்த சாவுக்காக, அவ்வசாக்கிரதைக்குத் தக்கபடி தண்டனை விதிக்கப்பட்டது. ஏழாட்டைப் பிராயத்தான் ஒருபையன் கொடுவாள்கொண்டு மாக்கொம்புகளைத் தறிக்கப்போனவிடத்து அவனுடன் சென்ற ஆறாட்டைப் பிராயத்தான் மற்றொருபையன் கையை நீட்டத் தற்செயலாய்க் கொடுவாள்பட்டு இறந்தான். சபையார் கூடி விசாரித்து, இது தற்செயலே: ஆயினும் இதைப்போல மறுபடியும் நேராவண்ணம், கோயிலில் அரைவிளக்கு எரிக்கச்செல்லும் தொகையைத் தண்டமாகக் கொடுக்கப் பணித்தார்கள். இத்தொகை குற்றவாளிப் பையனுடைய தகப்பனிடமிருந்து "வசூல்" செய்யப்பட்டது. * இதே மாதிரியாக, ஒருவன் மானெய்தற்கு அம்புவிடுகையில், இடையில்

* Ep. An. Rep for 1901-2. No. 223 of 1902.

வந்த மனிதன் ஒருவன்மேல் தற்செயலாகப்பட்டதனால் இறந்தான். இவ்விஷயத்திலும் மேற்கூறிய தண்டனையே விதிக்கப்பட்டது.

மற்றக்குற்றங்களுக்குத் தண்டனை, சிறை தளை சங்கிலிபுகுதல் என்பன; "இவன் சாகிலும் போகிலும் சிறைதளை சங்கிலி புகிலும் இவ்வனைவோம் முன்புநின்றோமே சந்திராதித்தவல் நெயட்டுவதாய் புணைப்பட்டோம்" † என்பதனால் இதனையறிக.

ஓர் அதிகாரி தன்னாட்டுவரி முதலான பணங்களைத் தண்டல் செய்து தானேசெலவழித்துக்கொண்டுவிட்டான்; இச்செய்தியையறிந்து அரசாங்கத்தார் அவனைச்சிறையிலிடும்படி, அவனுக்குப்பின் நியமிக்கப் பட்ட அதிகாரிக்குக் கட்டளை அனுப்பினார்கள். சிறையில் வைக்கப் பட்டவன் ஒருநாள் தப்பி ஓடிவிட்டான். அவனால் வரவேண்டிய தொகைக்கு அவன் வீடு நிலம் முதலிய ஸ்திதிகளை விற்று ஒழுங்கு பண்ண அவ்வதிகாரிக்கு உத்திரவு வந்தது—என்று திருப்பாய்த் துறைச் சாஸனம் ஒன்று கூறுகிறது.

கோயில்களில் நெய்விளக்கெரிப்போமாக என்று ஒப்புக்கொண்டு பொன்பெற்றவர்கள் எரிக்காமல் "இத்தர்மம் முட்டின பொழுது" இவர்கள் "நிசதி ஒருகழஞ்சு பொன் தர்ம்மாசனத்தே மன்றஒட்டிக்குடு' ப்பாராகத் தண்டம் விதிக்கப்படுவார்கள். இதுபோன்ற பொன்தண்ட முடைய குற்றங்களெல்லாம், ஒப்புக்கொண்ட விஷயங்கள் செய்யாதொழி வன என்று ஏற்படுகிறது.

இராச்சியத்தை ஒழுங்காக அளந்தாலன்றி இவ்வளவு விளைநில மிருக்கிறதென்பதும அவற்றினின்றும் இவ்வளவு வரிப்பணம் வரவேண் டியதென்பதும் நிச்சயப்படா. ஆகலால், சோழர்காலத்து நிலவளவு ஒழுங்குதிட்டமாகச் செய்துவரப்பட்டது. முதல் ராஜராஜன் காலத்து ஒரு தடவையும், குலோத்துங்கன் காலத்து ஒரு தடவையும் இராச்சிய த்துள்ள நிலமுழுதும் அளக்கப்பட்டது. "உடையார் சுங்கந்தவிர்த் தருளின குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு கசு-வது அளக்கக்

* Ep. An. Rep. for 1901-2; No. 64 of 1900.

† S. I. I. Vol. III p, 28.

குறைந்த நிலம்"* என்பதனாலும், இன்னம் மற்றச் சாஸனங்களாலும்' குலோத்துங்கன் (1) 16-வது வருஷத்தில் நிலமளக்கப்பட்டதென்றும், இரண்டு வருஷங்கழிந்தபின் 18-வது ஆண்டில் வரியேற்படுத்தப் பட்டதென்றும் "உடையார் சுங்கந்தவிர்த்தருளின குலோத்துங்க சோழ தேவர்க்கு ௧௮-வது இறைகட்டின காணிக்கடன்"† என்பதனாலும் நன்குபுலப்படும்.

இக்காலத்து நிலம் எவ்வளவு நுட்பமாயளக்கப்பட்டதென்பது, "ஆக இறையிலி நீங்குநிலம் முக்காலே இரண்டுமாக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே இரண்டுமா முக்காணிக்கீழ் அரையே இரண்டு மா முக்காணிக்கீழ் முக்காலே நான்குமா அரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்குமாவினால் இறைகட்டின காணிக்கடன் ராஜகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக்கடவநெல்"‡ என்பதனால் விளங்கும். இதிற்குறித்துள்ள நிலத்தின் விஸ்தீர்ணம் $\frac{1}{52,428,800,000}$ வேலி. இந்நிலந்தான் இறையிலியாக நீக்கப்பட்டது.

தானஞ்செய்யப்பட்ட நிலங்கள் தேவதானம், சாலாபோகம், பட்டவிருத்தி, பள்ளிச்சந்தம் எனப் பலபெயர்பெறும். இவற்றுள் தேவதானம் என்பது ஆரிய தேவாலயங்களுக்குக் கொடுக்கப்படும் நிலம். சாலாபோகமென்பது அறச்சாலைகட்காக விடப்படும் நிலம். பட்டவிருத்தி என்பது பிராமணர்கட்குத் தானஞ் செய்தது. பள்ளிச்சந்தமென்பது ஜைனபௌத்தப்பள்ளிகட்கு அளித்தது. அரசன் ஊர்களைத் தானஞ் செய்வதாயின், அவற்றிலுள்ள இறையிலி நிலங்களை நீக்கியே செய்வன். "ஊர்நத்தமும் ஸ்ரீகோயில்களும், குளங்களும், ஊடறுத்துப்போன வாய்க்கால்களும், பறைச்சேரியும், கம்மாளச்சேரியும், சுடுகாடும்" $ முதலியன நீக்கவேண்டியவை. இவையெல்லாம் நீக்கி அரசன் தன்வரிக்கூறிடுவோர்க்கு அறிவிப்ப அவர்களிடமிருந்து வரும் கட்டளைப்படி வரியிலார் தம் பொத்தகங்களில் இவ்வூர்கள்

* திருவீழிமிழலை.

† ஷை ஊர்.

‡ S. I. I. Vol. II.

$ S. I. I. Vol. II. p. 43.

இறையிலி தேவதானம் என்று எழுதிக்கொள்வார்கள்.

ஒவ்வோர் ஊரும் தம்மில் விளைந்த நெல்லில் ஒருபகுதியை வரியாக அரசனுக்கு இறுக்கவேண்டும். அப்படிச் செய்யாதவர்கணிலத்தை அவர்களிடமிருந்து திரும்பவாங்கிக்கொண்டு ஊர்ப்பொதுநிலமாக்கி, அவ்வவ்வூர்களே தமக்குள் விலையாக்கி, அதனால் வரும் பணத்தை இறைக்குக்கொடுப்பது வழக்கம். "யாண்டு ௨௪-வது, நாள் ௧௩௪-னால், உடையார் ஸ்ரீராஜராஜதேவர் தஞ்சாவூர்ப் பெரியசெண்டு வாயிற் சித்திரகூடத்துத் தெற்கில் கல்லூரில் எழுந்தருளியிருந்து சோணாட்டும், சோணாட்டுப்படும் புறநாடுகளிலும், தொண்டைநாட்டிலும், பாண்டிநாடான ராஜராஜவளநாட்டிலும், பார்ப்பன ஊர்களிலும், வைகானஸர் ஊர்களிலும், ஸ்ரமணர்ஊர்களிலும், காணியுடையார் யாண்டு ௧௩-வது முதல் ௨௩-வது வரையில் ஈராண்டு நிரம்பி மூவாண்டு தந்தங்காணியான நிலங்களுக்கு அவ்வவ் ஊர்களிலாரோடும், ஊரிடுவரிப்பாடு இறை இறுதபோனார் காணி உடையாரைத்தவிர, ஊர் நிலமாய் அவ்வவ் ஊர்களிலாரே விற்றுக்கொள்ளப் பெறுவார்களாகவும். யாண்டு ௨௪வது முதல் ஈராண்டு நிரம்பி மூவாண்டு ஊரிடுவரிப்பாடு இறை இறுது போனார் காணி உடையாரைத்தவிர, அவ்வவ் ஊர்களிலாரே விற்றுக் கொள்ளப் பெறுவார்களாகவுமென்று இப்பரிசு திருவாய்மொழிந்தருளினபடி திருமந்திரவோலை நாயகன் மும்முடி சோழப்ரஹ்மமாராயனும் மும்முடிச் சோழபோசனும் ஒப்பிட்டுப் புகுந்த கேழ்விப்படி, ௨௪-வது நாள் ௧௪௩-னால் வரியிலிட்டது.*" என்பது ஓர் இராயசம். இதனால் வரி இறுதபோனவர்களது நிலம் எவ்வாறு விநியோகிக்கப்பட்டது என்பது விளங்கும்.

வாங்கப்பட்ட வரித்தொகைகளைக் கணக்கிற் பதிந்து கொள்வோர்க்கு வரியிலார் என்று பெயர். வந்த வரியை எவ்வாறு செலவிடுவது என்பதைத் திட்டஞ் செய்வார், வரிக்குக் கூறு செய்வார் எனப்படுவர். வெளிப்புறத்தூர்களில் வரிவிஷயமான கணக்குகளை வைப்பவர் பலாதலின் அவர் குடியிருக்குமிடத்திற்குப் புரவரித்திணைக்களம் என்றும்,

---

* S, I. I. Vol. III. III. p. 14—15.

இவர்கட்கு புரவரித்திணைக்களத்தார்களென்றும், இவர்கள் மேலதிகாரிக்கு புரவரித்திணைக்களநாயகம், புரவரித்திணைக்களமுகவெட்டி யென்றும் பெயர்.

நிலவரி முதலியவை தவிரத் தலைவரியொன்றுமிருந்தது. அதனைத்தான் குலோத்துங்கன் (1) தவிர்த்தது. அவ்வாறு சுங்கந்தவிர்த்தமையால் "சுங்கந்தவிர்த்த சோழன்" என்னுஞ் சிறப்புப் பெயர் பூண்டானென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். கூனர் குறளர்க்கு முன்னியூர் என்னுமிடத்தில் மாத்திரம் வரியில்லை.* ஆதலால் இவ்வூர்க்குக் கூனர்குறளர் முன்னியூர் என்ற பெயர் வழங்கி வந்தது.

ஊர்களைக் காத்தற்கென்று ஓர் வரி வாங்கப்பட்டு வந்தது. அதற்குப் பாடிகாவல் என்பது பெயர். இன்னும் பற்பல தொழில்களுக்கும் வரியேற்பட்டிருந்தன. இப்போதைப்போலத் தொழில்வரியெனப் பொதுப்பெயர்கொடுத்து வெவ்வேறு வரி கொள்வதுபோலவின்றி ஒவ்வொரு தொழிலின்பெயரையும் சுட்டி, தறியிறை, தட்டாரப்பாட்டம், செக்கிறை எனப் பலபெயர்களாலும் வரியேற்படுத்தப்பட்டன. வரிகளின் பெயர்கள் பலவாயிருத்தல் நோக்கி நம்மவர் அக்காலத்துவரிகள் பலவாயிருந்தனவென்று கருதலாகாது.

சிற்சில சமயங்களில் அரசர்கள் ஊர்களைத் தானஞ் செய்யாது அவைகளினின்று வரும் இறைப்பணத்தைத் தானஞ் செய்வார்கள். சாதாரணமனிதன் ஒருவன் பூதானஞ் செய்யவேண்டின், அதன் விலையை உடையானுக்குக் கொடுத்துக்கொண்டு, அதனை இறையிலியாக்க, சபையாரிடம் திட்டப்படி ஒரு தொகையைச் செலுத்திப் பிறகு இறையிலி பூதானமாக்கல் வழக்கம்.

அவ்வவ்வூர்களில் திரட்டும் வரிப்பணங்களைப் பரிசோதித்துச் 'சரியான பொற்காசு' என்று தீர்மானித்தல் பொன்வாரியக்காரர்கள் கவனிக்கவேண்டிய விஷயம்.

* Ep. An. Rep. for 1902-3. No. 607 of 1902. இந்நாட்டுக்கு ஆலூர்க் கூற்றத்து திருவிளக்குப் பிடிக்கும் கூனர் குறளர் இறையிலியான முன்னியூரில்" See S. I. I. Vol. II. p. 276. "ஆலூர்க் கூற்றத்துக் கூனர்தன் முன்னியூர்."

சோழசக்கரவர்த்திகள் செம்பு, வெள்ளி, பொன் இம்மூன்று உலோகத்திலும் நாணயங்கள் செய்து நாட்டில் வழங்கச் செய்தனர். இக்காசுகளிற் சில இக்காலத்தும் ஆங்காங்குக் காணலாம். அவற்றிலும் முதல் இராஜராஜனது செப்புநாணயங்கள் மிகுதியும் எளிதிற் கிடைக்கின்றன. அக்காலத்துப் பொன் வெள்ளி நாணயங்கள் ஒவ்வொன்றும் ஒரே எடையுள்ளனவாய்ச் செய்யப்பட்டிருந்தனவென்று நாணயபரீட்சையிற் பெரிதும் ஆராய்ச்சி செய்துள்ள கன்னிங்காம் துரை எழுதியிருக்கிறார்.

அக்காலத்தே நிறுத்தல், முகத்தல் முதலிய அளவுகட்கும், பொன் இரத்தினங்கள் நிறுத்தற்கும், பொன் மாற்று நோக்குதற்கும் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட மரக்கால் முதலியனவிருந்தன. அரசாங்க முத்திரையிட்ட மரக்காலுக்கு இராஜராஜன் (1) காலத்து இராஜகேசரி என்பது பெயர். இதற்குச் சமமான தஞ்சாவூர்க்கோயில் மரக்காலுக்கு ஆடவல்லான் என்பது பெயர். ஆனால் நாடுதோறும் மரக்காற்பெயர்கள் வேறுபட்டிருந்தன. அரசாங்க முத்திரையிட்ட எடைக்கல்லுக்குக் குடிஞைக்கல் என்று பெயர். தஞ்சாவூர்க்கோயிலில் இதற்குச் சம எடையுள்ள கல்லுக்கு ஆடவல்லான என்பது பெயர். (இப்பெயர்கள் சிவபிரான் பெயரா லிடப்பட்டன.) பொன்மாற்றுக்கு வைத்திருந்த ஆணிக்குத் தண்டவாணியென்பது * பெயர். பொன் முதலிய விலையுயர்ந்த பதார்த்தங்கள் நிறுக்கக் கழஞ்சு, மஞ்சாடி முதலிய நிறைகள் வழங்கின.

நாடுகள் தோறும், இருமருங்கும் நிழலைத்தரும் மரங்களுடைய சாலைகளும், பெருவழிகளும் பலவிருந்தன. "அரங்கம் நோக்கிப் போந்த பெருவழிக்குக் கிழக்கு" என்றாற்போல்வனவற்றால், இவையிருந்தனவென்பது நன்கு விளங்கும். சோழர்கள் தம் நாட்டை நீர்வளமுடைத்தாயிருக்கச் செய்வதில் மிக்க கருத்துடையவர்கள். சோணாட்டுக்கு இதுபற்றியே புனனாடு என்றோர் பெயருண்டு. பண்டைக்காலத்துக் கரிகாலன் காவிரிக்கு இருபக்கமும் கரையிடுவித்தான் என்பதும், பிற்காலத்துப் பெருவளவன்வாய்க்கால், வீரசோழனாறு, முடிகொண்டான, வெட்டாறு எனனும் பெயர்கள் வழங்குவதுமே மேற்கூறிய

* S. I. I, Vol. II. p. 41.

விஷயத்துக்கு உற்ற சான்றாகும். ஆறுகளையன்றிப் பற்பல பெருத்த ஏரிகளையும் அன்னோர் கட்டிவைத்தனர். கங்கைகொண்ட சோழபுரத்தேரியும், காவிரிப்பாக்கத்தேரியும் இன்னும் பலவும் இவர்கள் காலத்துண்டாயினவே. ஸ்ரீரங்கத்துக்குக் கிழக்கே 10-மைலுக் கப்பாலுள்ள அணைக்கட்டானது சோழர்களாலே கட்டப்பட்டது. இப்பொழுது அதன்பேரில் ஆங்கிலேயர் புதுப்பாலம் இட்டிருக்கிறார்கள். இவ்வணைக் கட்டினாற்றான் தஞ்சாவூர்ஜில்லாவுக்கு நீர்ப்பாய்ச்சல் வசதி ஏற்பட்டது. அவ்வூர்களிலுள்ள ஏரிவாரியத்தார், விளைவுக்கு வேண்டிய நீரை அவரவர்கட்கு முறைப்படி பாயச்செய்தும், ஏரிகளிற் கிலமானவற்றைப் புதுப்பித்தும் மற்றும் வேண்டிய சகல ஒழுங்குகளையும் செய்தும் கொடுக்கவேண்டியது கடமை. கண்ணாறுகள் பலகட்டி, இவ்வளவு சதுரத்துக்கு இவ்வளவு கண்ணாறுகள் பாய்வது என வியவஸ்தை செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறு குளங்களிலும் ஆறுகளிலும் பாயும் நீரையுபயோகித்துக் கொள்ள வரி இறுத்தல்வேண்டும். இவையன்றி வேறு எவ்விதமாக நீரைப்பாய்ச்சிக்கொண்டாலும் சபையார்க்கு வரிப்பணம் கொடுக்க வேண்டுமென்பது, நிலநீர்ப்பாட்டம், ஒழுக்குநீர்ப்பாட்டம் என்பவற்றாலும், நன்னீர் புன்னீர் என வகுத்திருப்பதாலும் அறியப்படும்

சோழசக்கரவர்த்திகள்காலத்திலே கட்டப்பட்ட கோயில்கள்தென்னிந்தியாவில் மிகுதியாம். இவை, அரசர்களாலும் அவர்போன்ற மற்றவர்களாலும் கட்டப்பட்டவை. பழையகாலத்தே, கோயில்களைப் புதுப்பித்தல் இக்காலத்திற்போல எளிய காரியமன்று. இப்போது, செட்டிமக்களுக்குப் பணம் அதிகமாகச்சேர்ந்துவிட்டால், பாடல்பெற்றும், பழைய சாஸனங்களையுமுடைத்தான ஒரு புராதனக்கோயிலை, தமதிஷ்டப்படி இடித்து, பழங்கற்களை எழுத்தற வெட்டிக்கொத்திப் புதுப்பித்து, ஆங்காங்கே வைத்துப் புதுக்கட்டிடமாக்கி விடுகிறார்கள். இப்படிக்கட்டும் கோயில்களில் ஏதேனும் அழகாயிருக்கின்றதா? பழங்கோயில் புதுக்கோயிலாகிவிடுவதே போதுமென்று—அலடின் கதையில் பழையவிளக்குக்கொடுத்துவிட்டுப் புதுவிளக்குப்பெற்று ஏமாந்தவனைப்

போல—நம்மவரும் மோசம் போகின்றனர். என்னே இவர் தம் அறிவு? இவ்வாறு பழங்கோயில்களைப் பாழாக்குவதால் உண்டாகும் நஷ்டம் இவ்வளவு என்பது தெரியுமாகில் ஒருகால் அவ்வாறு இடியாதொழிவார்களோ தெரிந்திலது. ஆனால் இக்காலத்தில் நடக்கும் அந்நியாயத்தைப்போல அக்காலத்தே நடத்தமுடியாது. ஏனெனில், ஒருவன் ஒருகோயிலைப் புதுப்பிக்கவெண்ணினனாயின், அக்கோயிற்குரிய நாட்டதிகாரியிடம் தன்னெண்ணத்தைத் தெரிவிக்கவேண்டும். அவன் அரசனுக்கறிவிப்பான். அரசனும், "நாயனார் வீரநாசிங்கதேவர்க்கு யாண்டு நாற்ப "தாவது ஐப்பசிமாதம் இருபதாந்தியதி கோயிலாழ்வார்க்கு கோயி"லுக்குக்கோயில் செய்ய தேசாந்திரிகளில் திருப்புல்லாணிதாஸர் "ஆரம்பிக்கையில் முன்பத்தை கோயில் ஆழ்வாரில் கல்வெட்டுப்படி "எடுத்து, முதல்பிராகாரத்து வடக்குதிசையில் புறவாயிலே கல்வெ "ட்டுவிப்பதென்று தானத்தாக்கு நாயனார் திருமுகம் வருகையில் "திருமுகப்படி கல்வெட்டுவதென்று தானமாக நியமிக்க இவ்வாண் "டை சித்திரமாதம் ௨௨-ந்தியதி வெள்ளிக்கிழமை உத்திராடத்து "நாள் கல்வெட்டினபடி" * "ஆளுடையார்கோயிலில் திருவெதிரம்பலத்துக் குறடு பொன்செய்யுமிடத்து இவ்விடத்துக் கல்வெட்டுக்குப் படியெடுத்துத் தொண்டைமான் தான் நிச்சயித்த இடத்திலே கல்வெட்டக் கடவதாகச் சொல்லி" என்பவைபோன்ற கட்டளையை அனுப்புவான். அதனையொட்டிப் பழங்கோயிலிலுள்ள சாஸனங்களைத் தம் செலவில் ஓலைகளில் எடுத்தெழுதுவித்துக்கொண்டு, கோவிலைக்கட்டிமுடித்தபின் அதன் பேரில் அதிகாரிகள் காட்டுமிடத்தே திரும்பவும் பழையகல்வெட்டுக்களைப் பொறிக்கவேண்டும். இவ்வாறு பழஞ்சாஸனங்களை மறுபடியும் எழுதுங்கால் "இச்சிரிவிமானமிடித்துக் கட்டுங்கால் கண்ட சிலாலேகைப்படி" †யென்று ஆரம்பித்துத்தான் அவற்றின் பிரதிகளை வெட்டுவது வழக்கம்.

---

* செந்தமிழ்- தொகுதி-3-பக்கம்-105.

† S. I. I. Vol. III. 99. இவ்வாறு திருப்பணிசெய்ததில் திரும்ப வெழுதிய சாஸனங்களென்று கூறுமிடங்கள் பல. அவைகளுள், திருவல்லம், திருமழபாடி, குடிமியான்மலை, திருக்குற்றாலம். திருப்பதி, திண்டிவன முதலியன அடங்கும்.

சோழவம்சத்தரசர்கள்காலத்து ஆங்காங்கு அறச்சாலைகளும் (சத்திரமல்லது ஊட்டுப்புரைகள்,) ஆதுலர்சாலைகளும் வைக்கப்பட்டிருந்தன. "முடிகொண்டசோழப்பேராற்றுக்கு வடகரையில் ஆதுலசாலையாகக் கொண்ட மடத்திலே ஆதுலரையும், அநாதரையும்"* உண்பித்தற்கு விராடராஜன் நிலமான்யம் விட்டிருந்தான். இக்காலத்து மலையாளப் பிராந்தியத்தில் நடப்பதுபோலக் கோயிலிலேயே உச்சிசந்தி சமயத்தில் பிராமணர்பலர் உண்பிக்கப்பட்டு வந்தனர். "இத்தேவர் அறச்சாலை உண்கைக்கு இறையிலிசெய்து குடுத்துக்கொண்ட எம்பிலிசைந்த நற்காசு" † "அரயன் கருவுணுபகரான களப்பாளராஜர்செய்வித்த சாலைக்குச் சாலைப்புறமாக நாங்கள் இறையிலியாக விற்றுக்குடுத்தநிலமாவது" ‡ 'திருவானைக்காவில் பட்டாரகர் உச்சம்போது அமுதுசெய்யும்போது வெதஃவல்லாரிருவர் ப்ராஹ்மணரையூட்டுவதற்கு இவ்வூர்காச்சுவன் கேசவந்தர்க்கன் வைத்தபொன் கசு௦ கழஞ்சு" $ "ஸ்ரீ அரங்கத்துப்பெருமானடிகளுச்சம்போது அமுதுசெய்தருளும்போது வெதஃவல்லாரொருப்ராஹ்மணனை யூட்டுவதாக்' ¶ என்பவற்றால் ஊட்டுப்புரைக்கு வேண்டுந்திரவியம் எங்கிருந்து வந்ததென்பதை அறியலாம்.

கோயில் நிலத்தைப் பெற்றுச் சிலகடமை இறுப்பதாகப் பிரமாணத் தீட்டுக்கொடுத்துத் தப்பினவர்க்கும், சில ஊழியம் செய்வதாக ஒப்புக் கொண்டு தவறினவர்க்கும் செய்யும் நியாயம் அடியில் வருவனவற்றால் விளங்கும். கீழ்வரும் சாஸனம் திருச்சாய்க்காடு, சாயாவனேசுவரர் கோயில் இரண்டாம் பிராகாரம் வடசுவரில் எழுதப்பட்டுளது.

"யாண்டு பதினெட்டாவது நாள் நூற்று ஐம்பத்தாறினால் பிரசாதம் செய்தருளின திருமுகப்படி; திரிபுவனச்சக்கரவர்த்தி கோனேரின்மைகொண்டான் இராஜாதிராஜ வளநாட்டு உடையார் திருச்சாய்க்

* திருப்புகலூர்.

† திருப்புகலூர்; See also S. I. I. Vol. II. p. 133, "சேவித்துவந்த சிவயோகிகள் பதின்மரும் உடையார்சாலையிலே உண்ணக்கடவர்.,'

‡ திருப்புகலூர்.

$ செந்தமிழ்த் தொகுதி. 3-பக்கம் 200.

¶ Ep. An. Rep. for 1891:2-No. 73 of 1892.

காடுடையார் கோயில் தேவ கன்மிகளுக்கும் ஸ்ரீமாஹேஸ்வரக்கண்காணி செய்வானுக்கும் இத்தேவர் தேவதானம் ஆன ஊர்களில் இக்கோயில் சிவப்பிராமணரில் திருஞானசம்பந்தபட்டனும் ஸ்ரீபாதந் தாங்குவார்க்கு நாயகம்காட்டிய கையனும் திருச்சாய்க்காட்டு வேளானும் என்பார்க்[கு]ம் இவர்கள் உறவுமுறையார் சிலர்தரும் காணியான நிலத்துக்கும் இத்தேவர் திருநாமத்துக்காணியான நிலத்துக்கும் பதின் ஏழாவது வரையும் கடமையும் நேராக இறுநே தங்கள் தேவைகளும் செய்யாதே சில அதிக்கிரமங்கள் செய்து அசல்ஊரிலே போய் இருந்தார்கள் என்றும் இவர்களை கைக்கொண்டு புண்ணித்துவரக்காட்டவும் இவர்கள் காணியான [நிலன்] சண்டேசுவரப் பெருவிலையாகப்பெற்றும் இவைகள் அடைகொண்டு பயிர்செய்த நிலத்தில் உடல் உள்ளதும் இவர்கள் பேர்கடமைக்கு உடலாக இத்தேவர் ஸ்ரீபண்டாரத்திலே எடுக்கவும் கடவதாகப் பெறவேணும் என்று வாணகோவரையன் சொன்னமையில் இப்படி செய்யக்கடவதாகச் சொன்னோம். இப்படிச்செய்யப்பண்ணுக.''

பிறர் அசாக்கிரதையாற் கொள்ளைபோனவிடத்து இறந்த சொத்துக்கள் விஷயமாகப் பண்டைக்காலத்திற செய்யும் ஏற்பாடுகளுக்கு அடியில் ஓர் உதாரணம் காட்டுவோம். கீழ்வரும் சாஸனமானது திருச்சாய்க்காட்டில் சாயாவனேசுவரர் கோயிலின் இரண்டாம் பிராகாரத்துத் தெனசுவரில் எழுதப்பட்டிருக்கிறது.

''கோப்பரகேசரிபன்மரான திரிபுவனச்சக்ரவத்திகள் ஸ்ரீவிக்கிரமசோழதேவற்கு யாண்டு ௬-வது, ராஜாதிராஜவளநாட்டு நாங்கூர் நாட்டு...திருச்சாய்க்காடு உடையார் கோயிலில் இனிதெழுந்தருளியிருந்த ஆதிசண்டேசுவரதேவர் திருநாமத்தால் இக்கோயில் சிவப்பிராமணக்காணிஉடைய சிவப்பிராமணன் ஆலச்சன் தாயன் திருவெண்காடுடையானும், ஆலச்சன சாயாவனமுடையான் தில்லைநாயகனும், ஆலச்சன் சிராளன் உய்யக்கொண்டானும், ஆலச்சன் சாயாவனமுடையான் திருவெண்காடுடையானும், சாயாவன முடையான் ராஜராஜனும், சாயாவனமுடையான் கு...டையான்வானேர்பிரானும் இவ்வனைவோம்; இக்கோயிலில் எங்கள் ............க்காணி ப்ராமாணம் பண்ணிக்குடுத்த

பரிசாவது இக்கோயிலில்எட்டாவது ஆடிமாஸத்து பிற்பதினஞ்சில்
இக்கோவில் திரு அத்தசாமமடங்கினதற்பின்பு, இக்கோயிலில் ஊர்
கண்காணி செய்வார்களும் ஸ்ரீமகேசுவரக்கண்காணி செய்வார்களும்
இக்கோயில் சோதிச்சு எங்களையும் திருமேனிகாப்பாரையும் கோயில்
செம்மே என்று கேட்டு திருக்காப்புக் கொண்டுபோனதற்பின்பு நாங்கள்
திறந்து புறப்பட்டு....................கொண்டுவந்து....திருவா..........டினை
இட்டுதிரு அணுக்கன் திருவாசலை த்திறந்த ..........க்கப்பார்த்து திரு
அணுக்கன் திருவாசலில் திருக்கதவை சாத்தி நாங்கள் கடந்தவாறே
....வந்து புகுந்து திருமாளிகை வாசலில்............புகுந்து திருமெய்க்
காப்பான் ஒருவனையும் வெட்ட எங்களில் ஒருவனையும் வெட்டி திரு
அணுக்கன்வாசலில் திருக்கதவைநீக்கிப் புக்குப் பற்றுயத்தை.........
முறித்து பொன்னின் திருவாசிகையும், மகரதோரணமும்..............
கையும் திருப்பட்டிகைப் பலகையும் மற்றும்.........முள்ளவை...வெள்
ளித்திருப்படிகலமும் வெள்ளி வட்டிலும் வெள்ளி அபிஷேக கலசமும்
வெள்ளிமச்ச.........செம்பு, தரா, பித்தளை உள்ளிட்ட பணிகளும்
ஒடுக்கிப் புறப்பட்டுப்போனபின்பு களவுபோனமை கேட்டு கரைக்கூறு
செய்கிற.........காவிரிப்பூம்பட்டினத்தாரும் களவுபோனமை எங்ங
னே என்று கேட்டு...நாங்கள்.....ருவிசேமஞ்செய்யா தொழிகையில்
எங்களைகுற்றநாடி......பண்டார முதலெடுத்து...கட்டபொன்னு......
லும் வெள்ளியாலும் செம்பினாலும் தராவாலும் பித்தளையாலும் திருப்
பரிசட்டத்தாலும் முதல் பதித்தகாசு...நானூற்றிருபது (இக்காசு)
சிவப்பிராம்மணரை தண்டமாக மதித்து,.....இக்காசை வைக்க என்று
விசனம்பண்ணி(னவிட)த்து, எங்க(ளில்சிலர்க்)கு இக்காசு வைக்க
உடலில்லா(மையால்) எங்களோபாதி(சிவப்பிராமணக்)காணியை விற்று
இறுக்கிறோமென்று) காணிகொள்வாரைத்தேடிநடந்துகொள்வாரைப்
பெறாமையில், கரைக்கூறு செய்வார்கள்...உங்கள் காணிகொள்வார்
இல்லையாகில் உங்கள் ஓபோதியால் வந்த நாள் இருபதரைக்கு உங்கள்
மதித்த காசு இருநூற்று எண்பத்தேழுக்கு இக்கோயிலில் ஆதிசண்
டேசுவா தேவர் திருநாமத்தால் விலையாக உங்கள் நாள் இருபதரையும்
கொடுக்க என்றும், இவ்விலை பிரமாணப்படிக்கே கல்லிலும் செம்பிலும்
வெட்டிக்கொண்டு இவர்களை விடுக என்று காவிரிப்பூம்பட்டினத்தாரார்க்

கும் நகரைக்குக் கண்காணி செய்கிற அபிமான......க்கும் சிங்களராயர் சொன்னமையில் விலையாவணஞ் செய்துகொடுத்தோம்."

பற்பல காலங்களில் பற்பலவிடங்களை இராஜதானியாக்கிக்கொண்டு சோழர்கள் அரசாண்டு வந்தனர். முற்காலமுதல் (அஃதாவது கி. பி. 250-முதல் விஜயாலயன் காலம்வரை) உறையூர், காவிரிப்பூம்பட்டினம், காஞ்சிபுரம் முதலியவை இராஜதானிகளாயிருந்தன. விஜயாலயன் தஞ்சாவூரைக் கைக்கொண்டு அதனைத் தலைநகராக்கினான். * அதுவே இராஜேந்திரசோழன் ஆட்சியின் மத்தியகாலம்வரை இராஜதானியாக விருந்தது. அவ்வரசன் காலத்தே கங்கைகொண்டசோழபுரம் கட்டப் பட்டதும் அஃது இராஜதானியாகிப் பின்னுள்ளவர்களால் உபயோகிக் கப்பட்டுவந்தது. விஜயாலயன் சந்ததியார் காவிரிப்பூம்பட்டினத்தை யேனும், உறையூரையேனும் எக்காலத்தாயினும் இராஜதானியாகக் கொண்டிருந்தார்களென்பது விளங்கவில்லை.

இராஜதானியிற் பெரியபண்டாரமொன்றும், கோயில்தோறும் ஒரு பண்டாரமும் வைக்கப்பட்டிருந்தன. இராஜதானியிலுள்ள, அரச னது பண்டாரத்துக்கு வரும் பணம், படையாளர்க்கும் உத்தியோகஸ் தர்க்கும் மாதசம்பளம் கொடுத்தற்கும், அரமனைச்செலவுக்கும், இராஜ்யத்தில் நன்மையுண்டாகும் விஷயத்திற்செய்யவேண்டிய பெருந்த செலவுகட்கும் உபயோகப்படுவதுபோலத் தோன்றுகிறது. கோயில் களிலுள்ள பண்டாரத்தில், அவற்றுக்கு விட்ட இறையிலிநிலங்களின் வருவாயாலும் பலர்சொரிக்கும் நன்கொடைகளாலும் பணஞ்சேரும். இப்பணத்திற் கோயிற்செலவுபோக, மிகுதியும் நாட்டுக்குடிகளின் க்ஷேமத்துக்குப் பயன்பட்டுவந்தது. நிலஞ்சீர்திருத்தவேனும், இறை ப்பணம் செலுத்தவேனும் பணமில்லாத அவசரகாலத்து, குடிகள் தம்நிலத்தைக் கீழீடாகவைத்துக் கோயிற் பண்டாரத்திற் பணம்பெறு வது வழக்கம். † இவ்வாறுபெற்ற பணத்துக்குப் பலிசை கோயிலுக்கு வேண்டும் கற்பூரமோ எண்ணெயோ எதையேனும் சபையார் பணித்த வண்ணம் கொடுக்கக்கடவர்.

---

* Ep. An. Rep. for 1905-6 Tiruvalangadu plates.

† Agricultural loans on landmortgage.

அக்காலத்துப் பலிசை நூற்றுக்குப்பன்னிரண்டுக்குக் குறையாம லிருந்தது. சிற்சில சமயங்களில், பதினைந்தாகவும் காண்கிறோம். பலவகையாகவும் எழுதப்படும் பத்திரங்களை (ஆவணங்களை) காப்பிட (Registration) களரிகளும் (சபைகளும்) அக்காலத்து ஊர்கள்தோறு மிருந்தன. பத்திரம் அடியில் வருமாறு எழுதி ஆவணக்களரிக்குக் காட்டி அவர்கள் காப்புப்பெறுவார்கள். "இந்நான்கெல்லைக்குட்பட்ட நாமிலிமிகுதிக் குறைவுபட்ட குழி ௬௱. இக்குழி அறுநூற்றுக்கு எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசு ௨௰ இப்படி இருபதும் ஆவணக்களரியேகாட்டிக்காப்பிட்டு கைச்செலவறக்கொண்டு விற்று விலைப் பிரமாணஞ் செய்துகொண்டு, மண்ணுறவிற்றுப் பொருளுறக்கொண்டோம். இக்குழி அறுநூற்றுக்கும் விலைப்படி பணம் இருபதுமே விலையாவதாகவும். இதுவல்லது வேறுபொருள் யாவறுதி, பொருட் செலவோலை காட்டக்கடவதல்லவாகவும்."* இப்பத்திரத்தை யெடுத்துக் கொண்டு, விற்றவனும், வாங்கினவனும் ஆவணக்களரிக்குச் சென்று அவர்கள் முன்பு தாம் இசைந்த விலைத்தொகையும், நிலவிஸ்தீரணமுஞ் சொல்லி, இருவரும் ஒப்புக்கொண்டோமென்று உறுதிமொழிகொடுத்த பின், களரியாரால் காப்பிடப்பெற்றுத் திரும்புவார்கள். இச்சாஸனம் உத்தரோத்தரம் வேண்டியதாயின் அவ்வூர்க்கோயிற் சுவரில் வெட்டுவது வழக்கம். இவ்வாறு வெட்டுவதனாற் பிற்காலத்தார், சாஸனப்படி கட்டளைகள் நடக்கின்றனவாவென்று வினவ ஆதாரமாகும். அதனை உத்தேசித்துத்தான் கல்வெட்டுப்பொறிப்பது வழக்கமாயிற்று. இதற்காகவே கல்வெட்டுக்கள், வெளிச்சமுள்ளவிடத்தும், யாவரும் எளிதில் வாசிக்கக்கூடியவிடத்திலுமே எழுதியிருக்கக் காணலாம்.

சோழராஜாக்கள் யானைப்படையும், குதிரைப்படையும், காலாட் படையும் மிகுதியாக வைத்துப் பரிபாலித்து வந்தனர். இவர்கள் தேர்ப்படை யுபயோகித்ததாகத் தெரியவில்லை. அக்காலத்து வழங்கிய ஆயுதங்கள் தடி, வில், வேல், வாள், அம்பு இவைகளே. மூன்றாங் குலோத்துங்கன்காலத்துச் சாஸனமொன்றில் "எரிமருந்தன் அரச

* திருப்புகலூர்.

நாராயணன்"* என்னும் பெயர் வருவதால் வெடிமருந்து அவ்வரசன் காலத்தே உபயோகிக்கப்பட்டதுபோலு மென்று சங்கிக்கவேண்டியிருக்கிறது.

படைத்தலைவர்கட்கு மகாசாமந்தன், ஸேநாதிபதி, சாமந்தன், தண்டநாயகன் எனப் பலபெயர்கள் வழங்கிவந்தன. மகாசாமந்தன் என்பவன் எல்லாப்படைகட்குந் தலைவன். சிறுசிறுபடைகளைத் தண்டநாயகர், சாமந்தர் என்போர் ஆளுவார்போலும். ஒவ்வொரு படைப் பிரிவுக்கும் வெவ்வேறு பெயர்களிடப்பட்டிருந்தன. உதாரணம்;—ராஜராஜத் தெரிந்தவலங்கை வேளைக்காரர்கள், † பராந்தக கொங்க வாளர், ‡ நிகரிலி சோழத் தெரிந்த உடநிலைக் குதிரைச்சேவகர், $ சிறுதனத்து வடுகக்காவலர், ¶ மும்முடிசோழத்தெரிந்த ஆனைப்பாகர் § என்பன. மேற்கூறிய உடனிலைக்குதிரைச்சேவகர்கள் ‖ என்னும் தொடரால், அரசனுடன் கூடவே எப்போதும் ஒரு குதிரைப்படையிருந்திருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. (1) படையாளர்கள் போரில்லாக் காலங்களிற் பயிர்த்தொழில்கள் முதலிய செய்துகொண்டு இருப்பது வழக்கம். வென்றுகொண்ட நாடுகளில், அவைகளுக்காக நிலைப்படைகள் (2) எனச் சில தானைகள் நிறுத்தப்பட்டிருக்கும். "கோட்டாற்று நிலைப்படை" என்பதிற் கண்டுகொள்க.

இவைகளன்றிச் சோழர்கள் பல பெருத்த கப்பற்சைந்நியங்களும் உடையராயிருந்தனர். இராஜேந்திர சோழன் காலத்தே கடாரஞ் செற்றதும், மற்றச் சோழச்சக்கரவர்த்திகள் ஆழ்கடலீழத்தைப் பல்காலும் வென்றுகொண்டதும், இவற்றைக்கொண்டேயாதலால் இவ்வமிசத்தரசர்கள் நீர்மேலும் நிலமேலும் போர் செய்வதில் மிகப் பெயர் பெற்றவர்களாவர். பிறதேசத்தரசரும் இவர்களைக் குறிக்குங்கால் வெகு

* மேல்சேவூர்.
† S. I. I. Vol. II. p. 274. ‡ Ibid.
$ I bid.
¶ I bid.
§ I bid p. 275.
‖ நாகர்கோயிற்பக்கத்துள்ள சோழபுரத்துச் சோழேசுவரன் கோயிற் சாஸனம்.
1 Body guards.
2 Armies stationed at stratagatic points.

பராக்கிரமசாலிகளான படைவீரரையுடைய சோழர்கள் என்றே கூறு கின்றார்கள். இவ்விருவகைச்சேனைபலமுமில்லாதிருப்பின், வடக்கே கங்கை, கிழக்கே கடாரம், தெற்கே ஈழம், மேற்கே சமுத்திரம் வரை இராஜேந்திரசோழன் எவ்வாறு வெல்லுதல் கூடும்?

அக்காலத்து ஒருநாட்டரசன் பிறநாட்டரசன்மீது படையெடுத்துச் சென்று அவனை முறியடித்து அவன் நாட்டைக்கொண்டபின், அவனைப் பலவகையாக நடத்துவது வழக்கம். தன்னால் வெல்லப்பட்ட பகைவனாட்டை அவனுக்கே கொடுத்து அவனைத் தன்னுளடங்கிய ஒரு சிற்றரசனாக்கிக்கொள்ளுவதும், சிற்சில சமயங்களில் தன் மக்களை அவன் குடும்பத்திற் கொடுத்தாயினும், அவன் மக்களைத் தன் குடும்பத்திற் கொண்டாயினும், உறவு கொண்டு மீளுவதுமுண்டு. அன்றி, அவனைக்காட்டிற்புகத்துரத்தி அந்நாட்டுக்கு ஒரு பிரதிநிதியை நியமித்து வருதலுமுண்டு; தவறினால் அவனை யானைக்காலாலிடறுவித்தும், தலையைக்கொய்தும் கொல்லுவது ஒரு வழி.

நாடுஜயிக்கப்பட்டுத் தம் கைவசப்பட்டதும், தோல்வியடைந்த அரசனது பெண்டு, பண்டாரம், விருது, யானை, குதிரை முதலியவற்றைப் பற்றிக்கொண்டு, ஊர்களிலநேகத்தைச் சுட்டும், அரமனைகளை இடித்தும் பயிர்களையழித்தும் பற்பல கொடுமைகளைச்செய்து, அவ்வேற்றரசன் நாட்டில், தன் வெற்றி குறிக்கும் ஜயஸ்தம்பமொன்றை நாட்டித்திரும்புவார்கள். இவ்வளவு பாடுபட்டுச் சயித்தும் அவர்கள் அந்நாட்டைத் தம்வசம் வைத்துக்கொள்ள விரும்பினவர்களாகத்தோற்றவில்லை. ஏனெனில், ஜயித்த நாட்டைத் தோல்வியடைந்தவன்கையிற் கொடுத்துமீண்டால், அவன் தன் எதிரியின் வலிகுன்றும்வரையும் திறைகட்டி வந்து, வென்றவன் தளர்வடைந்த காலத்தாயினும், அவனிறந்த பின்னாயினும், கப்பங்கட்ட மறுத்து முடிவிற் சுவாதீனமடைந்துவிடுகிறான். இதனாற்றான் ஒவ்வோர் அரசன் காலத்தும், ஈழம் வேங்கை முதலிய நாடுகள் தனித்தனி படையெடுத்து வெல்ல வேண்டி நேர்ந்தது.

இவ்வுபயோகமற்ற வழியை நீக்கிவிட்டுத் தன்கைவசமே நாடுகளை வைத்துக்கொள்ளமுயன்றவன் குலோத்துங்கன் (1). இதுபற்றியே தன்மக்களுள் ஒருவனைத் தான் அடிப்படுத்தின நாடுகட்குப் பிரதிநிதி

யாக்கி வந்தான். கோட்டாறு விழிஞம் முதலிய முக்கியமான விடங்களிலும் நிலைப்படைகளை வைத்து, பாண்டியரும் கேரளரும் தலையெடுக்காமற் பாதுகாத்து வந்தான். இவன் காலத்துத்தான் சோணாடு மிகவிரிவும், பின்னுக்கு நிலைபேறு மடைந்தது.

யுத்தத்தில் ஊர்களையழிக்கும்போது கோயில் குளங்களைத் தொடுவதில்லை. சிற்சில சமயங்களில் அவையும் அழிபடுவதுண்டு. தோல்வியடைந்த அரசனாயினும் அவன் முன்னோர்களாயினும் செய்திருக்கும் தர்மங்களுக்கும் விகாதம் செய்வதில்லை.

சோழச்சக்கரவர்த்திகளுக்குட்பட்டுச் சிற்றரசர் பலரிருந்தனர் என்று பலமுறையும் மேலே கூறியிருக்கிறோம். இவர்கள் அரசனுக்குக் கப்பம் கட்டுவதும், அவனுக்கு வேண்டிய சேனைகளைச் சேகரித்துக் கொடுப்பதும், மற்றும் அவனுக்கு எவ்வகையும் உபகாரஞ்செய்ய வேண்டியதொன்று தவிர, தந்நாட்டை எல்லாவழியாலும் சுயேச்சையாக ஆண்டுவரலாம். இவர்களும் தம் சக்கரவர்த்தியிடத்தில் மிக்க மரியாதையோடும் அன்போடுமிருந்தார்கள் என்பதிலும் சந்தேகமில்லை.

இவ்வமிசத்திற்பட்டம்பெறுவது ஜ்யேஷ்டானுக்கிரமமாகத்தான். அரசர்களும் அவர்களைச்சார்ந்த உறவினரும் அகத்தில் ஒற்றி, காரி, கிள்ளி, இருக்குவேள், என்பனபோன்ற பழந்தமிழ்ப்பெயர் தரித்திருத்தல் வழக்கம். ஆயின் உத்தியோகமுறைமையில் பராந்தகன, இராஜராஜன், இராஜாதித்தன் என்னும் வடமொழிப்பெயர்களைத் தரிப்பார்கள். அரசனிறந்தால், அவன் பாரியைகளிற் சிலர் சககமனஞ் செய்வதுண்டு.

போரில் மடிந்த வீரர்கட்கும், நிரைமீட்சி, வேட்டை முதலியவைகளில் இறந்தவீரர்கட்கும் அரசனாலாயினும் இறந்தவன் பந்துக்களாலாயினும், அவர்களுடைய ஞாபகச்சின்னமாக அவர்களைப்போல உருச்சமைத்துக் கல்லொன்று நடுவது வழக்கம்.

பண்டைக்காலத்தே தமிழைப் பாண்டியர் பரிபாலித்து வந்தனரென்று சொல்லுவது இலக்கியத்தின்வழி. சோழர்கள் தாமேமிக்க கல்விமான்களாயிருந்ததோடு*, கற்றோர்களை ஆதரித்தும் வந்தார்கள்.

---

* செந்தமிழ்த் தொகுதி. 3. பக்கம் 55.

இவர்கள் காலத்துத்தான், நம்பியாண்டார்நம்பிகள் திருமுறைகள் தொகுத்தது. சேக்கிழார் பெரிய புராணமும், புத்தமித்திரன் வீர சோழியமும், சயங்கொண்டார் பரணியும், பவணந்தியார் நன்னூலும், திருவிசைப்பாக்களும், மெய்கண்டதேவர் சிவஞானபோதமும், இன்னும் பற்பல கிரந்தங்களும் எழுதப்பட்டன. கோயில்கள்தோறும் திருப்பதிகம் பாடும்படி இவ்வரசர்கள் திட்டஞ்செய்து மானியமும் விட்டிருந்தனர். திருவாமாத்தூரில் ஒரு சாஸனம், குலோத்துங்கன் 1) அவ்வூரிலே திருப்பதிகம்பாட 16-குருடர்களை யேற்படுத்தி அவர்களுக்கு உணவுக்கும், ஆடைகளுக்கும் வேதனம் கொடுத்துவரத் திட்டஞ்செய்தானென்று கூறுகிறது. * குருடர்களுக்கு இஃதோர் நல்ல விர்த்தியன்றோ.

விஜயாலயன்முதற் குலோத்துங்கன் (1) வரையிருந்த அரசர்கள் சைவராயிருந்தனர். விக்கிரமனை அக்காலத்து வைஷ்ணவத்தில் அபிமானம் வைக்க ஆரம்பித்தான. அவன் மகன் கொடியவைஷ்ணவ விரோதி. பிற்காலத்தே, இவ்வாறு வைஷ்ணவத்திலும் சைவத்திலும் பற்றுடைய அரசர்கள் பட்டந்தரித்தார்கள். இவ்வமிசத்தார்கட்குக் குலதெய்வம் திருச்சிற்றம்பலநாதர். ஆதலால் இவ்வூர்க்கோயிலை அரசரொவ்வொருவரும் பொன்மயமாக்கிவந்தனர்.

மேற்கூறியவாறு, பலவற்றானும் நன்மை யளித்து, நாகரீகம் திருத்தி, பராக்கிரமத்தோடு ஆண்டுவந்த சோழவமிசம், குறைந்த வளவு பதினைந்துநூற்றாண்டுக்காலம், சிலகாலம் பிரபலமாகவும், சில காலம் பிறர்க்குட்பட்டும்,தொடர்ச்சியாக ஆண்டு வந்த தென்பது திண்ணம்.

சோழவமிசசரித்திரச்சுருக்கம்

முற்றிற்று.

---

* Ep. An. Rep. for 1903-4 No. 483 of 1903.

# விஷய சூசிகை.


| | | | | கி. பி. |
|---|---|---|---|---|
| சோழர்கள் பல்லவசார்வபௌமத்தினின்றும் நீங்கிச்சுவாதீனமடைந்தது உத்தேசம். | „ | „ | | 850 |
| விஜயாலயன், அவன் மகன் இவ்விருவர் ஆட்சி | | | „ | 850 - 907 |
| முதற்பராந்தகன் பட்டம் பெற்றது. | „ | „ | | 907 |
| வாணவாசரிருவரைச் சயித்து வாணகப்பாடியை இரண்டாம் பிரதிவிபதிக்குக் கொடுத்தது | „ | „ | | 911 |
| பராந்தகன் மரணமும், இராஜாதித்தன் முடிசூடியதும் | | | | 947 |
| தக்கோலத்தில் இரட்ட அரசன் கன்னரதேவனோடு யுத்தமும் அதில் இராஜாதித்தனிறந்ததும்: | | | „ | 949 |
| கன்னரதேவன் ஆட்சி உத்தேசம் | „ | „ | „ | 949 - 970 |
| கண்டராதித்தன், மதுராந்தகன், அரிஞ்சயன் முதலியோர் ஆட்சி; (இரண்டாம்பராந்தகன் சேவூரில் யுத்தஞ்செய்ததும் இக்காலத்திற்றான்) | | | „ | 970 - 985 |
| முதல் ராஜராஜன் பட்டாபிஷேகம் | „ | „ | „ | 985 |
| காந்தளூரில் கலமறுத்தது உத்தேசம் | „ | „ | | 997 |
| வேங்கைநாடு, கங்கபாடி, தடிகைப்பாடி, நுளம்பபாடி குடமலைநாடு, பாண்டிநாடு இவைகளைக்கொண்டது உத்தேசம் „ | „ | „ | „ | 1005 |
| கலவூர்ச் சண்டையில் பொய்சளவரசன் மந்திரியாகிய நாகண்ணனை தண்டநாயகன் அப்பிரமேயன் ஜயித்து இறந்தது. | „ | „ | „ | 1006 |
| இரட்டபாடி கைவசப்பட்டது | „ | „ | „ | 1009 |
| பன்னீராயிரம் பழந்தீவுகளைக்கொண்டது | „ | „ | | 1014 |
| இராஜேந்திர சோழதேவன் இளவரசுப்பட்டம் பெற்றது | | | | 1012 |
| இராஜராஜன் மரணம் | „ | „ | „ | 1014 |

இராஜேந்திர சோழதேவன் இடைதுறை நாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கை, மண்ணை, ஈழம், பாண்டிநாடு முதலியன கீழ்ப்படுத்தியது உத்தேசம் ,, 1018

இரட்டபாடியைச் சயித்ததும், முயங்கியில் ஜயசிம்மனைத் தோற்கடித்ததும் உத்தேசம் ,, ,, 1021

சக்கரக்கோட்டம், மதுரை மண்டலம், நாமணைக்கோணை, பஞ்சப்பள்ளி, மாசுணிதேசம், இந்திரரதன் செல்வம், ஒட்டவிஷயம், கோசலைநாடு, தர்மபாலனுடைய தண்டபுத்தி, இரணசூரனுடைய தக்ஷிணலாடம், கோவிந்த சந்திரனுடைய வங்காளநாடு, மஹிபாலன்யானைகள், உத்தரலாடம், கங்கமண்டலம் இவைகளைக்கொண்டது உத்தேசம் 1025

இராஜாதிராஜன் இளவரசுப் பட்டஞ் சூடியது ,, 1018

இவன் வீரகேரளபாண்டியன் தலையையும், சேரலன் சாலையையும் கொண்டதும், கம்பிலியில் சாளுக்கியர் அரண்மனையைச் சுட்டதும் உத்தேசம் 1046-க்கு முன்

இராஜேந்திரதேவன் பட்டம் பெற்றது ,, ,, 1052

ஆஹவமல்ல சோமீசுவரனைக் கொப்பத்து யுத்தத்தில் வென்றது உத்தேசம் ,, ,, ,, 1055

இராஜமஹேந்திரன் முடிசூட்டு, வீரராஜேந்திரன் பட்டம் பெற்றது, கூடல் சங்கமத்துச் சண்டை, அதிராஜேந்திரன் மகுடஞ் சூடல் முதலியன. } 1055-1070 இடையில் நடந்திருக்க வேண்டும்.

முதல் குலோத்துங்கன் பட்டாபிஷேகம் ,, ,, 1070

வயிராகரம், சக்கரக்கோட்டத்துச்சண்டைகள் உத்தேசம் 1075

பாண்டிநாடு, பொதியில், கன்னியாகுமரி, கோட்டாறு குடமலைநாடு, அடிப்படுத்தியது ,, ,, 1084

| | |
|---|---|
| கருணாகரத்தொண்டைமானால் கலிங்கஞ் செற்றது உத்தேசம் ,, ,, ,, ,, | 1069 |
| குலோத்துங்கன் மரணமும் விக்கிரமசோழன் முடிசூட்டும் } ,, ,, | 1118 |
| கொடுமையான க்ஷாமம் ,, ,, ,, ,, | 1124 |
| குலோத்துங்கன் II இராஜராஜன் II இராஜாதிராஜன் II } ,, | 1143–1178 |
| பாண்டி நாட்டு, சிங்களர் படையெடுத்து வந்து பராக்கிரம பாண்டியனுக்குதவி புரிந்ததும், ராஜாதிராஜன் II குலசேகரனுக்கு உதவிபுரிந்ததும் உத்தேசம். | 1178-க்கு [முன்னாகவேண்டும். |
| மூன்றாம் குலோத்துங்கன் முடிசூடுதல் ,, ,, | 1178 |
| பாண்டிநாட்டில் சிங்களவர் வீரபாண்டியனுக்கு உதவ வந்ததும், குலோத்துங்கன் விக்கிரமபாண்டியனுக்கு உதவி செய்ததும் உத்தேசம் ,, | 1190 |
| மூன்றாம் ராஜராஜன் முடிசூடுதல் ,, ,, | 1216 |
| மாறவர்ம்மன் சுந்தரபாண்டியன் சோணாட்டைக் கைக்கொண்டது ,, ,, ,, ,, | 1222 |
| வீரநரசிம்மன் இடையிலிருந்து சோணாட்டை இராஜராஜனுக்கு மீட்டிக்கொடுத்தது ,, ,, | 1224 |
| கோப்பெருஞ்சிங்கன் இராஜராஜதேவனைச் சேந்தமங்கலத்துச்சிறைசெய்து சோணாட்டைப் பிடித்துக்கொண்டு ஆளத்தலைப்பட்டது ,, ,, | 1231 |
| வீரநரசிம்மன் இவனைச்சிறையினின்று மீட்டு, மறுபடியும் சிம்மாசனத்திலிருத்தியது ,, ,, | 1232 |
| மூன்றாம் இராஜேந்திரன் பட்டாபிஷேகம் ,, ,, | 1246 |
| போசளவீரசோமீசுவரனை சயித்தது உத்தேசம் ,, | 1252 |
| ஜடாவர்ம்மன் சுந்தரபாண்டியன் சோணாட்டைத் தனதாக்கிக்கொண்டது உத்தேசம் ,, ,, | 1267 |

# மேனாட்டுச் சாளுக்கியர்.

(குந்தளர்.)

நூர்ம்மடி தைலன் II.

- சத்தியாசிரயன் (இராஜராஜதேவன் I காலத்தான்).
- தசவர்ம்மன்
  - விக்கிரமாதித்தன் V.
  - அய்யணன்
  - ஜயசிங்கன் II (ஜகதேகமல்லன் இராஜேந்திர சோழதேவன் I காலத்தான்)
    - ஆஹவமல்லன் சோமேசுவரன் I. (இராஜாதிராஜன், விஜயராஜேந்திரன் இவர்கள் காலத்தான்)
      - சோமேசுவரன் II.
      - விக்கிரமாதித்தன் VI (வீரராஜேந்திரன் மாப்பிள்ளை)
      - ஜயசிங்கன் III.
      - விஷ்ணுவிஜயாதித்தன்.

(விஜயராஜேந்திரன், வீரராஜேந்திரன், குலோத்துங்கன் I, இவர்கள் காலத்தார்கள்.

## சாளுக்கிய சோழவமிச விருக்ஷம்.

குலோத்துங்கன் I
1070—1118.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சோடகங்கன் (வேங்கிப்பிரதிநிதி 1084) | மும்முடி சோழன் (வேங்கி பிரதிநிதி. 1077) | வீரசோடன். (வேங்கி பிரதிநிதி- 1078-1088). | விக்கிரமசோழன். (1118 கி. பி.) | இன்னம் மூன்று மக்கள். | அம்மங்காதேவி |

குலோத்துங்கன் II. (son of வீரசோடன், per the line of descent through விக்கிரமசோழன்)

|

இராஜராஜன் II.

இராஜாதிராஜன் II

குலோத்துங்கன் III.

|

இராஜராஜன் III.

:

வீரசோழன்

:

வீரசம்பன்.

# அனுபந்தம் I.

## அபிதான விளக்கம்.

---

அகளங்கன்:—சோழசக்கரவர்த்தி; விக்கிரமசோழ தேவன்; குலோத்துங்க சோழதேவன் (1) மகன். 1118 கி. பி. யில் பட்டந்தரித்தவன். இவன் மனைவியர், முக்கோக்கிழானடிகள், திரிபுவனமுழுதுடையாள், தரணிமுழுதுடையாள். வேங்கிநாட்டுத் தெலிங்கவீமனையும், வெலநாண்டுவின் அரசன் சோடனையும் ஜயித்தான். இவ்வரசன் 18-வருடமரசாண்டவன்.

அகாலவர்ஷ கிருஷ்ணதேவன் அல்லது கன்னரதேவன்:—இரட்டவம்சத்தரசன். கி. பி. 949-ல் தக்கோலத்தில் சோழ இராஜாதித்தனுடன் பொருது முதலில் தோல்வியடைந்து, பிறகு தன்சகோதரி புருஷனும், தன் கீழ்ச்சிற்றரசனுமாகிய பூதுகன் நயவஞ்சகத்தால், மேற்படி சோழவரசனைக் கொன்றபின், சோழ இராச்சியத்தைக் கைப்பற்றி உத்தேசம் 20-வருஷகால மரசாண்டான்.

அதிராஜேந்திரன்:—சோழசக்கரவர்த்தி; வீரராஜேந்திரன் மகன். இவன் சொற்பகாலமே ஆண்டவன். குலோத்துங்கன் (1)னால் இவன் இராஜ்ஜியம் பிடுங்கிக்கொள்ளப்பட்டது.

அநபாயன்:—அபயன், ஜயதரன், இராஜேந்திரசோழதேவன் II. குலோத்துங்கன் (1) சுங்கந்தவிர்த்த சோழன். சோழசக்கரவர்த்தி. இவன் தந்தை கீழ்நாட்டுச் சாளுக்கிய இராஜராஜன் (I-ன்) புதல்வன். இவன் தாயானவள் இராஜேந்திர சோழதேவன் (I-ன்) மகளாகிய அம்மங்காதேவி. இவனுக்கு மக்கள், சோடகங்கன், மும்முடிசோழன், வீரசோடன், விக்கிரமசோழன், என்னும் தொடக்கத்தார் எழுவர்; மகள், அம்மங்கைதேவி. சோழ இராஜ்ஜியத்தை, தௌஹித்திர முறைகொண்டாடி கி. பி. 1070-ல் அபகரித்தவன். சோழர்களில் மிக்க பராக்கிரமசாலி. கலிங்கத்துப்பரணியின் நாயகனும் இவனே. இவன் உத்தேசம் 48-வருஷம் அரசாட்சி செலுத்தினான். இவன் மனைவியர், தீனசிந்தாமணியாகிய மதுராந்தகி, தியாகவல்லி, ஏழிசைவல்லபி.

அருண்மொழித்தேவர்:—சிவபாதசேகரன், ராஜாசிரயன், க்ஷத்திரியசிகாமணி, மும்முடிசோழன், இராஜராஜதேவர் I. சோழசக்கரவர்த்திகளில் ஒப்பில்லாதவர் என்று புகழ்படைத்தவர்: பராந்தகன் (II)-ன் குமாரர். இவர் தமையன், ஆதித்தன் (II). இவர் மனைவியர், தந்திசத்திவிடங்கியார், திரைலோக்கியமாதேவியார், பஞ்சவனமாதேவியார், அபிமானவல்லி, சோழமாதேவியார்; இவர் குமாரன், இராஜேந்திர சோழதேவன் I. இவர் பட்டந்தரித்தது கி. பி. 985. இவரால் ஜயிக்கப்பட்டவரசர்கள், அமரபுஜங்கபாண்டியன், கங்கநாட்டரசன், நுளம்பபாடி, வேங்கைநாடு, குடகு, இந்நாட்டதிபதிகள் முதலியோர். இவர் திருவிசலூரில் துலாபாரமபுக்கார். இவர் பெண்கள் கீழ்நாட்டுச் சாளுக்கிய விமலாதித்தன் மனைவியார் குந்தவ்வையார் (II) மாதேவடிகளும், மற்றொருத்தியும்; தஞ்சாவூர் பிரஹதீசுவரன் கோயில் கட்டினவர் இவரே. இவர் 27-வருஷம் இராச்சியபாரம் தாங்கினர்.

ஆதித்தன் I—விஜயாலயன் மகன். சோழர்களில் பிரக்கியாதிபெற்றோர்களில் முதல்வன். பல்லவசார்வபௌமத்தைத் தொலைத்து, சோழ அரசாட்சியை நிலைநிறுத்தினவன். இவன் காலத்தாலும் இவனுக்கு அநுகுணமாயுமிருந்தவன் வரகுணபாண்டின். இவனால் ஜயிக்கப்பெற்றவன் நிருபதுங்கபல்லவன்.

ஆஹவமல்லன்:—மேல்நாட்டுச் சாளுக்கியன் (குந்தளன்). சோழ இராஜாதிராஜன் (I) இராஜமஹேந்திரன், வீரராஜேந்திரன், இம்மூவர்க்கும் எதிரி. இவன் மக்கள் விக்கி யெனைப்பட்ட விக்கிரமாதித்தன். (கி. பி. 1056—1076; 1126), விஷ்ணுவர்த்தன விஜயாதித்தன் (கி. பி. 1064—1074). இவன் சோழர்களால் கம்பிலி, கொப்பம் முதலிய விடங்களில் தோல்வியுற்றான். இவன் காலம் (கி. பி. 1044—1068).

இராஜமஹேந்திர வர்ம்மன்:—இராஜேந்திர தேவன் (விஜய—)வின் மகன். சிறிது காலம் அரசாண்டவன்.

இராஜராஜதேவர் I:—அருண்மொழித்தேவர் என்னும் பெயரினடியிற் பார்க்க.

ஷ II. குலோத்துங்கன் (IIன்) மகன். இராஜராஜனுலாவின் நாயகன்.

ஷ III. குலோத்துங்கன் (IIIன்) மகன். (கி. பி.) 1216ல் பட்டந்தரித்தான். இவன் இருமுறை தன்னிராஜ்ஜியத்தை யிழந்தான். முதல் முறை பாண்டியவரசன் மாறவர்ம்மன் சுந்தரபாண்டியனாலும், இரண்டாம் தடவை கோப்பெருஞ்சிங்கதேவன் என்பவனாலும் இந் நிகழ்ச்சிகளுண்டாயின. இவன் போசளன் வீரநாரசிங்கதேவன் மாப்பிள்ளை. ஆதலால் இருமுறையும் இவனால் உதவிபுரியப் பெற்றான். (கி. பி. 1246) வரையாண்டான்.

இராஜாதித்ததேவன்:-பராந்தகன் (Iன்) முதல் மகன். இரட்டன்னர தேவன்மேல் படையெடுத்துச்சென்று தக்கோலத்தில் (கி. பி. 949-ல்) போர் புரிந்து அவனைத் தோற்கடித்தான்; அன்றிரவே பூதுகன் என்னும் கங்கவரசன் சூழ்ச்சியாற் கொல்லப்பட்டான்.

இராஜாதிராஜன் I:—(கி. பி. 1018-ல்) பட்டந்தரித்தும், (கி. பி. 1028) முதல் தான் சுயாதிகாரத்தோடு அரசாண்டான். அதுவரை இளவரசாய் இராஜேந்திர சோழன் (Iன்) கீழ் அரசு புரிந்துவந்தான். இவன் எதிரிகள், மானாபரணன், வீரசோழன், சுந்தரபாண்டியன் என்னும் பாண்டியர் மூவர்; ஆகவமல்லன், விக்கி, விஜயாதித்தன் ஆகிய மூவர் இரட்டர்கள்; விக்கிரமபாஹு, விக்கிரமபாண்டியன், வீரசலாமேகன், ஸ்ரீவல்லப மதனராஜன் என்னும் சிங்களவரசர்கள். இவனுக்கு ஜயங்கொண்ட சோழனென்னும் மறுபெயரொன்றுண்டு. இவன் (கி. பி. 1052) வரை யரசாண்டான்.

இராஜாதிராஜன் II:—இவன் காலத்துப் பாண்டிய நாட்டில் பட்டாபிஷேகத்தைக் குறித்த விவாதம் நேர, இவன், ஒருதரத்தானாகிய குலசேகர்பாண்டியனுக்கு உதவி புரிந்து மற்றவனாகிய வீரபாண்டியனைத் துரத்திவிட்டான்.

இராஜேந்திரசோழதேவன் I:—இராஜராஜதேவர் (1ன்) மகன். கங்கைகொண்டசோழன், பண்டிதசோழன், உத்தமசோழன் (II) மதுராந்தகன், விக்கிரமசோழன், முடிகொண்டசோழனென்னும் பலபெயர்களையுடையவன். இவனோர் மகாபராக்கிரமசாலி. இவன் காலத்து

வடக்கே கங்கை, தெற்கே ஈழம், மேற்கே சமுத்திரம், கிழக்கே கடாரம் (பர்மா) வரையிலும் சோழ இராஜ்ஜியம் பரவியது. இவன் மகள் குந்தவ்வை என்பாள், சாளுக்கிய இராஜராஜன் (I)-க்கு கலியாணம் செய்யப்பட்டாள். இவ்வரசன் பகைவர், இரட்டஜயசிங்கனும், கடாரத்து சங்கிராமவிஜயோத்துங்க வர்ம்மனும், வடநாட்டு இந்திரரதன், மகீபாலன், இரணசூரன், கோவிந்தசந்திரன் முதலியோருமாவர், இவன் காலம் (கி. பி. 1012—1032.)

ஷெ II. அநபாயன் என்பதனடியிற் காண்க.

ஷெ III. இராஜராஜன் (III-ன்) குமாரன். (கி. பி. 1246)-ல் பட்டஞ் சூட்டப்பட்டான். இவன் காலத்தில் சோழ ராஜ்ஜியம் ஒழிந்தது.

உத்தமசோழன்:—கண்டராதித்தன் (1) மகன். இவன் தாய் செம்பியன் மாதேவியார்; ஓர் மழவரையன் மகள். இவன் பெயர் மதுராந்தகன். இராஜராஜன் (1)-க்கு முன்னாண்டவன். இவன் குமாரர் திருவிசைப்பாவுடையாரான கண்டராதித்தர் II,

கங்கைகொண்டசோழன்:—பண்டிதசோழன், விக்கிரமசோழன், முடிகொண்டசோழன், இராஜேந்திர சோழதேவன் I. இராஜராஜ தேவன் (I) மகன். வடக்கே கங்கை, மேற்கே கடல், கிழக்கே கடாரம், தெற்கே ஈழம், வரை ஜயித்தவன். கங்கைகொண்ட சோழபுரத்தை ஸ்தாபித்தவன இவனே. இவன் மகள், சாளுக்கிய இராஜராஜன் (Iன்) மனைவி குந்தவ்வை II. இவன் பெயரன் (தௌஹித்திரன்), குலோத்துங்க சோழதேவன் I.

சுந்தரசோழன் பராந்தகன் II:—இராஜராஜ தேவன் (I) தந்தை. "பொன் மாளிகைத் துஞ்சிய தேவர்" என்னும் காரணப் பெயருடையவன். இவன் பெண்டாட்டியர் வானவன்மாதேவி முதலியவர்கள். வீரபாண்டியனோடு சேவூரில் நடந்தசண்டையில் மடிந்தான்போலும். இவன் மக்கள் ஆதித்தன் (II) இராஜராஜதேவன் (I) குந்தவ்வை I

நந்திவர்ம்மன் பல்லவமல்லன்:—பல்லவ சார்வ பௌமசக்கரவர்த்தி. நிம்பவனம், சூதவனம், சங்கரகிராமம் முதலியவிடங்களில் திரமிளரோடு தானும், தன் தண்டநாயகன் உதய சந்திரனும் பொருது

வென்றான். பரமேசுவர போத்தரையனுக்குப் பின் பட்டம்பெற்றவன். இவன் தந்தை, இரண்ய வர்ம்மன்.

**பராந்தகன் I:**—'மதுரைகொண்ட கோப்பரகேசரி.' சோழர்களில் பராக்கிரமசாலிகளுள் முதல்வன். இராஜசிம்ம பாண்டியன், ஈழத்துக் காசியபன் V. 'வைதும்பசந்தயன், வாணர்கள் இருவர், இவர்களை ஜயித்தவன். சிற்றம்பலம் பொன்வேய்ந்தவன் இவனே. இவன் மனைவியர், கோளமாதேவி முதலியோர். மக்கள், இராஜாதித்தன், கண்டராதித்தன் (I) அரிஞ்சயன், ஆதித்தனாகிய கோதண்டராமன்.

**பிருதிவிபதி I:**—கங்கவாசன்; பல்லவ நிருபதுங்கவர்ம்மன் கீழாசாண்ட சிற்றரசன். இப்பல்லவ நிருபதுங்கவர்ம்மனுக்குத் துணையாகப் பாண்டியன் வரகுணனோடு திருப்புறம்பியத்தில் யுத்தஞ்செய்து போர்க்களத்துமடிந்தான்.

**பிருதிவிபதி II:**—முதல் பிருதிவிபதியின் பெயரன்; பராந்தகன்(I) வாணர்களை சயித்து அவர்கள் நாட்டை இவனுக்குக் கொடுத்து, இவனை அன்று முதல் "செம்பியன் மாவலிவாணராயன்" என்று பெயர் தரிக்கக் கட்டளையிட்டான். இவன், பராந்தகன் (I) காலத்துக்குப்பிற்பட்டு, இரட்டகன்னரதேவனால் சோழ இராஜ்ஜியம் கைக்கொள்ளப்பட்ட பொழுது, கன்னரதேவனோடு சேர்ந்துகொண்டான். இவன் மகள் மாதேவடிகள்; இராஜாதித்தன் மனைவி.

**போசளவீரநாரசிம்மதேவன்:**—போசல வமிசத்தான். இவர்கள் இராஜதானி துவார சமுத்திரம். இவன், சோழ இராஜராஜதேவன் (III)-க்குப் பெண் கொடுத்த மாமன். பின்னேன் கஷ்டதசைகளில் மிக்க உதவிபுரிந்து 'சோழ இராஜ்ஜிய பிரதிஷ்டாபனாசாரியன்' என்னும் பட்டம் பெற்றான். இவன் மகன இராமநாததேவன்; வீரசோமேசுவரன் இவர்கள் கொள்ளிடத்தின் வடகரையில் சமயவரம் என்னும் பெயருடைய கண்ணனூரில், கோட்டை முதலிய கட்டிக்கொண்டு, அதனை இராஜதானியாக்கிச் சோழர்களுக்கு உதவிபுரிய அவ்விடம் வந்தவர்களென்று கூறிக்கொண்டு, ஆண்டுவந்தார்கள்.

**வரகுணபாண்டியன்:**-பாண்டியர்களிலோர் பராக்கிரமசாலி. பல்லவ வாசனையும் அவனுக்குத் துணையாக வந்த கங்கபிருதிவிபதி (I)-யையும்

தோற்பித்து, பின்னவனைத் திருப்புறம்பியத்திற் கொன்று தீர்த்தான். இவனே தமிழிலக்கியங்களிற் கூறப்படும் வரகுணபாண்டியன். மிக்க சிவபக்தன்.

விமலாதித்தன்:—கீழ்நாட்டுச் சாளுக்கியன். இராஜராஜனு (I)ல் ஜயிக்கப்பட்டுப் பின்பு அவன் மகள் குந்தவ்வை (I)யை, கலியாணஞ் செய்துகொண்டு தன்னுட்டைத் திரும்பக் கொடுக்கப்பெற்று, இராஜ ராஜனகீழ்ச் சிற்றரசனுக ஆண்டுவந்தான்.

---

# அநுபந்தம் II.

ஒவ்வோர் அரசர்கள் காலத்து வரையப்பட்ட சாஸனமொவ்வொன்றிலும் அவர்கள் மெய்க்கீர்த்தியை முதலில் வரைந்தே மற்ற விஷயங்களை வரைவது வழக்கம். இம் மெய்க்கீர்த்திகளிலிருந்தும் சாஸனங்களில் ஆங்காங்கு காணப்படும் சில விஷயங்களைக்கொண்டுமே நம் தேசத்துச் சரித்திரங்களை எழுதவேண்டியிருக்கிறது. ஆதலால் இம் மெய்க்கீர்த்திகளைத் தமிழ்ப்பிமானிகளும் சரித்திரவாராய்ச்சி செய்வோரும் வாசித்தல் இன்றியமையாததேயாம்.

---

## பராந்தகன் I.

"மதிரையும் ஈழமுங்கொண்ட கோப்பரகேசரிவன்மற்கியாண்டு"

## இராஜராஜன் I.

---

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச்[1] சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற்[2] சிக்களர் ஈழமண்டலமும்

---

(1) காந்தளூர்சாலை (2) முரட்டெழில்

இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்
முந்நீர்ப்[3] பழந்தீவு பன்னீரா யிரமுந்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
னெழில்வள ரூழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராஜ கேஸரி வர்மரான
உடையார் ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு—"

## பரகேசரி ராஜேந்திர சோழதேவன்.

திருமன்னி வளர இருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையும் சீர்த்தனிச் செல்வியுந்
தன்பெருந் தேவிய ராகி இன்புற
நெடிதிய[4] லூழியுள் இடைதுறை நாடுந்
தொடர்வன[5] வேலிப் * படர்வன வாசியும்
சுள்ளிச் சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையும்
நண்ணரு முரண மண்ணைக்கடக்கமும்
பொருகட லீழத் தரசர்த முடியும்
ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திர னாரமும்
தெண்டிரை ஈழ மண்டல முழுவதும்
எறிபடைக்[6] கேரளன் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவற் பல்பழந் தீவும்
செருவிற் சினவி இருபத்தொருகால்
அரசர்களை கட்ட பரசு ராமன்
மேவருஞ் சாந்திமத் தீவரண் கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்

---

(3) முன்னீர்ப்  (4) நெடுதிய
(5) தடர்வன  கடிகை வழியும்" என்றும் பாடாந்தரமுமுண்டு.
(6) எறிப்படைக்

பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்
டொளித்தசய சிங்கன் அளப்பரும் புகழொடும்
பீடியல் இரட்ட[7] பாடி ஏழரை
இலக்கமும் நவநிதிக் குலப்பெரு மலைகளும்[8]
விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமும்
முதிர்பட வல்லை மதுரை[9] மண்டலமும்
காமிடை வளை...நாமணைக் கோணையும்
வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில்வண் கீர்த்தி ஆதிநக ரவையில்
சந்திரன் றொல்குலத் திந்தி ரரதனை
விலை அமர்க்களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவையும்
கிட்டருஞ் செறிமிளை ஒட்ட விஷயமும்
பூசுரர் சேர்நற் கோசலை நாடும்
தன்ம பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரனை முரணுகத் தாக்கித்
திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்
தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகழற் சங்கு வொட்டல்மகிபாலனை
வெஞ்சமர் வளாகத்[10] தஞ்சுவித் தருளி
யொண்டிறல் யானையும் பெண்டிர்பண் டாரமும்
நித்தில நெடுங்கட லுத்திர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும்
அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசையோத் துங்க வர்மம
னாகிய கடாரத் தரசனை வாகையம்
பொருகடல் கும்பக் கரியொடு மகப்படுத்

---

(7) இறட்ட
(8) பெரும்மலைகளும்
(9) மதுர
(10) விளாகத்

தரிமையில் பிறக்கிய பருநிதிப்* பிறக்கமும்
ஆர்த்த வகனகர்ப் போர்த்தொழில் வாசலில்
விச்சா திரத்தோ ரணமும் மொய்த்தொளிர்
புனைமணிப் புதவமும் கனமணிக் கதவமும்
நிறைசீர் விசயமும் துறைநீர்ப் பண்ணையும்[11]
வன்மலையூ ரெயிற் றொன்மலையூரும்
ஆழ்கட லகழ்சூழ் மாயிரு டிங்கமும்
கலங்கா வல்வினை இலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாப்பப் பாளமும்
காவலம் புரிசை மேவுலிம் பங்கமும்[12]
விளைப்பந் தூருடை வளைப்பந்தூரும்
கலைத்தக் கோர்புகழ் தலைத்தக் கோலமும்
திதமா வல்வினை மதமா[13] லிங்கமும்
கலாமுதிர்[14] கடுந்திறல் இலாமுரி தேசமும்
தேனக்க வார்பொழில் மாநக்க வாரமும்
தொடுகடற்[15] காவற்[16] கடுமுரட் கடாரமும்
மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி வன்மரான
உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு.

## ராஜகேசரிவர்ம்மன் ராஜாதிராஜன்.

திங்களேர் தருதன் றொங்கல்வெண் குடைக்கீழ்
நிலமக ணிலவ மலர்மகட் புணர்ந்து
செங்கோ லோச்சிக் கருங்கலி கடிந்து
தன்சிறிய தாதை யுந்திருத் தமையனுங்
குறிகொள்தன் னிளங்கோக் களையும் நெறியுணர்
தன்றிருப் புதல்வர் தம்மையுந் துலறெழில்
வானவன் மல்லன் மீனவன் கங்க
னிலங்கையர்க் இறைவன்[17] பொலங்கழற் பல்லவன்
கன்ன குச்சியர் காவலரெனப் பொன்னணி
சுடர்(மணி?) மகுடஞ் சூட்டிப்படர்புக

---

* பெருக்கம். (11) பன்னையும் (12) மேவிலிம்பங்கமும்
(13) மாதமா (14) கலாமுதிர்க் (15) கடல்க்
(16) ல்க் (17) புலங்

பூாங்கவர்க் கவர்நா டருளிப் பாங்குறு
தென்னவர் மூவருள், மானாபரணன் பொன்முடி ஆனாப்
பருமணிப் பசுந்தலை பொருகளத் தரிந்து
வாரள வியகழல் வீரகே ரளனை
முனைவயிற் பிடித்துத் தந்தி வாரணக்
கதக்க ளிற்றா லுதைப்பித் தருளி
அந்தமில் பெரும்புகழ்ச் சுந்தரபாண்டியன்
கொற்றவெண் குடையுங் கற்றைவெண் கவரியும்
சிங்கா தனமும் வெங்களத் திழந்து தன்.
முடிவிழத் தலைவிரித் தடிதளர்ந் தோடத்
தொலைவில் முல்லையூர்த் துரத்தி ஒல்கலில்
வேணாட் டரசரைச் சேணாட் டொதுக்கி
மேவுபுக ழிராமகுட மூவர்கெட முனிந்து
மிடல்கெழு வில்லவன் குடர்மடிக் கொண்டுதன்
நாடுவிட் டோடிக் காடுபுக் கொளிப்ப
வஞ்சியம் புதுமலர் மலைந்தாங் கெஞ்சலில்
வேலைகெழு காந்தளூர்ச் சாலை கலமறுத்
தாஹவ மல்லனு மஞ்ச கேவுதன்
றுங்கரும் படையா லாங்கவன சேனையுட்
கண்டப் பயனும் கங்கா தானும்
வண்டமர் களிற்றொடு மடியத் திண்டிறல்
விருதர் விக்கியும் விசையா தித்தனுங்
கருமுரட் சாங்க மய்யனு முதலினர்
சமர பீருவொத் துடைய விரிசுடர்ப்
பொன்னோ டயங்கரிப் புரவியொடும் பிடித்து
தன்னா டையிற் சயங்கொண் டொன்னார்
கொள்ளிப் பாக்கை யுள்ளொரி மடுப்பித்
தொருதனித் தண்டாற் பொருகட லிலங்கையர்
கோமா விக்கிரம பாஹுவின் மகுடமு
முன்றனக் குடைந்த தென்றமிழ்[18] மண்டல
முழுவ துமிழந் தெழுகட[19] லீழம்

(18) தெண்டமிழ் (19) ஏழுகட

புக்கவிலங் கேசர னாகிய விக்கிரம
பாண்டியன் பருமணி மகுடமுங் காண்டகு
தன்ன தாகிய கன்னகுச் சியினு
மார்கலி யீழஞ் சிரிதென் றெண்ணி
உளங்கொள்தன் னாடுதன் னுறவொடும் புகுந்து
விளங்குமுடி கவித்த வீரசலா மேகன்
போர்க்களத்[20] தஞ்சிதன் கார்க்களி றிழந்து
கவ்வையுற் றோடக் காதலி யொடுந்தன்
றவ்வையைப் பிடித்துத் தாயைமூக் கரிய
ஆங்கவ மானம் நீங்குதற் காக
மீட்டும்[21] வந்து வாட்டொழில் புரிந்து
வெங்களத் துலர்ந்தவச் சிங்களத் தரசன்
பொன்னணி முடியுங் கன்னரன் வழிவந்
துரைகொ ளீழத் தரசனா கியசீர்
வல்லவ மதன ராஜன் மெல்லொளித்
தடமணி முடியுங் கொண்டு வடபுலத்
திருகாலாவதும் பொருபடை நடாத்திக்
கண்டர் தினகரன் நாரணன் கணவதி
வண்டலர் தெரியல் மதுசூ தனனென்
றெனைப்பல[22] வரையரை முனைவயிற் றுரத்தி
வம்பலர் தருபொழிற் கம்பிலி நகருள்
சளுக்கியர் மாளிகை தகர்ப்பித் திளக்கபில்
வில்லவர் மீனவர் வேள்குலர்[23] சளுக்கியர்
வல்லவர் கௌசலர் வங்கணர் கொங்கணர்
சிந்துரர் ஐயணர் சிங்களர் பங்களர்
ஆந்திரர் முதலிய வரைசரி டிறைகளு
மாறிலொன் றவனியுள் கூறுகொள் பொருள்களு
முகந்துநான் மறையவர் முகந்துகொளக்[24] கொடுத்து
விஶ்வலோ கத்து விளங்கமனு நெறிநின்

---

(20) பொருகளத் (21) மீண்டும் (22) றேனைப்பல
(23) வேழகுலர் (24) குடுத்து

றஸூமே தஞ்செய் தாரைசுவீற் றிருந்த
ஜயங்கொண்ட சோழனுயர்ந்த பெரும்புகழ்க்
கோவிராஜகேசரி வர்ம்மரான
உடையார் ஸ்ரீ ராஜாதி ராஜதேவர்க்கு யாண்டு:—

## பரகேசரி ராஜேந்திர தேவன்.

திருமாது புவியெனும் பெருமாதர் இவர்தன்
மாதே வியர்க ளாக மீதொளிர்[25]
வெண்குடை யுயர்த்துத் திண்கலி பெயர்த்ததன்
சிறிய தாதை யாகிய எறிவலிக்
கங்கை கொண்ட சோழனைப் பொங்கிகல்
இருமுடிச்[26] சோழ னென்றும் பொருமுரட்
டன்றிருத் தம்பியர் தம்முன் வென்றிகொள்
மும்முடிச்[27] சோழனைத் தெம்முனை யடுதிறற்
சோழ பாண்டிய னென்றுங் கோழிமன்
றொடுகழல் வீர சோழனைப் படிபுகழ்க்
கரிகால சோழ னென்றும் பொருதொழில்
வாள்[28] வலித் தடக்கை மதுராந்தகனை
சோழ கங்க னென்றும் தோள்வலி
மேவிகல் பராந்த தேவனைச் சோழ
வயோத்திய ராஜ னென்றும்
அயாத் தன்பொடு கருதுகா தலருள்
இந்த லம்புகழ் ராஜேந்திர சோழனை
உத்தம சோழ னென்றுந் தொத்தணி
முகையவிழ் அலங்கல் முடிகொண்ட சோழனை
இகல்விசை யாலய னென்றும் புகர்முகத்
தெழுயர் களிற்றுச் சோழகேரளனை
வார்சிலைச்[29] சோழ கேரள னென்றுந்
திண்டிறற் கடாரங் கொண்ட சோழனை
தினகரன் குலத்துச் சிறப்பமர் சோழ

---

(25) மீதொளி (26) இருமடி (27) மும்மடி
(28) வாழ் (29) சிலை

ஜனக ராஜ னென்றுங் கனகடற்
படிகொண்ட பல்புகழ் முடிகொண்ட சோழனைச்
சுந்தர சோழ னென்றுஞ் செந்தமிழ்ப்
பிடிகளிற்[30] றிரட்ட பாடிகொண்ட
சோழனைத் தொல்புவி யாளுடைச் சோழ
கன்னகுச்சிய ராஜனென்றும் பின்னுந்தன்
காதலர் காதலர் தம்முள் மேதகு
கதிராங் கனகழல் மதுராந் தகனை
வெல்படைச் சோழ வல்லப னென்று
மானைச்[31] சிலைக்கையோ ரானைச் சேவகனை
நிருபேந்திர சோழ னென்றும் பருமணிச்
சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படிமிசை
நிகழு நாளினுள் இகல்வேட் டெழுந்துசென்
றொண்டிற விரட்ட மண்டல மெய்தி
நதிகளும் நாடும் பதிகளு மநேக
மழித்தனன் வளவனென்னு மொழிப்பொருள் கேட்டு
வேகவெஞ் சளுக்கி ஆகவ மல்லன்
பரிபவ மெனக்கிதென் றெரிவிரித் தெழுந்து
செப்பருந் திறத்த கொப்பத் தகவையில்
சென்றெதி ரேன்றமர் தொடங்கிய[32] பொழுதவன்
செஞ்சர மாரிதன் குஞ்சர முகத்திலுந் (தன்முகத்திலும்)
தன்றிருத் துடையினுந் துன்றமழ் புயத்திலுந்
தைக்க வுந்தன் னுடல்களி[33] றேறிய
தொடுகழல் வீரர்கள் மடியவும் வகையா
லொருதனி[34] யநேகம் பொருபடை வழங்கியம்
மொய்ம்பமர் சளுக்கி தம்பிஜய சிங்கனும்
போர்ப்புல கேசியுந் தார்த்தச[35] பன்மனு
மானமன் னவரில்மண்டலி அசோ கையனும்
ஆனவண் புகழ்ஆளும்[36] அரையனும் தேனிவர்

(30) பிடிகவிரட்ட (31) மான (32) றென்றமர்துங்கிய
(33) னுடம்களி (34) தொருதனி (35) தார்த்தத்
(36) ஆரையனும்

மட்டவி மூலங்கல்மொட் டையனும் நிண்டிறல்
நன்னி னுளம்பனு மெனுமிவர் முதலியர்
எண்ணிலி யரைசரை விண்ணகத் தேற்றி
வன்னிய ரேவனும் வயப்படைத் தத்தனுங்
கொன்னவில் படைக்குண்ட மய்யனும் என்றின்ன
வெஞ்சன வரைசரோ டஞ்சி சளுக்கி
குலங்குலேகுலேந்து[37] தலைமயிர் விரித்து
வெந்நற்[38] றெளித்துப் பின்னுற நோக்கி
கால்பரிந் தோடி மேல்கடற் பாயத்
துரத்திய பொழுதச் செருக்களத் தவன்விடு
சத்துருபயங் கரன்கர பத்திரன்மூல
பத்திர ஜாதி பகட்டரை சநேகமு
மெட்டுநிரை பரிகளு மொட்டக நிரைகளும்
வராகவெல் கொடிமுதல் ராஜபரிச் சந்தமும்
நுப்பில்சத் தியவ்வைசாங் கப்பையென் றிவர்முதல்
தேவியர் குழாமும் பாவைய ரீட்டமு
மினையன[39] பிறவு முனைவயிற் கொண்டு
விஜையாபிஷேகம் செய்துதென் றிசைவயிற்
போர்ப்படை நடாத்திக் கார்க்கட லிலங்கையில்
விறற்படைக் கலிங்காமன் வீரசலாமேகனைக்
கடகளிற் றொடுமகப்படக் கதிர்முடி கடிவித்
திலங்கையர்க்[40] கிறைவன் மானு பரணன்
காத லிருவரைக் களத்திடைப் பிடித்து
மாப்பெரும்புகழ்மிகவளர்த்தகோப்பரகேசரிபன்மரான
உடையார் ஸ்ரீராஜேந்திர தேவர்க்கு யாண்டு.

---

## ராஜகேசரி ராஜமகேந்திர தேவன்.

திருமகள் விளங்க விருநில மடந்தையை
ஒருகுடை நிழற்கீழ் இனிதுநிற்பப் புணர்ந்து
தருமநெறி நிற்ப மனுநெறி நடாத்திய

---

(37) குலகுலகுலேந்து
(38) வென்னுற்
(39) மேனையண
(40) இலங்கையிற்

கோவிராஜ கேசரி வர்ம்மரான
உடையார் ஸ்ரீ ராஜமகேந்திர தேவர்க்கு யாண்டு.

## வீரராஜேந்திர தேவன்.

திருவளர் திரள்புயத் திருநில வலயந்
தன்மணிப் பூணெனத் தாங்கப் பன்மணிக்
கொற்றவெண் குடைநிழல் குவலயத் துயிர்களைப்
பெற்ற தாயினும் பேணி மற்றுள
வறைகழ லரையர்த னடிநிழ லொதுங்க
வுறைபிலத் துடைகலி ஒதுங்க மிறைசெய்து
விரைமலர்த் தெரியல் விக்கலன் றன்னொடு
வரிசிலைத் தடக்கை மாசா மந்தரைக்
கங்கபாடிக் களத்திடைநின் றுந்
துங்கபத் திரிபுகத் துரத்தி யாங்கவர்
வெங்கைநன் னாட்டிடை மீட்டுமவர் விட்ட
தாங்கரும் பெருவலித் தண்டுகெடத் தாக்கி
மாதண்ட நாயகன் சாமுண்ட ராயனைச்
செற்றவன் சிரத்தினை யறுத்து மற்றவ
னொருமக ளாகிய இருகையன் றேவி
நாகலை யென்னுந் தோகையஞ் சாயலை
மூகத்தொடு மூக்குவே றுக்கிப் பகைத்தெதிர்
மூன்றாம் விசையினு மென்றெதிர் பொருது
பரிபவந் தீர்வனெனக் கருதிப் பொருபுனல்
கூடல் சங்கமத் தாகவ மல்லன்
மக்களாகிய விக்கலன் சிங்கண
னென்றிவர் தம்மொடு மெண்ணில்சா மந்தரை
வென்றடு துசிமூனை விட்டுத் தன்றுனை
மன்னருந் தானும் பின்னிடுந் திருந்து
வடகட லென்ன வகுத்தவத் தானையைக்
கடகளி றென்றுங் கலக்கி அடல்பரிக்
கோசல சிங்கனைக் கொடிபட முன்னல்
துசிவெங் களிற்றொடு துணித்துக் கேசவ